Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
• INDEPENDENTLY OWNED AND OPERATED
HOMELIFE HIGHER STANDARDS
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

17 வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 17 | பாலம் 21 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 01, 2007



நிலமாற்று வரியின் அதிகரிப்பு 07



இடுகுறியும் காரணமும் 15



இருள்நீங்கி அகிலம் சிறப்புற தீபாவழி நல் வாழ்த்துக்கள்

# கனடிய மத்திய அரசின் இடைக்கால வரவுசெலவுத்திட்டம்

ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி பழமைவாதக்கட்சி அரசின் நிதி அமைச்சரான Jim Flaherty தனது இடைக்கால வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தார். இவ்வரவு செலவுத்திட்டத்தில் இனிவரும் ஐந்து ஆண்டுகளில் $4,500 கோடி டொலர் தனிநபர் வருமானவரி விலக்கும் (personal tax) $1,500 கோடி டொலர் கூட்டுறவு நிறுவன (corporate tax) வரிவிலக்கும் அமல்படுத்தப்பட உள்ளது. இவ்வரவு செலவு திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்களைப் பார்ப்போம்.

1. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரியான GST ஒரு வீதத்தால் குறைத்து 5% வரியாக 2008 ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதியிலிருந்து அமல்படுத்தப்படும்.

2. தனிநபர் வருமான வரி (personal tax) 2007ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதியிலிருந்து 15.5% இல் இருந்து 15% ஆக குறைக்கப்படும்.

3. தனிநபர் வருமானவரி விலக்குத் தொகை 2007 ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதியிலிருந்து கிட்டத்தட்ட $700 டொலரால் அதிகரிக்கப்பட்டு $9,600 ஆக உயர்த்தப்படும். இவ்வரிவிலக்கு தொகை 2009 ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதியிலிருந்து $10,100 ஆக உயர்த்தப்படும்.

4. இவ்வரவு செலவுத்திட்டத்தால் வந்த மேலதிக வருமானத்தால் கனடிய அரசின் கடனில் $1,000 கோடி டொலர் கட்டப்பட்டு குறைக்கப்படும்.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

# இலங்கையில் அதிகளவு சித்திரவதைகள் - ஐ.நா. குற்றச்சாட்டு

உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் இலங்கைக்கு ஒரு வாரகால பயணத்தை மேற்கொண்ட ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் சித்திரவதைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் (Special Rapporteur) மன்பிரட் நொவாக் இலங்கையில் அதிகளவு சித்திரவதைகள் நடைபெறுவதாக குற்றம் சாட்டியுள்ளார். அதே சமயம் இதற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கை அரசாங்கத்திடம் அவர் வேண்டுதல் விடுத்துள்ளார். ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர் ஸ்தானிகர் லூயிஸ் ஆர்பரின் அலுவலகத்தினூடாக மன்பிரட் நொவாக் இது தொடர்பான அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

விடுதலைப்புலிகளுடனான மோதல்களின்போது பாதுகாப்புப் படையினரால் அதிகளவில் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதாக கூறும் நொவாக் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தனது சிபார்சுகளையும் பட்டியலிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள உத்தியோகபூர்வ அமைப்புகளுக்கு சித்திரவதைகள் தொடர்பாக அதிகளவிலான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அத்துடன் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதிக எண்ணிக்கையான புகார்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவற்றுக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இலங்கையில் பரந்தளவில் சித்திரவதைகள் இடம்பெறுவது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" என்றும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் நீண்டகாலமாக இடம்பெறும் மோதல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பான சவால்களை இலங்கை அரசாங்கம் எதிர் கொள்கின்றது. ஆனால் நாட்டின் பயங்கரவாத விசாரணை திணைக்களத்திற்கு எதிராக சித்திரவதைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரணை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் சித்திரவதை தொடர்பான குற்றவியல் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். இதனை மேற்கொள்வதற்கான ஒரு வழிமுறையாக, தடுத்து வைக்கப்படுவோர் முறையற்ற ரீதியில் நடத்தப்படுதல் மற்றும் சித்திரவதை விவகாரங்களைக் கையாள்வதற்கு விசேட நீதிமன்றங்கள் உருவாக்கப் பட வேண்டும்.



அதேசமயம், சுயாதீன அதிகார அமைப்பினூடாக சித்திரவதைகள் மற்றும் முறையற்ற ரீதியில் நடத்தப்படுதல் தொடர்பான குற்றச் சாட்டுக்கள் குறித்து முறையானதும் முழுமையானதுமான விசாரணைகள் நடத்தப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும். மேலும் சித்திரவதை மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக சிறைச்சாலைகளில் சுயாதீனமாக முறையிடத்தக்க ஏற்பாட்டு முறைமையை உருவாக்க வேண்டும். மன்பிரட் நொவாக் மரண தண்டனையை நீக்கவேண்டும் அல்லது மரண தண்டனையை சிறைத்தண்டனையாக மாற்றவேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார். இதேவேளை, வழக்கறிஞர் சமூகமளித்திராமலும் நீதிபதி முன்னிலையில் உறுதிப்படுத்தப்படாததுமான ஒப்புதல் வாக்கு மூலத்தை ஒரு நபருக்கு எதிரான சாட்சியமாக ஏற்றுக் கொள்ளாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பல சிபார்சுகளை முன்வைத்திருக்கின்றார்.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Real Education
உண்மையான கல்வி
அறிவுத்திறன் + பண்பு
Focus, Memory, Reading Skill, Listening Skill, Presentation Skill, Goal Setting, Self-Confidence, Self - Discipline - Patience - Obedience, Positive thinking, Team Work, Winning Attitude, Leadership...
Tel.: 416-725-5112
KG Master www.kgmaster.com
Education = Intelligence + Character

• 1ST, 2ND, 3RD MORTGAGES
• BAD CREDIT
• UNEMPLOYED
• POWER OF SALE
• SELF-EMPLOYED
• CAR & TRUCK LOANS
(instant approve)
Chandran Ponnampalam
Senior Mortgage Consultant
Trillium Mortgage
Direct: 416.666.5540 Office: 416.279.1159

துரித பணமாற்றுச் சேவை
• 49 வருடங்கள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 16 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM Veedu Mortgages Inc.

Buy & Sell Residential and Commercial
Raj A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3

கதிர்
GTA Square SOLD OUT ! Only 12 units left
Middlefield & finch
GTA SQUARE
Great Opportunity
Don't Miss Out
24 hr. 416 856 6900
Office 416 321 6969
Call me for a change
Kathir S Kathirgamanathan P. Eng.
kathirs@rogers.com Sales Representative
HomeLife / GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, #206, Toronto
Independently owned and operated

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

கனடிய டொலரின் மதிப்பு கூடக்கூட கனடாவில் வேலை வாய்ப்புக்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே Bank of Canada வட்டியைக் குறைக்க வேண்டும் என்று கூறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. சில அரசியல் கட்சிகளும் வட்டியைக் குறைத்து கனடிய டொலரின் மதிப்பு உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறத் தலைப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் Bank of Canada வட்டியைக் குறைக்க வாய்ப்பு உள்ளதாகவே தோன்றுகின்றது. ஆனால் வங்கியின் கவர்னரோ இன்று வரை அதைப்பற்றி ஒன்றுமே பேசவில்லை.

திரும்பத்திரும்ப வட்டியைப் பற்றி எழுதும் போது விஞ்ஞானி ஐன்ஸ்டனைப் பற்றிய ஜோக் ஒன்றுதான் நினைவுக்கு வருகின்றது. ஐன்ஸ்டன் இறந்த பின் சொர்க்கத்துக்கு சென்றார். அங்கு அவருக்கு சில நபர்களை அவ்வுலக வாசிகள் அறிமுகப்படுத்துகின்றனர். முதலாமவரைச் சுட்டிக்காட்டி இவருடைய அறிவுத்திறன் மிக அதிகம். இன்டெலிஜன்ட் கோஷண்ட் 200 என்கிறார்கள். அவரைப் பார்த்து ஐன்ஸ்டன் நாம் கணிதத்தைப் பற்றி விவாதிக்கலாமே என்கிறார். இரண்டாமவரின் அறிவுத்திறன் 180. அவரைப் பார்த்து பௌதிகத்தைப் பற்றி விவாதிப்போம் என்கிறார். மூன்றாமவரின் அறிவுத்திறன் 100 என்கிறார்கள். அவரிடம் நாம் 'கலை'களைப் பற்றி பேசலாமா? என்கிறார். நான்காவது நபருக்கு மற்ற எல்லோரையும் விட அறிவுத்திறன் குறைவு, வெறும் 80 தான் என்கிறார்கள். உடனே ஐன்ஸ்டன் அவரைப் பார்த்துக் கேட்டாராம். 'இன்றைக்கு வட்டி வீதங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?' சரி வட்டி வீதத்துக்கு வெளியே வருவோம். 2007 முடிய இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. எனக்கு இப்போது வருமான



## பெரி. முத்துராமன்

வரியைப் பற்றிய நினைவு வந்து விட்டது. வேறுபட்ட முதலீடுகளில் பணம் போடும் போது கிடைக்கும் வருவாய்க்கு ஒரே மாதிரியாக வரி செலுத்துவதில்லை. சிலவற்றிற்கு நடைமுறையில் குறைவாக வரி கொடுக்கின்றோம்.

சில உதாரணங்களைக் கூறினால் வாசகர்களுக்கு உபயோகமாக இருக்கும்.

வங்கியில் ஜிஐசி என்று சொல்லப்படும் நீண்ட காலவைப்பில் $800 வட்டியாக கிடைத்தது என்று வைத்துக் கொள்வோம். உங்களின் பெடரல் வரி வீதம் 30 என்றும், ஒன்ராரியோ மாநில வரிவீதம் 15 என்றும் கொள்வோம். இந்த அநுமானத்தின் அடிப்படையில் பார்த்தால் நீங்கள் கட்ட வேண்டிய மொத்த வரி பெடரலுக்கு $240. ஒன்ராரியோ மாநிலத்துக்கு $120. ஆக $360 வரி நீக்கிக் கிடைக்கும் நிகர வட்டி 800 - 360 = 440 டொலர்கள் மட்டுமே. ஒருவர் கூடுதலாக 800 டொலர் சம்பாதிக்கிறார். அவருடைய வரிவீதங்கள் மேற்குறிப்பிட்ட 30%, மற்றும் 15% என்று வைத்துக் கொண்டாலும் அவர் கட்ட வேண்டிய வரி 360 தான். ஆக வட்டியிலிருந்து கிடைக்கும் பணம், சம்பாத்தியத்துக்கு ஆளாகும் அதே வட்டி வீதத்துக்கு ஆளாகின்றது.

கனடிய கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்து, டிவிடெண்ட் பெறும் போது கட்டும் வட்டி முன்னர் பார்த்ததை விட குறைவாக உள்ளது. மேலும் வரிப்பற்று அல்லது ரக்ஸ் கிரிடிட்டும் கிடைக்கும் பெறுமதி கூடுதலாக இருக்கும்.

இதே 800 டொலர்கள் டிவிடெண்ட் ஆக கனடியக் கம்பெனிகளிலிருந்து பெறப்பட்டது என்று வைத்துக் கொள்வோம். வரி வீதங்களில் (30%, 15%) மாற்றம் ஒன்றுமில்லை. அப்படியானால் கட்ட வேண்டிய வரி 226.20 டொலர்கள். கணக்கு எப்படி என்று தெரிந்து கொள்ள விரும்புவர்களுக்கு கணக்குச் செய்த முறையைக் கீழே தருகின்றேன்.
டிவிடெண்ட் ஐ முதலில் 45% சதவீதம் கூடுதலாகின்றது. 800 x 1.45 - $1,160.

1160 ல் 30% + 15% (348 + 174) வரி = 542
19% பெடரல் கிரடிட் 220.40
6.5% ஒன்ராரியோ கிரடிட் = 75.40
நிகரவரி (522 - 220.40 - 75.40) = 226.20

பங்குச் சந்தையில் பங்குகளை வாங்கி விற்கும் போது கபிற்றல் கெயின் (Capital Gain) என்று சொல்லப்படும் லாபமோ, நட்டமோ வருகின்றது. ஒருவருக்கு அத்தகைய இலாபம் - Capital Gain - $1000
நட்டம் Capital less - $200. நிகர இலாபம் $800 என்று வைத்துக் கொண்டால் செலுத்த வேண்டிய வரி 180 டொலர்கள் மட்டும்தான். கணக்கு கீழே தரப்பட்டுள்ளது. இலாபத்தில் பாதியே வரிக்காளகின்றது. 800 x 50% = $400
வரி, (400 x 30% = 400 x 15%) = $180.

இந்த 50 சதவீத வரிச் சலுகை கனடிய முதலீடுகளில் கிடைக்கும் இலாபத்துக்கு மட்டுமே தரப்படுகின்றது. இப்போது மேல் பார்த்த விபரங்களை அட்டவணைப்படுத்தி எதில் முதலீட்டாளருக்கு அதிகப் பணம் கிடைக்கின்றது என்று பார்ப்போம்.

கிடைத்தவர செலுத்தியவரி
உங்களுக்குகிடைத்தது.
வட்டி $800 $360 $440
டிவிடெண்ட் $800 $226.20 $573.80
கேபிடல் கெய்ன் $800 $180
$620.00

உங்கள் முதலீடுகள் எத்தகையவை என்பதைப் பொறுத்து நீங்கள் செலுத்த வேண்டிய வரிகளும் மாறுகின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களுக்குச் சந்தேகங்கள் இருந்தால் முதலீடு செய்யுமுன் உங்கள் நிதி ஆலோசகரிடம் ஆலோசனை பெறுங்கள். இக்கட்டுரை ஆசிரியரிடம் நிதி ஆலோசனை பெற விரும்பினால் தொடர்பு கொள்ள வேண்டிய ஸ்கோஷியவங்கி தொலைபேசி எண் 416.439.3040 Ext 2010



# கனடிய மத்திய அரசின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி



5. கூட்டுறவு நிறுவனங்களின் (corporate tax) வரி 1% ஆல் குறைக்கப்பட்டு 2008 ஆண்டிலிருந்து 19.5% ஆக்கப்படும். இது 2012 ஆம் ஆண்டில் 15% ஆக குறைக்கப்பட உள்ளது.

6. சிறு வியாபாரிகள் கட்டும் வருமானவரி 2012 ஆம் ஆண்டில் 11% ஆக குறைக்கப்படும்.

இவ்வரவு செலவுத் திட்டத்தில் கொண்டு வரப்பட்ட வரிவிலக்கால் $30 ஆயிரம் டொலருக்கு உள்பட்ட குடும்ப வருமானம் உள்ளவர்கள் $180 டொலரும், $60 ஆயிரம் டொலருக்கு உள்பட்ட குடும்ப வருமானம் உள்ளவர்கள் $400 டொலரும் ஒரு இலட்சம் டொலருக்கு உள்பட்ட குடும்ப வருமானம் உள்ளவர்கள் $600 டொலரும் 2008 ஆம் ஆண்டில் மேலதிகமாக மிச்சம்பிடிப்பார்கள்.

இவ் அரசு எதிர்பார்த்தபடி கூட்டுறவு நிறுவனங்களின் வருமானவரி 15% ஆக 2012 ஆம் ஆண்டில் குறைக்கப்பட்டால் உலகிலுள்ள தொழில்துறையிலும் பொருளாதாரத்திலும் முன்னேறிய நாடுகளில் குறைந்த கூட்டுறவு நிறுவன வருமானவரி உள்ள நாடாக கனடா திகழும்.

# நிதிமூலதனமும் காப்புறுதியும்

எமது நீண்ட கால ஓய்வு கால வாழ்க்கைத் திட்டத்திற்கு தற்போது ஒரு முக்கிய இடம் கொடுக்க வேண்டியுள்ளது. ஏனெனில் சராசரி ஆண்மகனின் வாழ்க்கை காலத்தை எடுத்தால் 81 வயது வரையும் (50% Chances) அதிலும் சிலர் 89 வயதுவரையும் (25% Chances) வாழ்க்கை நடத்தக் கூடியதாக உள்ளது.

ஒரு பெண்மணியின் சராசரி வயது 85 ஆகவும் (50% Chances) அதிலும் சிலர் 92 வயது வரையும் (25% Chances) வாழக்கூடயதாக உள்ளது. இதற்கு காரணம் உயர் வாழ்க்கைத் தரம், அதிசிறந்த மருந்து வகைகளும் நோய்களைக் கண்டு பிடிக்கும் வழிமுறைகளும் ஆகும்.

ஆகவே ஒரு மனிதன் நீண்ட காலம் வாழ்வதாயின் அதற்கேற்ப சேமிப்பும் காப்புறுதியும் அவசியமாகும். அடுத்த இதழில் சேமிப்பையும் காப்புறுதி பற்றியும் ஆராய்வோம்.

- Jey Ahamparam, RBC Insurance


மூதறிஞர் கந்தமுருகேசனார் கனடாத் தமிழ்ப் பண்பாட்டு இணையம்
சிறப்போடு நடாத்தும்

## பொதுஅறிவுத் திறன் போட்டி 2007

போட்டி நடைபெறும் இடம் இசுக்காபுரோ நகர மண்டபம்
நாள்: டிசம்பர் 8 ஆம் நாள் சனிக்கிழமை காலை 9:00 மணி

2002 ஆண்டுக்கு பின் பிறந்தோர் 2000 - 2001 ஆம் ஆண்டு
1998 - 1999 ஆம் ஆண்டு 1996 - 1997 ஆம் ஆண்டு
1992 - 1995 ஆம் ஆண்டு 1988 - 1991 ஆம் ஆண்டு
1987 - அதற்கு முதற் பிறந்தோர் அனைத்தும் எழுத்துப்போட்டி ஆகும்.

போட்டியில் பங்கு பற்ற அழைத்து பதிவு செய்யுமாறு அன்போடு அழைக்கின்றோம்.
தொலைபேசி எண் : 905-654-5446 / சிறப்பு பரிசில் கந்தமுருகேசனார் விழாவில் வழங்கப்படும்.



விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.


**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.


**Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

**Kanthan: 416.291.3997**





• No Spraying • No Smelling • No Moving

# நாம் வாழத் தாம் வீரகாவியமான வீரபுருஷர்கள்

“செய் அல்லது செத்துமடி” என்றார் விவேகானந்தர். வாழ்க்கை என்பது செயல்பூர்வமானது. கடந்த ஒக்ரோபர் 22 ஆம் நாள் தம் 21 இன்னுயிர்களை கொடுத்து, தமிழ் ஈழ விடுதலைக்காக சரித்திரம் படைத்த கரும்புலிகளின் சாதனை ஒரு வீரகாவியம் என்று சொல்வதே சாலப்பொருந்தும்.

இலங்கையில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்களின் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முயற்சி செய்யப்போவதில்லை என்பதை நன்கு உணர்ந்த தீர்க்க தரிசி எங்கள் பிரபாகரன்.

அவரது ஆணையின் கீழ் எல்லாளன் படை 18 போர் விமானங்களுக்கு மேல் துவம்சம் செய்த செய்தி, உலகத்தமிழர் அனைவரது உள்ளங்களிலும் பாலை வார்த்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த சாதனை வீரர்களின், காவிய நாயகர்களின் படங்களை வன்னிமக்கள் பட்டிதொட்டி, தெரு, திண்ணை எங்கெல்லாம் வைத்து, வாயார, நெஞ்சார வாழ்த்தி, கண்ணீர் அஞ்சலி செய்கின்றனர்.



போராடுவதற்கு தேகரீதியான துணிவைக்காட்டிலும் மனோரீதியான துணிவு மிக அவசியமானது. மனஉறுதி, எதையும் சாதிக்கும் சத்தியமும், நேர்மையும் உள்ளவன் எதைக் கண்டும் அஞ்சுவதில்லை. மன உறுதி உள்ளவனிடம் வரும் அசாதாரணத் துணிச்சல், அவனை எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையிலிருந்தும் நிலைகுலை யாது காப்பாற்றிவிடும். வாய்வீரம் காட்டிய சிங்கள தேசத்துக்கு செயல்மூலம் பதில் கொடுத்த மறவர்கள் தான் இந்த மாவீரர்கள். இலட்சோப இலட்சம் தமிழ்மக்களின் கண்ணீரால், தவத்தால், வரத்தால் உருவான வேள்வித்தீயில் இருந்து உதித்த செம்மல்கள் இவர்கள்.

கரும்புலி வீரர்களின் உடலில் ஓடும் இரத்தமும் அவர்களது மூச்சும் தமிழ் இன சுதந்திர வேள்வியில் இன்று சங்கமமாகி விட்டது.

தாம் வாழாது, தம் உயிரை துச்சமாக மதித்து, பிறர்வாழ இன்னுயிர் ஈந்த இக்கரும்புலி வீரர்களை, வீராங்கனைகளை இன உணர்வுள்ள தமிழினம் என்றும் மறக்காது. மாவீரர்கள் மடிவதில்லை. அவர்கள் மரணத்தை வென்றவர்கள். எங்கள் இதயங்களில் என்றும் வாழ்பவர்கள்.

அவர்களை நினைத்து, மலர்கொண்டு இறைவன் திருப்பாதங்களை வணங்கி, அவர்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

**கந்தையா சண்முகம்**
**இளைப்பாறிய அதிபர்**

# கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு காப்புறுதி நிவாரணம்

## வினா விடை தொடர் - 7 -

1. **“பாரிசவாதம்”** (Paralysis) **என்னும் கொடிய நோய் எந்த வரைவிலக்கணத்தின் அடிப்படையில் காப்புறுதி திட்டத்தில் நட்டஈடு வழங்கும் நோயாக கருதப்படுகின்றது?**

‘பாரிசவாதம்’ என்பது காப்புறுதி கம்பனி நட்டஈடு வழங்கும் கொடிய நோய்களில் ஒன்றாகும். கை, கால் ஆகியவற்றின் செயல்பாடு என்பது இங்கு இந் நோயுற்றவர்களுக்கு முற்றாக இழக்கப்படுகின்றது.

காப்புறுதி கம்பனிகள் இந்நோய் தொடர்பாக பின்வருமாறு ஆங்கிலத்தில் வரைவிலக்கணப்படுத்தி, இந் நோய்க்கு நட்டஈடு வழங்க வேண்டுமாயின் ஒரு முக்கிய நிபந்தனை ஒன்றினையும் குறிப்பிட்டுள்ளனர்.

‘Parslysis’ means the total loss of voluntary movement of both Legs, both Arms or One Leg, One Arm as a result of injury or disease of the nerve supply to the corresponding limbs.

The survival period for this insured condition is 90 days during the survival period, you must experience continuous paralysis with no sign of improvement.

பாரிசவாத நோய்க்கு உட்பட்டவருக்கு ஒரு கால், ஒரு கை அல்லது இரு கால்கள், இரு கைகள் என செயல் இழந்து போகலாம்.

ஆனால் காப்புறுதி கம்பனியின் நட்டஈடு வழங்கும் வரைவிலக்கணத்தின்படி இந்நோய் ஏற்பட்டு 90 நாட்களுக்குள் இந்நோயில் இருந்து குணமாகும் நிலைமையோ அல்லது குணமாகும் சைகையோ தொடர்ச்சியாக எதுவும் இல்லை என்பது நிரூபிக்கப்படும் போதே இந்நோயினை கொடிய நோய்களில் ஒன்றாக கருதி காப்புறுதி கம்பனி நட்டஈடு வழங்கும்.

இந்நோய் குணமாகும் நிலைமை இருந்தால் இவ் வரைவிலக்கணத்தின்படி நட்டஈடு கிடைக்கமாட்டாது. பொதுவாகவே கொடிய நோய்களுக்கான காப்புறுதி திட்டத்தில் மருத்துவர்களினால் நோய் ஒன்று நட்டஈடு வழங்கும் வரைவிலக்கணத்தினுள் உறுதி செய்யப்பட்டு முப்பது நாட்களின் பின்பே நட்டஈடு வழங்குவது வழமையாகும். அதாவது கொடிய நோய் என்பது நட்டஈடு வழங்கும் காப்புறுதி கம்பனியின் வரைவிலக்கணத்தினுள் ஒரு கொடிய நோயாக இருத்தல் வேண்டும். இக்கொடிய நோய் உறுதி செய்யப்பட்டு முப்பது நாட்களுக்குள் உயிர் இழப்பு நடந்தால் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நட்டஈடு தொகை பெறும் வாய்ப்பு இல்லை.

இதுவரை காலமும் காப்புறுதிக்காக செலுத்திய பணத்தினை மட்டும் குடும்பத்தவர்களுக்கு திருப்பி வழங்குவார்கள்.

இங்கு ‘பாரிசவாதம்’ என்னும் கொடிய நோய் வந்து நட்டஈடு கோர முயலும் போது நோய் உறுதி செய்யப்பட்டு முதல் 90 நாட்களும் எதுவிதமான குணமாகும் நிலை இல்லை என்பது நிரூபிக்கப்படல் வேண்டும் என்பது இங்கு உள்ள ஒழுங்கு விதியாகும்.


சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான
ஆலோசனைகளுக்கு:
416.321.0999


**சிறு நீரகங்களின் செயல்படாத தன்மை** (Kidney Failure) **என்பது எந்த வரைவிலக்கணத்தின் அடிப்படையில் காப்புறுதி கம்பனியின் நட்டஈடு வழங்கும் நோயாக கருதப்படுகின்றது?**

இங்கு காப்புறுதி கம்பனியின் கொடிய நோய்களுக்கான நட்டஈடு வழங்கும் வரைவிலக்கணத்தின்படி, குருதியில் இருந்து சிறுநீரை வடித்து எடுக்கும் இரு சிறுநீரகங்களும் செயல்படாத தன்மை இருத்தல் வேண்டும். எத்தனையோ பேர் ஒருசிறு நீரகத்துடன், ஒரு சிறுநீரகம் செயல்படாத நிலையில் வாழ்கின்றனர்.

இத்தகைய ஒரு சிறுநீரகம் மட்டும் செயல்படாது, பாழாகி, இயங்காத நிலைமையில் இன்னொரு சிறுநீரகத்துடன் வாழ்பவர்கள் இந்நோயின் வரைவிலக்கணத்தினுள் காப்புறுதி திட்டத்தில் இருந்து நட்டஈடு பெற உரித்து உடையவர்கள் ஆகமாட்டார்கள். இத்தகைய ஒரு சிறுநீரகம் இயங்காதவர்களுக்கு நட்டஈடு கிடைக்கமாட்டாது. இதனை காப்புறுதி கம்பனியினர் ஆங்கிலத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். “Kidney failure means end stage renal disease resulting in chronic irreversible failure of both kidneys to function.

Regular haemodialysis, peritoneal dialysis or renal transplantation must be initiated as a result ot the kidney failure.

சிறுநீரகம் செயல்படாத நிலைமையில் நட்டஈடு பெற தகைமையுடைவர் பின்வரும் இரு நிலைமைகளில் ஒன்றாக இருப்பார்.

1. இரு சிறுநீரகமும் செயல்படாத நிலையில் இருந்தால் ஒழுங்காக தவறாக சிறுநீரக சுத்திகரிப்புக்கு (Dialysis) செய்பவராக இருத்தல் வேண்டும்

அல்லது

2. எவராவது ஒருவரின் சிறுநீரகத்தினை தானமாக பெற்று சத்திரசிகிச்சையில் பொருத்தி வாழ்பவராக இருத்தல் வேண்டும்.

மேல்குறிப்பிட்ட இரு நிலைப்பாடுகளில் ஏதாவது ஒரு நிலையில் இருப்பவர் மட்டும் நட்டஈடு பெற தகைமை உடையவர் ஆவார். (தொடரும்)




# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபடும் தீப ஆவலித் திருநாள்

தைப்பொங்கலும், தீபாவளியும் இந்துக்களுக்கு விசேட பண்டிகைகளாகும். இந்த இரு பண்டிகைகளும், ஒளியைப் போற்றிக் கொண்டாடும் திரு நாட்களாகும். ஒளிமுதலான சூரிய பகவானுக்கு பொங்கி படைத்து நன்றி செலுத்தும் நாள் பொங்கல் திருநாளாகும். ஒளியைப் பரப்பி இருளையகற்றி இடத்தையும் பொருள்களையும் விளங்க வைக்கும் விளக்கினை வரிசையாக வைத்து வழிபடும் நாள் தீபாவளியாகும். தீப ஆவலி என்பது தீபங்களின் வரிசை எனப் பொருள்படும்.




**நா.க.சிவராமலிங்கம்**

ஐப்பசி மாத அமாவாசைக்கு முன் திரயோதசி, சதுர்த்தசி மற்றும் அமாவாசையை அடுத்த கார்த்திகை சுக்கிலப்பிரதமை இந்நான்கு நாட்களும் தீபாவளி சம்பந்தப்பட்ட நாட்களாகும். இந்துக்கள் அனைவரும் இத்தினத்தைக் கொண்டாடுகிறார்கள். மிகப் பழங்காலம் தொட்டே இந்துக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துள்ள கொண்டாட்டம் இதுவாகும்.

திரயோதசியையும் சதுர்த்தசியையும் பிரதானமாகக் கொண்டு அதில் தீபாவளியைக் கொண்டாடுவர் தமிழர் முதலிய தென்னாட்டவர். இச்சதுர்த்தசி தினத்தை நரக சதுர்த்தசி என அழைப்பர். விடிய நான்கு நாழிகையில் சதுர்த்தசி இருக்கும் நாளில் அருணோதய காலத்தில் நரக சதுர்த்தசி ஸ்நானம் விதிக்கப்பட்டுள்ளது. அருணோதய காலத்தில் விழித்தெழுந்து தீபங்களை ஏற்றி வைத்து அதில் லட்சுமியை தியானிக்க வேண்டும். எண்ணெய், பழம், வெற்றிலை, பாக்கு, தின்பண்டங்கள் இவற்றை லட்சுமி நாராயணருக்கு நிவேதனம் செய்ய வேண்டும். லட்சுமி அருள் பெறுதற்காக, தாம்பூலம் தரித்து மனையாளின் கையால் அல்லது தாயாரின் கையால் தலையில் எண்ணெய் தேய்த்துக் கொள்ள வேண்டும்.

அந்த எண்ணெய்யில் லட்சுமி வாசம் செய்வதாகவும் அன்று நீராடும் வெந்நீரில் கங்கை வசிப்பதாகவும் புராணங்கள் கூறும். அன்று அருணோதயத்தில் எண்ணெய் தேய்த்து நீராடுவோர் கங்கையில் நீராடிய பலனைப் பெறுவர். அன்று அருணோதய காலத்தில் சந்திரன் உதித்த பிறகு உள்ள காலம் ஸ்நானத்திற்கு மிகச் சிறந்தது என்பர். விடிந்த பின் தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவர். உறவினர், நண்பர் வீடுகளுக்குச் சென்று கங்கா ஸ்நானம் ஆயிற்றா என்று விசாரிப்பதும், வேலையாட்களுக்கு வெகுமதியளிப்பதும் அறுசுவையுடன் விருந்துண்பதும் சாஸ்திரப்படி அவசியம் செய்யப்பட வேண்டியவையாகும். புதிது உடுத்தல், தீபாவளிப் பண்டிகையின் சிறப்பம்சமாகும். புதிய சட்டை, வேட்டி சால்வை, சேலை, பாவாடை தாவணி அணிவது குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டில் தீபாவளிக்கு முன் ஜவுளிக்கடைகள் திருவிழா நடைபெறுவதுபோலக் காட்சியளிக்கும். இது சிறுவர்களுக்கு மகிழ்ச்சிக்குரிய நாள் எனலாம். வாடி வருந்தும் ஏழை மக்கள் வருடத்தில் ஒருமுறையாவது கோடி உடுத்து இன்பத்தில் ஊடி ஆடி மகிழ தீபாவளி சந்தர்ப்பம் அளிக்கின்றது. நெசவுத் தொழிலாளர் நன்மை பெறவும் இதுவகை செய்கின்றது.

நரகாசுரன் என்ற அசுரனை கிருஷ்ண பகவான் வதம் செய்த போது, அவனது இறுதி வேண்டுகோளுக்கு கேற்ப தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது என்பது ஐதீகம். வட இந்தியாவில் சில இடங்களில் தீபாவளி தினத்தன்று நரகாசுரனுடைய உருவத்தை கொளுத்தி கிருஷ்ண பகவானுடைய வெற்றியை கொண்டாடுவதுண்டு.

மகாபலி சக்கரவர்த்தி முடிசூடிய தினமென்றும், விக்கிரமாதித்திய ராஜன் முடி சூடிய தினமென்றும் ஒரு சாரார் இத்தினத்தை கொண்டாடுவர். இராவணனை வெற்றி கொண்டு, இராமபிரான் அயோத்தி அணி செய்து இரவில் தீபமேற்றி தங்கள் மகிழ்ச்சியை தீபாவளி கொண்டாப்படுகின்றது என்பர். பொதுவாக தீமை அழிந்த தினமாகவே இது சிறப்புறுகின்றது.

அக அழுக்கு அழிந்து போக வேண்டுமென்றே எமது முன்னோர் இத்தினத்தை கொண்டாடினர். நரகாசுரன் கண்ணால் ஆட் கொள்ளப்பட போது தன்னைப் போல் எல்லோரும் கண்ணனது திருவடிகளை அடைய வேண்டு மென்றே விரும்பினான். ஆனால் எம்மில் பலர் இத்தின மது அருந்தி, மாமிசம் புசித்து அசுரர்களாகவே மாறிவிடுகின்றனர். அந்த நிலை மாறி அகத்தில் விளக்கேற்றுவோம்.

ஊரெங்கும் மணக்கும் ஆனந்த எட்டாப்பழமாய் இருக்கும் ஏதிலிகளுக்கு இத்தினத் உதவி புரிந்து எல்லோரும் எல்லாமும் பெற்று இன்புற்றிருக்கு எமது பங்களிப்பைச் செய்வோம்.

---

# தோசை வண்டிலுக்கு நியூயோர்க் நகரின் வென்டி கிண்ண விருது

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை - குறள்

உயர்வானது உறுதியான ஊக்கமுடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களிடம் போய்ச்சேரும் என்ற வள்ளுவரின் கூற்று நியூயோர்க் நகரின் நடைபாதை வியாபாரியான 39 வயது இலங்கைத் தமிழன் திருக்குமரனிற்கு மிகவும் பொருந்துகிறது. குமார் வாரநாட்களில் மழை பெய்தால் என்ன, பனி கொட்டினால் என்ன தனது வாடிக்கையாளர்களுக்காக தோசை வண்டிலுடன் நியூயோர்க் நகரின் Sullivan தெருவும் Washington சதுக்கமும் சந்திக்கும் இடத்தில் தனது வியாபாரத்தை நடத்த வந்து விடுகிறார். கடந்த ஆறு வருடங்களாக இவ்வாறு உடனுக்குடன் தோசைசுட்டு விற்றுவரும் குமார் அவ்விடத்தில் மிகவும் பிரபல்யம் அடைந்து விட்டார். இவரது வண்டிலில் தோசையை விட இட்டலி, ரவா தோசை, மசாலதோசை, ஊத்தப்பம், வடை, சமோசா, பகோடா, யாழ்ப்பாண பிட்டு இன்னும் பல உணவு வகைகளும் உண்டு. எல்லா உணவுவகைகளும் சைவ உணவுகளே, அதிலும் இவைகள் எல்லாம் மிகவும் தூய சைவ உணவு (Pure vegan) என்பதால் இவை மக்களிடையே மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளன. Vegan எனப்படுவது பால் உட்பட மிருகத்திலிருந்து பெறப்படும் எந்த பொருட்களையும் பாவிக்காது தயாரிக்கப்படும் உணவுவகைகள். குமாரின் வண்டிலிலுள்ள எல்லா உணவு வகைகளின் விலைகளும் $5.00 இற்கு உள்ளடங்கியவையே.




குமாரின் இந்த தோசை வண்டிலிற்கு நியூயோர்க் நகரின் வென்டி விருது (Vendy Award) இம்முறை கிடைத்தது. நியூயோர்க் நகரில் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட நடைபாதை வியாபாரிகள் இருக்கின்றனர். இவர்களின் நலனை கவனிக்க உருவாக்கப்பட்டதே 'தெரு வியாபாரிகள் செயற்திட்டம்' (Street Vendor Project) எனப்படும் ஓர் இலாப நோக்கற்ற நிறுவனம். இந்நிறுவனம் கடந்த மூன்று வருடங்களாக இந்த வென்டி விருதை வழங்கி வருகிறது. மிகவும் சிறந்த தரமான உணவை விநியோகம் செய்யும் நடைபாதை வியாபாரிகள் மக்களால் தெரிவு செய்யப்பட்டு அதில் வெற்றி பெறும் ஒருவருக்கு இந்த வென்டி கிண்ண விருது வழங்கப்படுகிறது.

இவ்வருட தெரிவு கடந்த செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி மாலை மூன்று மணியில் இருந்து இரவு எட்டு மணிவரையும் நடைபெற்றது. இவ்விருந்திற்கான தெரிவு நடைபெற்ற இடம் நியூயோர்க்கிலுள்ள ரொம்கின் சதுக்கம் ஆகும் (Tompkins Square Park). இச்சதுக்கத்தில் மக்களால் இறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்ட ஐந்து நடைபாதை வியாபாரிகளும் தமது உணவை விநியோகம் செய்தார்கள். களியாட்டங்கள், மதுபானங்கள் வழங்கல் என பல நிகழ்வுகள் நடைபெற்ற இம்மாலைப்பொழுதில் நுழைவுசீட்டு வாங்கி இங்கு வந்த மக்கள் அங்கு உள்ள ஐந்து உணவு வண்டிகளிலும் இருந்து வேண்டியளவு உணவை சுவைத்து விட்டு தங்கள் கருத்தை நடுவர்களிடம் தெரிவித்தார்கள். அங்கு வீற்றிருந்த ஏழு நடுவர்களும் இறுதியாக வெற்றி பெற்றவரை தீர்மானித்தார்கள். அன்று இரவு நடைபெற்ற நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற குமாருக்கு வென்டி கிண்ணம் வழங்கப்பட்டது.

இம்முறை நடுவர்களாக பின்வருவோர் இருந்தார்கள்.

1. Ron Kuby - சட்டத்தரணி, வானொலி நிகழ்ச்சி நடத்துபவர்.
2. Ed Levine - எழுத்தாளர், உணவு சம்பந்தப்பட்ட பல புத்தகங்களை எழுதியுள்ளார்.
3. Sarah Moulton - தொலைக்காட்சி நிகழ்ச்சி நடத்துபவர், எழுத்தாளர் உணவு சம்பந்தப்பட்ட பல புத்தகங்களை எழுதியுள்ளார்.
4. Michael Musto - எழுத்தாளர், ஊடகவியலாளர்
5. Mo Roca - வானொலி நிகழ்ச்சி நடத்துபவர்.



6. Scott Stringer - நியூயோர்க் நகரத்தை சேர்ந்த ஜனநாயக கட்சி அரசியல்வாதி.
7. Andrea Strong - சுயாதீன ஊடகவியலாளர்.

குமாரின் தோசை வண்டில் நியூயோர்க் நகர மக்களால் கடந்த மூன்று வருடமும் இறுதிசுற்றில் கலந்து கொண்ட ஐந்து நடைபாதை வியாபார நிறுவனங்களில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் இம்முறையே இவருக்கு வென்டி கிண்ணம் கிடைத்தது. இந்தக்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்



**வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.**

பரம்ஜி - **416.230.1107**

HOMELIFE HIGHER STANDARDS

**PARAM GNANASWARAN**
Broker
**HOME LIFE GTA REALTY INC.** Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
**416.321.6969**
Office West: 145 Traders Blvd., Suite 28, Missisauga, ON
**905.712.2666**
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

# பிரபஞ்சம் - 3

நமது பிரபஞ்சம் தோன்றி 14½ பில்லியன் ஆண்டு ஆகின்றது எனக் கூறினேன் அல்லவா! அது ஒரு மிகத் திருத்தமான கணிப்பு இல்லை. இந்த ஆண்டுக் கணிப்பில் கூட விஞ்ஞானிகள் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. முதலில் 10 பில்லியன் ஆண்டு முன்னர்தான் பிக்பாங் என்ற பெருவெடிப்பு ஏற்பட்டு இருக்க வேண்டும் எனக் கணித்தார்கள். அக்கணிப்பில் ஒரு வில்லங்கம் ஏற்பட்டது. பின்னர், விண்மீன்களைத் தேடிப்பிடித்து, அவற்றின் வயதுகளைக் கணித்துக் கொண்டுபோன விஞ்ஞானிகளின் கண்களில் 13 பில்லியன் ஆண்டிற்கு முற்பட்ட விண்மீன் சில தென்பட்டன. விண்மீன்களுக்கான வயதுப் கணிப்பானது சரியானது எனக் கூறப்படத்தான் வில்லங்கம் வந்தது. பிரபஞ்சம் தோன்றியதின் பின்னர்தான் அதனுள் உள்ள அத்தனையுமே தோன்றின. அப்படியிருக்க, 10 பில்லியன் ஆண்டு முன்னராக, ஒரு புள்ளியளவில் இருந்து தோன்றிய பிரபஞ்சத்தினுள் எப்படி இவ்வளவு பெரியதான விண்மீன் 13 மில்லியன் ஆண்டு முன்னராகத் தோன்றியிருக்க முடியும். இது எப்படி உள்ளதெனில் தாயைவிட, அவள் பெற்ற பிள்ளைக்கு வயது கூடுதலாக இருப்பது போலவல்லவா உள்ளது!.

ஆகவே பிரபஞ்சத்தின் வயதுக்கணிப்பில்தான் ஏதோ தவறு ஏற்பட்டிருக்க வேண்டும். எனவே மீண்டும் பிரபஞ்சத்தின் வயதுக் கணிப்பானது விஞ்ஞானிகளால் கணிக்கப்பட்டது. அதன்படி, பிரபஞ்சமானது பத்து மில்லியன் முதல் இருபது பில்லியன் ஆண்டு முன்னராகத் தோன்றியிருக்க வேண்டும் எனக் கணிக்கப்பட்டது. ஆயினும் பரவலாக 14½ பில்லியன் ஆண்டு முன்னராகத் தான் பெருவெடிப்பு நிகழ்ந்திருக்க வேண்டும் என்ற பலராலும் எடுக்கப்பட்டது, ஏற்றுக்கொள்ளப்பட்டது. பார்த்தீர்களா! இப்போது தாயிற்குப் பிள்ளையை விட வயது கூடவாக இருக்கின்றது அல்லவா!

இந்த விஞ்ஞானிகள் எப்படித்தான் இந்த வயதுக் கணிப்பைக் கணித்தார்களோ! அறிய ஆவலாக இருப்பீர்கள் என்பது எனக்குத்தெரியும். கணிப்பில் பல சிக்கலான கணிதச் சமன்பாடுகள் பாவிக்கப்பட்டது என்பது என்னவோ உண்மைதான். ஆனால் எடுத்துக்கொண்ட கருதுகோள் அல்லது முறை மிகவும் எளிமையானது. எமது பிரபஞ்சம் தான் தோன்றிய நாளில் இருந்து விரிவடைந்து கொண்டு செல்கின்றது அல்லவா! (அப்படித்தான் ஹபிள் கலக்சிகளின் இயக்கங்களில் இருந்து நிறுவிக் காட்டினார். அயன்ஸ்ரைனின் பொதுச் சார்புத் தத்துவமும் கணித வடிவில் நிறுவிக் காட்டியது) இன்றும் விரிவடைந்து கொண்டு தான் இருக்கின்றது. இந்த விரிவினைப் பின்திருப்பிப் பாருங்கள். என்னவாகத் தெரியும். எமது பிரபஞ்சமானது சுருங்கிக் கொண்டு போவது போல் தெரியுமல்லவா? அத்துடன் நேரமும் குறைந்து கொண்டு போவது போல் இருக்குமல்லவா!

ஆம்! இந்த எளிய சிந்தனைதான் பிரபஞ்சம் பற்றிய அடிப்படைப் புதிர்களுக்கு விளக்கம் தந்தது எனலாம்.

இந்தப் பின்திருப்பல் (ஆங்கிலத்தில் Rewinding என்பார்கள்) நிகழ்வினை பார்ப்போமாயின் சில விடயங்கள் தெளிவு பெறும். முதலில் சுருங்குவதைப் பார்த்தோமாயின், பிரபஞ்சம் சின்னதாகிக் கொண்டு போவதைக் காணலாம். சின்னதாகிக் கொண்டு போகையில் என்ன நிகழும்? உள்ள உள்ள எல்லாம் நெருக்கப்படுமல்லவா. நெருக்கப்படும் போது என்ன நிகழும் எனத் தெரியும் தானே. வெப்பம் கூடிக்கொண்டே போகும். இதில் இருந்து தெளிவாகவே தெரிகின்றது. பிரபஞ்சமானது விரிவடைகையில் குளிர்ந்து கொண்டு வந்திருக்கின்றது என்பது மேலும் நெருக்கப்பட்டுக் கொண்டே போக, அதாவது பிரபஞ்சம் சுருங்கிக் கொண்டே போக, அதன் பருமன் குறைந்து கொண்டே போகும். ஆனால் உள்ளே உள்ளவை வேறு வடிவங்கள் எடுத்தாலும், ( நான், நீங்கள், மரம், செடி, கொடி, கோள்கள், விண்மீன்கள் எல்லாம் தான்.) இன்னமும் அவை பிரபஞ்சத்தினுள் ஏதோ ஒரு வடிவில் இருக்கின்றன தான். எனவே பிரபஞ்சமானது சுருங்கிக் கொண்டு போகையில் அதன் அடர்த்தியும் கூடிக்கொண்டு தான் போகும்.

ஆக, எமது பிரபஞ்சத்தினை பின் திருப்பல் முறையில் பின்நோக்கிக் பார்ப்போமேயாயின், அது சுருங்கிக் கொண்டு போகையில், பிரபஞ்சத்தின் வெப்பநிலையும் அடர்த்தியும் அதிகரித்துக் கொண்டே போகும் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். இது எதுவரையும் போகும். அடர்த்தியும், வெப்பநிலையும் முடிவிலிவரையும் போகும். பிரபஞ்சத்தின் பருமன் இல்லாது போகும் வரை இந்தப் பின்திருப்பலைப் பார்க்கலாம் அல்லவா! இந்த விதத்தில் பிரபஞ்சத்தின் பருமன் ஏறத்தாள பூச்சியமாகும் நிலைதான் பிரபஞ்சத்தின் உண்மையான தோற்றமாகும். இந்நிலையில் பிரபஞ்சத்தின் வெப்பம் (வெப்பநிலை) வரையறை இன்றி உயர்ந்ததாக இருந்திருக்கும். அத்துடன் பிரபஞ்சத்தின் அடர்த்தியும் வரையறை இன்றிப் பெரியதாக இருந்திருக்கும். அப்படி இருந்திருப்பின் மாத்திரமே பிரபஞ்சமானது இன்று இருக்கும் நிலைக்கு வந்திருக்க முடியும் அல்லவா!

ஆக, பிரபஞ்ச இயக்கத்தினை, பின்திருப்பல் முறையில் பார்க்கையில், பிரபஞ்ச வயதினைக் கணிப்பதுடன், அதன் ஆரம்ப நிலையையும் காணலாம் அல்லவா இந்த உத்தியில் விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள் வெற்றி பெற்றார்கள் என்றே கூற வேண்டும். அதன்படி 14½ பில்லியன் ஆண்டு முன்னராக, எமது பிரபஞ்சம் மிக, மிகச் சிறிய அளவில் (கிட்டத்தட்ட பூச்சியக் கனவளவில்) மிகப்பெரிய அடர்த்தியில் மிகப்பெரிய வெப்பத்துடன் தோன்றியது என்கின்றார். மிகப்பெரிய வெப்பமல்லவா! பிரபஞ்சமானது தோன்றுகையில் பெரிய வெளிசத்துடன் தோன்றியிருக்க வேண்டும். அல்லவா!



**- கனி -**

# தோசை வண்டிலுக்கு...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

கிண்ணத்தை இவருக்கு பெற்றுக் கொடுத்தது இவரது "பாண்டிச்சேரி தோசை' இன் சுவையும் தரமும் தான்.

திருக்குமரன் தனது வெற்றிக்கிண்ணத்தை பெற்றபின் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் தான் இலங்கையின் இரண்டாவது தலைநகரான யாழ்ப்பாணத்தில் பிறந்தவர் என்றார். இவரது முழுப்பெயர் திருக்குமரன் கந்தசாமி. குமாரிற்கு அமெரிக்க விசா அமெரிக்க அரசின் அதிஷ்டசாலி தெரிவின் (Lottery) மூலம் கிடைத்தது. தனது 27 வது வயதில் 1995 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நியூயோர் நகரத்திற்கு வந்த குமார் அங்கு எரிபொருள் நிலையத்திலும், கட்டிடவேலை செய்யும் இடங்களிலும் வேலைகள் செய்துவிட்டு பின்னர் உணவகம் ஒன்றில் வேலை செய்ததாக கூறினார். அதன்பின்னர் ஆறு வருடங்களிற்கு முன்பு வண்டிலில் தோசைசுட்டு விற்கும் இந்த வேலையை ஆரம்பித்ததாகவும் கூறினார். நாற்பத்தி நாலு நாடுகளிலுள்ள சுற்றுலாப் பயணிகளின் வழிகாட்டியில் (Tour Guide) நியூயோர்க் நகரத்தில் செய்ய வேண்டிய விடயங்களில் ஒன்றாக குமாரின் தோசை வண்டிலில் உணவு வேண்டி சாப்பிடுதலும்



குறிப்பிடப்பட்டுள்ளது. தானும் ஒரு சைவ உணவு உண்பவர் என்று கூறும் குமார் தனது நண்பர்களில் பலரும் சைவ உணவு உண்பவர்களே என்கிறார். குமார் கோடை காலத்தில் ஒரு சிறிய விடுமுறை எடுத்து கனடாவில் உள்ள தனது நண்பர்களை சந்திக்க வருவது வழக்கம் என்றார்.

தினமும் 200 பேருக்கு மேல் குமாரின் தோசை வண்டிலில் இருந்து உணவைப் பெறுகிறார்கள். பலர் 30 நிமிடங்களிற்கு வரிசையில் காத்து நின்று உணவை பெறுகிறார்கள். தினமும் முழு உணவையும் விற்றுவிட்டுத்தான் குமார் வீடு செல்கிறார். அவரது வண்டிலில் பிரபல்யமாக விற்பனை செய்யப்படும் இரு உணவு வகைகள் 'பாண்டிச்சேரி தோசை யும்' 'யாழ்ப்பாண மதிய உணவும்' ஆகும்.

மனைவியுடனும் மகளுடனும் நியூ யோர்க்கில் உள்ள Flushing, Queens என்னும் இடத்தில் குமார் வசித்து வருகிறார். இவரது மகள் இங்குள்ள ஒரு பாடசாலையில் (Junior High School) கல்வி பயிலுகிறார். குமாரின் தயாரும் சகோதரியும் இலங்கையில் இருக்கிறார்கள். குமாருக்கு சகோதரர் ஒருவர் ஜமேக்காவில் இருக்கிறார். குமாரின் தோசை நியூயோர்க் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. குமாரின் தோசையை உண்டவர்களின் கருத்துக்கள் சில. "குமாரின் உணவு தூய சைவ உணவு." "குமார் ஒரு மனிதநேயம் (Humanitarian) மிக்கவர்." "குமார் ஒரு சூழலியலாளர் (Environmentallist)." "கையில் காசு இல்லாவிட்டாலும் கடனுக்கு கூட உணவு கொடுப்பவர் குமார்." "மிகவும் மலிவு விலையில் உணவு விற்பவர் குமார்." ஒரு சினிமாப்பட தயாரிப்பாளரான Gina Teleroi என்பவர் கூறுகிறார்; தான் ஒரு தூய சைவ உணவு (Vegan) உண்பவர். வாரத்தில் இரண்டு நாட்கள் குமாரின் தோசை வண்டிலில் தான் உணவு அருந்துகிறேன் என்றார்.


SAMI DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $75.00

Summer Daycare - $60 with food & Everything

தினசரி நடவடிக்கைகள் * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா.

#7 Birchcrest Court (Finch / Warden) Mrs.S.J. சௌந்தரநாயகம் 416-502-3033






S M I L E

* BUSINESS PLANS
* CORPORATE TAX PREPARATION OF FILING
* PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
* ACCOUNTING, TAXATION
* SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

# “கிளம்பிட்டாங்கய்யா! கிளம்பிட்டாங்கா!!

# விளையாட்டுத் தகவல்கள் 224

தமிழனுக்கு எங்குபோனாலும் நிம்மதியில்லை! உலக சாதனையை முறியடிக்க, உலகில் ஒரே வழி தமிழ்வீரன் முன்னணியில் உள்ளான் என்ற பெருமையை ஜீரணிக்க முடியாதவர்கள் தற்போது வாய்ச்சவாடல் காட்டத்தொடங்கி விட்டனர்! இந்த வாய்சவாலில் தற்போது முன்னணியில் உள்ளவர்கள் அவுஸ்திரேலிய வீரர்கள் என்றால் மிகையாகாது!



தற்போது 700 விக்கெட் (113 ரெஸ்ற்) வீழ்த்தியுள்ள முரளிதரன், இன்னும் ஒன்பது விக்கெட் வீழ்த்தினால் அவுஸ்திரேலியாவின் ஷேன் வார்னை (708 விக், 145 ரெஸ்ற்) முந்தி முதலிடத்தை பிடித்து விடலாம். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு முரளிதரன் பந்து வீச்சு குறித்து பிரதமர் ஜோன் ஹாவர்டே சந்தேகம் தெரிவித்தார். இவர் பந்தை எறிவதாக குற்றம் சாட்டப்பட்டது. ரசிகர்களும் கேலி செய்தனர். இப்படி நிறைய சர்ச்சைகளை சந்தித்தார். இம்முறை துணிச்சலாக அவுஸ்திரேலியா செல்லும் முரளிதரன் சாதனை படைப்பாரா என்று பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

முத்தையா முரளிதரன் பற்றி ஜேசன் கில்லஸ்பி கூறிய கருத்துகள் இலங்கையில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் கில்லஸ்பி. சமீபத்தில் ‘டிஸ்சி’ என பெயரிடப்பட்ட தனது சுயசரிதையை வெளியிட்டார். இதில் முழங்கை மடக்குவது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஜி.சி.சி) வகுத்த புதிய விதிகள் சோயப் அக்தர், முரளிதரனுக்கு சாதகமாக அமைந்தது என குறிப்பிட்டுள்ளார். இக்கருத்துகள் இலங்கை கிரிக்கெட் வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை கிளப்பி உள்ளது.

இந்திய அணிக்கு பிரச்சினை இருக்காது! உறுதி. ரசிகர்களால் இந்திய அணிக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படாது என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை உறுதி அளித்துள்ளது.

இந்திய வந்த அவுஸ்திரேலிய அணி ஒரு நாள் தொடரைக்கைப்பற்றியது. பதிலுக்கு இந்திய அணி ‘Twenty - 20’ போட்டியில் வெற்றி பெற்றது. இத்தொடரின் போது இந்திய ரசிகர்களின் செயல்பாடு பெரும் சர்ச்சையை கிளப்பியது. வதோதரா போட்டியில் ‘ஆல் ரவுண்டர்’ சைமண்ட்சை பார்த்து குரங்கு என கோஷமிட்டனர்.

மும்பையில் நடந்த ஏழாவது போட்டியின் போது குரங்கு மாதிரி சேட்டைகள் செய்து காண்பித்தனர். அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றுள்ள ஒரே கறுப்பின வீரர் சைமண்ட்ஸ் என்பதால், ரசிகர்கள் கேலி செய்தது இனவெறிப் பிரச்சினையாக மாறியது. இதையடுத்து இந்திய அணி, அவுஸ்திரேலியா வரும்போது தகுந்த பதிலடி தரப்படும் என எச்சரிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியா பயணம் - பாகிஸ்தான் தொடர் முடிந்ததும் இந்திய அணி, அவுஸ்திரேலியா செல்கிறது. மூன்று ரெஸ்ற் மற்றும் மூன்றாவது அணியாக இலங்கை பங்கேற்க முத்தரப்பு ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. இந்தியா அவுஸ்திரேலியா மோதும் முதல் ரெஸ்ற் வரும் டிசம்பர் 30 ஆம் திகதி ஆரம்பிக்கிறது.

பெரும்தலைவலி - இந்த தொடர் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கு பெரும் சவாலாக உள்ளது. ஏனென்றால் இங்குள்ள ரசிகர்கள் இந்திய துணை கண்டத்து வீரர்களை கேலி செய்வதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். அதிலும் இலங்கையின் முரளிதரனை பார்த்தால் ஏதாவது சொல்லி வெறுப்பேற்றுவர். தற்போது இந்திய ரசிகர்கள் மீதும் அவுஸ்திரேலியர்கள் கோபத்தில் உள்ளனர். இந்தச் சூழலில் இந்திய, இலங்கை அணிகள் ஒரே நேரத்தில் வருவதால் ரசிகர்களை சமாளிப்பது மிகவும் கடினமாக காரியமாக உள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தலைவர் ஜேம்ஸ் சதர்லேண்ட் கூறியது - இந்திய துணை கண்டத்து வீரர்களுக்கு இம்முறை எவ்வித பிரச்சினையும் இருக்காது. போட்டியை மட்டும் பார்த்து மகிழும்படி ரசிகர்களுக்கு அறிவுறுத்தி உள்ளோம். ரசிகர்கள் மிகவும் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டுமென ‘டிவி’ மற்றும் மீடியாவில் விளம்பரம் செய்ய இருக்கிறோம். இனவெறிக்கு எதிராக பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். பீர் கான்களில் இனவெறிக்கு எதிரான வாசகங்களை இடம்பெறச் செய்ய உள்ளோம். கிரிக்கெட்டில் இனவெறிக்கு இடமில்லை. இது போன்ற செயல்களில் ஈடுபடுவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ரசிகர்கள் ஒருபோதும் எல்லை மீறக்கூடாது. மைதானத்தில் இவர்களது செயல் தீவிரமாக கண்காணிக்கப்படும்.

இலங்கையின் முரளிதரனை பொறுத்தவரை அவுஸ்திரேலியாவுக்கு பலமுறை வந்துள்ளார். இவரை ரசிகர்கள் மிகுந்த மரியாதையுடன் நடத்துவார்கள் என நம்புகிறேன். இவரது வருகையை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். இவ்வாறு ஜேம்ஸ் கதர்லேண்ட் கூறினார்.

ஆக்ரோஷம் தொடருமா? - இந்திய அணியின் ஆக்ரோஷம் எத்தனை காலம் நீடிக்கும் என அவுஸ்திரேலிய அணித்தலைவர் பாண்டிங் கேள்வி எழுப்பியுள்ளார். ‘சமீபத்திய தொடரின் போது இந்திய வீரர்கள் ‘நெருப்புக்கு நெருப்பு’ என்ற முறையில் மிகுந்த ஆக்ரோசத்துடன் விளையாடினர். இதற்கு முன்பு இப்படி செயல்பட்டது கிடையாது. அடுத்து அவுஸ்திரேலியா வர உள்ளனர். இந்த தொடரின் போதும் இவர்களது ஆக்ரோஷம் தொடருமா என பார்க்க வேண்டும். பொதுவாக இந்திய வீரர்கள் அமைதியாக இருப்பார்கள். ஸ்ரீசாந்த் மட்டும் இதற்கு விதிவிலக்காக உள்ளார். ரெஸ்ற் போட்டிகளில் எங்களது இருபது விக்கெட்டுகளை வீழ்த்துவது கடினமான காரியம் என்றார்.

ஸ்ரீசாந்துக்கு ஆலோசனை - ஸ்ரீசாந்த் தனது ஆக்ரோஷத்தை செயலில் காட்ட வேண்டுமென முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் மெக்ராத் ஆலோசனை கூறியுள்ளார். “இந்திய தொடரின் போது ஸ்ரீசாந்த் தேவையில்லாமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இவர் தனது ஆக்ரோஷத்தை செயலில் காட்ட வேண்டும். அப்போது தான் அணியில் நீண்ட காலம் தொடர முடியும். அவுஸ்திரேலிய தொடரின் போது வேகப்பந்துவீச்சுக்கு ஏற்ற ஆடுகளங்களில் இந்திய அணி சிரமப்பட வேண்டியிருக்கும். பிரட்லீ, மிட்சல் ஜோன்சன், ஷான் டெய்ட் போன்றோர் அனல் பறக்க பந்துவீச காத்திருக்கின்றனர்’, என்றார்.

முரளிதரனுக்கு எச்சரிக்கை - அவுஸ்திரேலிய பயணத்தை முரளிதரன் தவிர்க்க வேண்டுமென இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் ரணதுங்கா அறிவுறுத்தியுள்ளார்.

அவுஸ்திரேலிய செல்லும் இலங்கை அணி இரண்டு ரெஸ்ற் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் ரெஸ்ற் வரும் நவம்பர் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. பின்னர் முத்தரப்பு தொடரிலும் பங்கேற்கிறது. இந்த தொடர்களை புறக்கணிக்கும்படி முரளிதரனுக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ரணதுங்கா கூறுகையில், ‘அவுஸ்திரேலியா செல்லும் போதெல்லாம் முரளிதரனுக்கு பிரச்சினை ஏற்படுகிறது. இதை உணர்ந்து இம்முறை பயணத்தை தவிர்க்கும்படி சொன்னேன். ஆனாலும் அவர் ஆர்வமாக இருக்கிறார். எனவே முடிவு முரளிதரன் கையில் தான் உள்ளது,’ என்றார்.

### பயிற்சியாளராக டைசன்

வெஸ்ட் இண்டீஸ் அணியின் பயிற்சியாளராக ஜோன் டைசன் நியமிக்கப்பட்டுள்ளார். வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த பென்னட் கிங் உலக கோப்பை (50 ஓவர்) நிறைவடைந்தவுடன் தனது பதவியை ராஜினாமா செய்தார். உதவி பயிற்சியாளராக இருந்த டேவிட் மூர் தற்காலிகமாக பொறுப்பை ஏற்றார். அணியின் புதிய பயிற்சியாளராக தற்போது அவுஸ்திரேலியாவின் ஜான் டைசன் நியமிக்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே இலங்கை அணிக்கு பயிற்சியாளராக இருந்துள்ளார். அவுஸ்திரேலியா சார்பில் 20 ரெஸ்ற் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் போர்டு செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், ‘பயிற்சியாளர் பணியை விரைவில் ஜோன் டைசன் ஏற்பார். மற்ற ஊழியர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்,’ என்றார்.

தொடரை வென்றது தென்ஆபிரிக்கா, பாகிஸ்தான் தோல்வி காலிசின் அபார ஆட்டம் கைகொடுக்க, பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி போட்டியில் தென்ஆபிரிக்கா 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. இதன் மூலம் ஒருநாள் தொடரை 3 - 2 என கைப்பற்றியது.

பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட தென்ஆபிரிக்கா 2 ரெஸ்ற் மற்றும் 5 ஒருநாள் கொண்ட தொடரில் விளையாடியது. நான்கு போட்டியின் முடிவில் ஒரு நாள் தொடர் 2 - 2 என்ற சமநிலையில் இருந்தது. ஐந்தாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி லாகூரில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற தென்ஆபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடியது.

காலிஸ் அபாரம் - தென்ஆபிரிக்காவுக்கு துவக்க வீரர்களாக கிப்ஸ், அணித்தலைவர் ஸ்மித் களமிறங்கினர். பொறுப்புடன் விளையாட தவறிய ஸ்மித் (0) அக்தரின் முதல் ஓவரிலே, ‘கீளின்’ போல்டானார். அடுத்து வந்த காலிஸ் நிதானமாக விளையாடினர். இரண்டாவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 80 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் கிப்ஸ் ஆட்டமிழந்தார். இவர் 10 பவுண்டரிகள் உட்பட 54 ஓட்டங்கள் எடுத்தார். ஆமை வேகத்தில் பேட் செய்த காலிஸ் ஒருநாள் அரங்கில் 64வது அரைசதம் கடந்தார். இதற்கு இவர் 92 பந்துகள் எடுத்துக் கொண்டார். காலிஸ் 86 ஓட்டங்கள் எடுத்து, அக்தர் பந்தில் ஆட்டமிழந்தார். மற்ற வீரர்கள் விரைவில் வெளியேற தென்ஆபிரிக்கா 50 ஓவர் முடிவில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 233 ஓட்டங்கள் எடுத்தது.

யூனிஸ் அசத்தல் - இதையடுத்து களமிறங்கிய பாகிஸ்தானுக்கு ஆரம்பம் நன்றாக அமையவில்லை. நசிர் 17, அக்மல் 24, வெளியேறினர். யூனிஸ் 58 ஓட்டங்கள் எடுத்த நிலையில் போலக் பந்திலும், யூசுப் 53 ஓட்டங்களும் டுமினி பந்திலும் அவுட்டாக, பாகிஸ்தானுக்கு சிக்கல் ஏற்பட்டது. சோயப் மாலிக் (23), அப்ரிதி (9) வெளியேறினார்.

பாகிஸ்தான் 46.3 ஓவரில் 219 ஓட்டங்களை எடுத்து முழுவதும் ஆட்டமிழந்து 14 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதன்மூலம் தென்ஆபிரிக்கா ஒரு நாள் தொடரை 3 - 2 என வென்றது.

அடுத்த தலைவர் கிளார்க்? (அவுஸ்திரேலியா) அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பதவிக்கு தேவையான அனைத்து தகுதிகளும் மைக்கேல் கிளார்க்கிடம் இருக்கிறது. எனக்கு பின் இவர் தான் தலைமை பொறுப்பை ஏற்பார் என பாண்டிங் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து இரண்டு உலக கோப்பை (2003, 2007) வென்ற இரண்டு தலைவர்களில் அவுஸ்திரேலியாவின் ரிக்கி பாண்டிங்கும் ஒருவர்.

இவரது தலைமையின் கீழ் அவுஸ்திரேலியா, சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை 4 - 2 என வென்றது. இந்நிலையில் அவுஸ்திரேலிய அணியின் அடுத்த அணித்தலைவர் மைக்கேல் கிளார்க் தான் என அடித்து சொல்கிறார் பாண்டிங்.

### இந்தியா & பாகிஸ்தான்

தலைவர் பதவியை தூக்கி எறிந்த ராகுல் டிராவிட்டுக்கு இன்னொரு ‘இடி’ விழுந்துள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். நீண்ட இடைவெளிக்கு பிறகு சேவக் மீண்டும் வாய்ப்பு பெற்றுள்ளார். Twenty - 20 தொடரில் அசத்திய ரோகித் சர்மாவும் இடம்பெற்றுள்ளார். உள்ளூர் சாலஞ்சர் கோப்பை தொடரில் கலக்கி வரும் வேகப்பந்துவீச்சாளர் பிரவீண் குமார் புதுமுகமாக சேர்க்கப்பட்டுளார். இந்தியா வரும் பாகிஸ்தான் அணி, 5 ஒருநாள், 3 ரெஸ்ற் போட்டிகளில் பங்கேற்கிறது. முதல் இரண்டு ஒரு நாள் போட்டிக்கான (நவ.5, நவ 8) இந்திய அணி அணி தேர்வு செய்யப்பட்டது. இதற்காக தேர்வுக் குழுவின் சிறப்பு கூட்டம் வெங்சர்க்கார் தலைமையில் ஆமதாபாத்தில் நடந்தது.

### டிராவிட் நீக்கப்பட்டது ஏன்?

புதுடில்லி - இந்திய தேர்வுக்குழு தலைவர் வெங்சர்க்காருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே டிராவிட் அணியிலிருந்து நீக்கப்பட்டதாக தெரிகிறது.

கருத்துவேறுபாடு - மூன்றாவது வீரராக களமிறங்காதது மற்றும் சேவக்கிற்கு ஆதரவு தெரிவித்தது போன்ற காரணத்தால் டிராவிட்டுக்கும் தேர்வுக்குழு தலைவர் வெங்சர்க்காருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சமீபத்தில் தலைவர் பதவியை ராஜினாமா செய்த தகவலைகூட டிராவிட், இந்திய கிரிக்கெட் சபை தலைவர் சரத் பவாரிடம் தெரிவித்தார். வெங்சர்க் காரிடம் அல்ல. இப்படி இருவருக்கும் இடையிலான உறவில் விரிசல் உள்ளது. மும்பையில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியிலிருந்து நீக்கப்பட்டபோதே டிராவிட், பாகிஸ்தான் தொடருக்கான அணியில் இடம்பிடிப்பது சந்தேகமானது. இப்போட்டி முடிந்தவுடன் செய்தியாளர்கள் கூட்டத்தில் தலைவர் தோனி ‘டிராவிட்டுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது’ என்றார்.

சச்சின், கங்குலிக்கு ஓய்வு? - டிராவிட்டை தொடர்ந்து வரும் போட்டிகளில் சச்சின், கங்குலிக்கும் ‘ஓய்வு’ அளிக்கப்படும் என தெரிகிறது. இது குறித்து தேர்வுக்குழு உறுப்பினர் ஒருவர் கூறுகையில், இளம்வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்பதால் அணியில் இரு மூத்த வீரர்கள் இருந்தால் போதுமானது என முடிவு செய்தோம். வரும் போட்டிகளில் சச்சின், கங்குலிக்கும், ‘ஓய்வு’ அளிப்போம். டிராவிட் இடம் பெறாததை பெரிது படுத்த தேவையில்லை. அவருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படும்’, என்றார்.

**எஸ். கணேஷ்**



தொடர்ச்சி 08ஆம் பக்கம்




**Raphael Maharaja**

Barrister, Solicitor & Notary Public

*Tel: 416-847-7077* *Fax: 416-847-7088*

211 – 2425 Eglinton Avenue East, Scarborough, ON M1K 5G8

**கனேடிய தமிழ் வழக்கறிஞர்**



# நிலமாற்று வரியின் அதிகரிப்பு



ஒன்ராரியோவில் ஒரு ஆஸ்தியை ஒருவரிடம் இருந்து மற்றவரிற்கு மாற்றும்போது அல்லது வாங்கும்போது நிலமாற்று வரி (Land Transfer Tax) செலுத்தவேண்டியுள்ளது. இந்த வரியினால் வரும் வருமானம் ஒன்ராரியோ அரசிற்கு செல்கின்றது. கடந்த பல ஆண்டுகளாக இதன் பெறுமதி மாறாமல் இருந்து வருகின்றது. இந்த வரியின் அளவு எவ்வளவு என்பதற்கு ஒருவகை சூத்திரம் பாவிக்கப்படுகின்றது. வாங்கப்படும் ஆஸ்தியின் விலையைப் பொறுத்து இந்த அளவு அறவிடப்படுகின்றது. அத்துடன் வாங்கப்படும் ஆஸ்தியைப் பொறுத்தும் தங்கியுள்ளது. அதாவது வெற்று (Vacant Land) நிலம், வீடுகள், வயல் காணி போன்றவற்றிக்கு ஏற்ப இந்த வரி மாறுபடும்.

பொதுவான நிலமாற்று வரி, முதல் $55,000 வரை 0.5% வீதமும், $55,000 இருந்து $250,000 வரை 1%மும், 250,000 இலிருந்து $400,000 வரை 1.5% வீதமும், $400,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுள்ள ஆஸ்திகளிற்கு 2%மான நிலமாற்று வரியும் அறவிடப்பட்டு வருகின்றது.

உதாரணமாக $300,000 பெறுமதியான வீட்டின் நிலமாற்று வரியின் கணிப்பீடு
= $55,000 x 0.5% + (250,000 - 55,000) x 1% + $(300,000 - $250,000) 1.5% = 275 + 1950 + 750 = $2975

இவ்வாறே நடைமுறையிலிருக்கும் நிலமாற்று வரி கணக்கிடப்பட்டு வரப்படுகின்றது.

ஒன்ராரியோவில் வீடு வாங்க பொதுவாக இவ்வாறு நிலமாற்று வரி அறவிடப்படுகின்ற போதிலும், முதல் தடவையாக வீடு வாங்குபவராகவும் புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடுகள் வாங்கும்போது $2000 வரை நிலமாற்று வரி மீளளிப்பு (Land Transfer Tax Rebate) கிடைத்து வருகின்றது.

ஒக்ரோபர் 22, 2007 ஆம் ஆண்டு ரொறொன்ரோ நகரத்தின் முதல்வர் டேவிட் மில்லர் மேலதிக நிலமாற்றுவரியை அறவிடுவதற்கான சட்டத்தை கொண்டுவந்துள்ளார். ரொறொன்ரோ றியல் எஸ்ரேற் சபையின் பலத்த எதிர்ப்பிற்கு மத்தியில் இந்தச் சட்டம் அமலிற்கு வந்துள்ளது. 26,000 இற்கு மேற்பட்ட வீட்டு முகவர்களை இந்த சபை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. புதிய சட்டத்தின் பிரகாரம், நிலமாற்றுவரி ஏற்கனவே ஒன்ராரியோ அரசினால் அறவிடப்படும் பெறுமதியின் இரு மடங்காக அதிகரிக்கப்படுகின்றது.

இந்தவரி வீட்டுச்சந்தையில் முக்கியமாக ரொறொன்ரோப் பகுதியில் ஒருவிதபாதிப்பை ஏற்படுத்தலாம் என வீட்டுமுகவர்கள் கவலை தெரிவித்திருக்கிறார்கள்.

ரொறொன்ரோப்பகுதியில் ஒவ்வொருவருடமும் கிட்டத்தட்ட 8000 புதிய கொண்டோ அலகுகள் கட்டப்படுகின்றன. இந்த வீட்டுச் சந்தையில் பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது மேலும் ஒன்ராரியோவில், இந்தக்கால கட்டத்தில் வீட்டுச் சந்தை ஆரோக்கியமாக இருக்கின்றது. இந்த நிலைமையை, புதிய வரி எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தலாம்!

புதிதாக கொண்டுவரப்பட்ட நிலமாற்றுவரி ஏற்கனவே இருக்கும் வரியின் அளவினதாக இருக்கும். அதாவது ரொறொன்ரோ பகுதியில் வீடு வாங்குபவர்கள் ஏற்கனவே இருக்கும் வரியின் இருமடங்கு செலுத்த வேண்டியிருக்கும். அதேநேரத்தில் ரொறொன்ரோ சுற்றியுள்ள நகரங்களில் இந்த மேலதிக வரி அறவிடப்படமாட்டாது. எனினும், எதிர் காலங்களில் என்ன நடக்கும் என்று கூறமுடியாது. எனவே வீடு வாங்குபவர்கள் ரொறொன்ரோவைச் சுற்றியுள்ள நகரங்களிலும் இடமாறுவார்களா?

இந்த மேலதி வரி முதல் தடவை வீடு வாங்குபவர்களிற்கு, $400,000 இற்கு குறைந்த பெறுமதியுள்ள ஆஸ்திகள் வாங்கும்போது விதிவிலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே முதல் தடவையாக வீடு வாங்குபவர்கள் $400,000 இற்கு குறைவான பெறுமதியுள்ள வீட்டை வாங்குவதன் மூலம் இந்த மேலதிக வரியிலிருந்து தப்பித்து கொள்ளலாம்.

மேலும் இந்த வருடம் டிசம்பர் 31 இற்குள் வீடு வாங்குபவர்களிற்கும் இந்த மேலதி வரி அறவிடப்படமாட்டாது.

**அமெரிக்க வட்டிவீதமும் கனடிய டொலரும்**

அமெரிக்க வட்டிவீதம் இறங்கிவரும் இந்தக்கால கட்டத்தில் கனடிய வட்டி வீதம் மாறாதிருக்கின்றது. அதே நேரத்தில் கனடிய டொலரின் பெறுமதி அதிகரித்து செல்கின்றது. செப்ரெம்பர் 18, 2007 இல் கூடிய அமெரிக்க வங்கியின் மத்திய குழு 1/2 வீதத்தை குறைத்தது. ஆனால் ஒக்ரோபர் 16ஆம் திகதி 2007 கனடிய மத்திய வங்கி வட்டிவீதத்தை உள்ள மாதிரியே (4.5%) விட்டுள்ளது.

ஒக்ரோபர் 31ஆம்திகதி சந்தித்த அமெரிக்க வங்கியின் குழு 0.25% வரையான வட்டிவீதத்தை இறக்கியது. இதனால் கனடிய டொலரின் பெறுமதியில் மேலும் அதிகரிப்பு ஏற்படலாம். ஏற்கனவே கனடிய டொலர் 40 வருடங்களில் மிக அதிக பெறுமதியைக் கொண்டுள்ளது.

**நாமும் நமது இல்லமும்**
ராஜா மகேந்திரன்
**தொடர் - 262**




ஸ்காபரோ, மிசிசாக இரு இடங்களில் சிறந்த சேவை
100இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS
*Independently owned & operated

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**
“கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது”

**House for sale**
- Morningside / Mclevin
- 3 bedroom detached house
- Finished BSMT with W/R, sep. entrance. Possible, single garage.
- Only $264,900

**New Commercial Condo. Available for sale or lease**
- GTA Square indoor mall @ Finch - Middlefield.
- Market East - Strip Plaza @ Steeles & Markham

**Condo. for sale**
- Finch & Bridletowne Cir.
- 3 bedrooms
- 2 washrooms
- laundry, parking
- Price $159, 900.

**Condo. for sale**
- Eglinton / DVP
- 3 bedroom
- 2 bedroom
- Price $154,900

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931
COLDWELL BANKER COBURN REALTY
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை
Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# வீர வணக்கம்

ஈர மில்லா எதிரிகளின்
எண்ணி லடங்காக் கொடுமைகளை
வேர றுக்கும் நோக்கோடு
விரும்பி உயிரைக் கொடுத்தெமக்காய்த்
தீர மாகப் போராடித்
தியாகம் செய்த வீரர்க்கெம்
வீர வணக்கம் செய்கின்றோம்
வீழ்ந்தவர் பாதம் பணிகின்றோம்!

கட்டிக் காத்த எதிரிகளின்
காவல் நிறைந்த பாசறையுள்
கெட்டித் தனமாய்ச் சென்றங்கே
கேடு விளைத்த வான்கலத்தை
முட்டி மோதிச் சிதைத்துயிரை
முடித்துக் கொண்ட வீரர்களே!
எட்டுத் திக்கும் வாழ்தமிழர்
இணைந்து அஞ்சலி செய்கின்றோம்!

நகையைத் தேடி அணிகின்ற
நங்கையர் போன்று வாழாது
பகையைத் தேடி அழிக்கின்ற
பாவை ராகிச் சிங்கத்தின்
குகையுட் புகுந்து தமிழர்களைக்
குண்டால் அழித்த வான்கலத்தைப்
புகையிற் கருக வைத்தோரே!
போற்றி அஞ்சலி செய்கின்றோம்!

ஈழம் காணப் புறப்பட்ட
எங்கள் தலைவன் செயற்திட்டம்
சோழ மன்னன் அடித்தகதை
சொல்லிப் புலம்ப வைத்ததடா!
ஏளனஞ் செய்த எதிரிகளை
எல்லா என்நட வடிக்கையது
வீழ வைத்து விட்டதடா!
வீர வணக்கம் வேங்கையரே!!

- மாதகலான்
சபா. அருள்சுப்பிரமணியம்

# திருமுரசுமோட்டை

பண்: காந்தாரம்

அருவாய் உருவாய்த் தோன்றிடுவார்
அருவுரு வாயும் நின்றருள்வர்
அரிதாம் என்பார் ஆய்வாளர்
அன்பால் வணங்கும் அடியார்கள்
அருகிற் கண்டோம் என்பார்கள்
அளக்க வொண்ணாப் பெருமையினார்
முரசு மோட்டை எழுந்தருள்வார்
முறுவல் பெற்றால் வாழ்வாமே.

அரிய வேதப் பொருளானார்
ஆகமத் துக்கும் உயிரானார்
உரிய நூல்கள் கல்லாதே
உள்ளத் தாலும் பெறவல்லார்
மருவி இயற்கைக் காட்சிவளம்
மலிந்த மாண்புப் பதியாய
முரசு மோட்டை எழுந்தருள்வார்
முறுவல் பெற்றால் வாழ்வாமே.

பெருமா கங்கை பிறைமதியைப்
பீடார் சடையில் வைத்துள்ளார்
அரவந் தன்னை ஆரமென
அழகாய்க் கழுத்தில் அணிந்துள்ளார்
மருவி வயல்கள சூழ்ந்துள்ள
வளமார் வண்மைப் பதியாய
முரசு மோட்டை எழுந்தருள்வார்
முறுவல் பெற்றால் வாழ்வாமே.

தெரிவை தன்னை இடப்பாகத்
திருமே னியிலே கொண்டுள்ளார்
கருவில் கருத்தில் நிறைந்துள்ளார்
கசிந்துள் ளுருகித் தொழுதற்கு
மருவி மக்கள் உழைப்பாலே
வளரும் மேன்மைப் பதியாய
முரசு மோட்டை எழுந்தருள்வார்
முறுவல் பெற்றால் வாழ்வாமே.

புரியுந் திறனில் புலனைந்தும்
புரியுஞ் செயலால் அலமந்து
திரியும் மனத்துக் கருள்செய்வார்
சிதறல் வாழ்வைச் சீர்செய்வார்
மருவி நல்ல ஒற்றுமையில்
வளரும் வல்லார் பதியாய
முரசு மோட்டை எழுந்தருள்வார்
முறுவல் பெற்றால் வாழ்வாமே.
அரிய ஊற்றில் அருவியினில்
ஆற்றில் எல்லாம் ஆடவைத்துப்
பெரிய கடலும் மூழ்கவைப்பார்
பேசற் கரிய பேரின்பர்
மருவிப் பண்பிற் சிறந்குடி
மக்கள் வாழும் பதியாய
முரசு மோட்டை எழுந்தருள்வார்
முறுவல் பெற்றால் வாழ்வாமே.

அரிய அமுதப் பாற்கடலில்
ஆசைக் களவு வகுத்தற்கு
விரவி எழுந்த நஞ்சுண்டு
விண்ணோர் இடரைத் தீர்த்தபிரான்
மருவி வானில் வாழ்வோரும்
வந்து வணங்கும் பதியாய
முரசு மோட்டை எழுந்தருள்வார்
முறுவல் பெற்றால் வாழ்வாமே.

பரிவே யின்றித் தீவினைகள்
பறந்து திரிந்து திசையெங்கும்
புரிந்த புரங்கள் மூன்றினையும்
பொடிசெய் தெரித்த புகழ்வீரர்
விரவி ஒழுக்கம் ஓம்புகின்ற
விழுப்பம் மிகுந்த பதியாய
முரசு மோட்டை எழுந்தருள்வார்
முறுவல் பெற்றால் வாழ்வாமே.

திருமால் அயனார் தேடவும்
தெரியா வண்ணம் பெருஞ்சோதி
வரையாய்த் திருவண் ணாமலையில்
வளர்ந்து நின்ற மாதேவர்
பரிவால் பத்தர்க் கருள்செய்யப்
பட்டிப் பசுக்கள் பால்சுரக்கும்
முரசு மோட்டை எழுந்தருள்வார்
முறுவல் பெற்றால் வாழ்வாமே.

பெருமைத் தமிழர் அனுபவிக்கும்
பெருமா கொடுமை தீர்த்தருள
அருமைத் தமிழீ ழும்மலர
ஆண்டார் மீண்டும் ஆண்டுயரக்
கருதிக் கலைகள் வளர்கின்ற
கடமை யுணர்வுப் பதியாய
முரசு மோட்டை எழுந்தருள்வார்
முறுவல் பெற்றால் வாழ்வாமே.

இவ்வாலயம் கிளிநொச்சி மாவட்டத்தில் முரசுமோட்டையில் முல்லைத்தீவு வீதி 4ஆம் கட்டையில் அமைந்துள்ளது. தான்தோன்றியாகப் புற்றில் தோன்றிய இறைவரை நெடுங்காலமாகச் சூல வடிவில் மக்கள் வழிபட்டு வந்தனர். பின்னர் அடியார் முயற்சியாலும் அளவெட்டி அருட்கவி விநாசித்தம்பி அவர்களின் வழிப்படுத்தலாலும் ஆலயம் விதிப்படி கட்டப்பெற்றது.

இறைவர்: சங்கர நாராயண சிவலிங்கேசுவரர், காசிலிங்கர்.
இறைவி: விசாலாட்சி.

கவிஞர் வி. கந்தவனம்



# மாற்றம் என்று அழகானது

தேன்தமிழைத்
தரிசித்தேன்

முடி அழகைக கண்களால்
கவி வடித்தேன்

சிந்தனையில்
புல்லாங்குழல் வாசித்தேன்

இடையழகு
நடையழகு
விரல் அழகு

இயற்கையின் கொடையில்
கோடி கோடியாய்ப் பணம்
கொட்டிக் குவிகின்றது
கவர்ச்சியின் அழகில்

உழைத்த பணத்தை
அனுபவிக்க நேரமின்றி

மென்மேலும்
ஓடி அலையும் அழகு

எத்தனை அழகு
இருந்தென்ன

காதுக்கு மேல்
அறிவழகு இல்லையேல்
கரியாகிவிடுகிறது
காசும் பணமும்

சிலரின் ஆயுளும்தான்.

முத்துராஜா



# நினைவுகளின் தடத்தில் - 5

எப்போதோ யாரோ எழுப்ப கண்விழித்தபோது, ஒரு ஹரிகேன் விளக்கும் கையுமாக, அம்பி வாத்தியாருடன் மாமா நின்று கொண்டிருந்தார்.

“எழுந்திருடா, வா போகலாம், அம்மா வந்திருக்கா” என்றார். கோபம் இல்லை அவர் முகத்தில். குரலில் சீற்றம் இல்லை. வெகு சாதாரண பாவத்தில் பொழுது விடிந்து விட்டதைச் சொல்லி எழுப்பும் பாவனையில் சொன்னார். அம்பி வாத்தியார் தான் திட்ட ஆரம்பித்தார். “அறிவு இருக்காடா உனக்கு? ஏன் சினிமா பாத்துத் தான் ஆகணுமோ? ராஜாவைப் பாத்தியா? அவன் ஒன்னைப் போலவா இருக்கான்? புத்தி வேணும்டா? வீட்டை விட்டு ஓடறதுக்கு நேரம் பாத்தே பாரு, அம்மா ஊருலேருந்து வந்திருக்கப்போ. மாமாவப் பத்தி என்ன நினைச்சுப்பா? கொஞ்சமாவது நினைச்சுப் பாத்தியா? அம்மா ஊரிலேருந்து வந்ததும் வாராதுமா அழுதுண்டு உக்காந்திருக்கா? போ. போய் சினிமாவுக்கு காசு குடுக்கலேன்னு ஓடினேன்னு சொல்லு உங்கம்மா கிட்ட”.

அவர் நிறுத்தவில்லை. திட்டிக்கொண்டே வந்தார். இடையில் “எல்லாம் நீங்க கொடுக்கற இடம் சார், அதான் இப்படி கெட்டுப் போறான். நானா இருந்த வச்சு நாலு சாத்தற சாத்திலே, சினிமான்னு மூச்சு விடமாட்டான்.” என்று மாமாவைப் பாத்தும் சொல்லிக்கொண்டே வந்தார். என்னைத் திட்டுவதற்கு அவர் உரிமை எடுத்துக் கொள்வார். மற்ற சமயங்களில் அவர் செல்லமாக கிண்டலும் செய்வார். பள்ளிக்கூடத்தில் அவர் எங்களுக்கு சொல்லிக்கொடுக்க வரும்போது மற்றவர்கள் சிரிக்க கிண்டலும் செய்வார். “சரிப்பா அம்பி, விடு போதும். அப்பறம் இதுக்கு வேறே கோவிச்சுண்டு நாளைக்கு வேறே எங்கேயாவது ஓடினான்னா நான் எங்கேன்னு போய் தேடுவேன். அவன் அம்மா வந்திருக்கா? நல்லபடியா போகணும்” என்று மெல்லிய குரலில் தன் வேதனையைச் சொல்லி வந்தார். அம்மா ஊரிலிருந்து வந்திருக்கிறாள் என்று எனக்குத் தெரிந்தது அப்போது தான். அம்மா ஒன்றும் சொல்ல மாட்டாள் என்றாலும், அவள் ஊரிலிருந்து வந்திருக்கும் போது, என்னை பாட்டியும் மாமாவும் ஏதோ குழந்தையைக் கொடுமைப்படுத்தித்தான் நான் வீட்டை விட்டே ஓடிவிட்டேனோ என்று நினைத்துவிடுவாளோ என்ற பயம் இருவருக்குமே இருந்திருக்கும். அந்த வேதனையில் மாமாவால் என்னைத் திட்டக்கூட முடியவில்லை என்று நான் அதைப் பற்றியெல்லாம் பின்னர் நினைத்துப் பார்க்கும்போது தோன்றும். ஆனால் நடு ராத்திரியில் எங்கெங்கோ தேடி கடைசியில் பார்க்கில் அகப்பட்டது அவர்களுக்கு நிம்மதியைக் கொடுத்திருக்கும். ஆனால் அதுவரை அவர்கள் எத்தனை வேதனைக்குள்ளாகியிருப்பார்கள் என்றெல்லாம் எனக்கு அப்போது நினைத்துப் பார்க்கமுடியவில்லை. என் துக்கம் எனக்கு. என்னால் சினிமா பார்க்க முடியவில்லை. அன்றுதான் கடைசி நாள். அது போய்விட்டது. இனி அது வருமா என்ன? வீட்டை விட்டு ஓடியும் பிரயோசனமில்லாது போய்விட்டது. மாமாகிட்டவும் அம்பி வாத்தியார் கிட்டவும் திரும்பவும் மாட்டிக்கொண்டாய் விட்டது. இப்போ ஒன்றும் செய்ய முடியாது. அம்மாவும் ஊரிலேயிருந்து வந்திருக்கிறாள். அவளும் திட்டுவாள். இப்போது வழி நெடுக அம்பி வாத்தியார் திட்டிக்கொண்டு வருகிறார்.

- வெங்கட்சாமிநாதன் -

நடராஜன் என்று பெயர் இருந்தாலும் அவரை எல்லோரும் “அம்பி” என்று தான் அழைப்பார்கள். பள்ளிக்கூடத்திலும் மற்ற வாத்தியார்களும் பையன்களும் அவரை “அம்பி வாத்தியார்” என்றுதான் குறிப்பிடுவார்கள். ஆனால் அவரை மாமாவைத் தவிர வேறு யாரும் “அம்பி” என்று அழைத்து நான் கேட்டதாக நினைவு இல்லை. நாங்கள் இருந்த தெருவில் சில வீடுகள் தள்ளி அவர் வீடு இருந்தது. நல்ல தாட்டியான சரீரம். நல்ல உயரம். மாமாவுக்கு உதவியாக இருப்பார் எப்போதும். ஏதும் உதவி தேவையானால், மாமா அவரைத் தான் கூப்பிடுவார். அவருக்கு மாமா “ஸார்” தான்.

எல்லோரும் விழித்துக் கொண்டு இருந்தார்கள். நான் அகப்படுகிறேனோ என்னவோ, எங்கே போனேனோ என்று அவர்களுக்கு கவலை இருந்திருக்கும். அம்மாவும் பாட்டியும் ஆளுக்கு ஆள் மஞ்சள் துணியில் காசு முடிந்து ஸ்வாமிக்கு வேண்டிக் கொண்டிருப்பார்கள். நல்ல படியா பிள்ளை திரும்ப வரணுமே, பகவான் தான் காப்பாத்தணும். இப்படி ஒரு புள்ளே கஷ்டப்படுத்துமோ.

வீடு வந்ததும், “பார்க்கிலே படுத்துண்டு

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

**Mccowan/Eglinton**



**$173,000**

2+1 Bedrooms, 2 Washrooms, Newly Renovated Spacious Unit. Excellent Condition! Renovation Includes New Laminate Flooring

**Mccowan/401**



**$190,000**

2+1 Bedrooms, 2 Washrooms, Immaculate And Spotless 2+1 Suite In Luxury Tridel Bldg. High Luxary Hardwood Floor.

**Brimley/Lawrence**



**$255,000**

3+1 Bedrooms, 2 Washrooms, New Painting,New Bath Room,Wall Tiles,New Vinyl Floor ,Close To Primary School

**Steeles/Brimley**



**$270,000**

3 Bedrooms, 3 Washrooms, Bright, 3 Bedroom Home. Living Rm And Dining Rm Combo Walk-Out To Yard From Dining Room.

**Bellamy/Lawrence**



**$279,900**

3+1 Bedrooms, 2 Washroom, Spacious And Well Maintained Bungalow In A Superb Location. Walk To Cedarbrea Mall

**Lawrence/Port Union**



**$282,800**

3 Bedrooms, 2 Washrooms, Freehold Townhouse Close To Go Station, Lawrence Bus 24 Hours Service

**Middlefield/Denison**



**$344,900**

3 Bedrooms, 3 Washroom, Well Maintained Beautiful Family Home In Excellent Location. Major Amentites, Freshly Painted

**14th Ave &Markham**



**$349,000**

3 Bedrooms, 3 Washroom, Clean, Bright, Beautiful, Ceramic In Hall, Kitchen, Washroom, Appliances, Neutral Decor Thru-Out

**Lisgar/ Derry**



**$319,000**

3+1 Bedrooms, 3 Washroom, Beautiful Wellkept Home.Just Move In And Enjoy.Brand New Kitchen Cabinet

**Markham/Elson St.**



**$324,900**

3 Bedrooms, 3 Washroom, Great Location & Close To All Amenities.Double Door Front Entry Excellent Size Kitchen Area

**Mclaughlin/Queen Mar**



**$334,900**

3 Bedrooms, 3 Washroom, Beautiful Detached All Brick Home.6Yrs New W/Prof Builder Finished Bsmt W/Wet Bar

**Morningside/Finch**



**$369,900**

3 Bedrooms, 3 Washroom, Almost 5 Years New. New Carpet, Newly Painted. Larger Lot. Family Room With Gas Fireplace.

**Taunton/Wilson**



**$409,600**

5 Bedrooms, 3 Washrooms, 5 Bedroom Home, 5th Bedroom Is 3.84X3.18. **4 W/I Closets** Main Floor Office, Main Floor Laundry

**Salem/ Taunton**



**$419,500**

4+1 Bedrooms, 4 Washroom, Beautiful House! With Excellent Layout. You Could Move In Anytime! Not Even One Year Old!

**Morning/Nightstar**



**$450,000**

4 Bedrooms, 3 Washroom, Immaculate 4 Bedroom, Good Lyaout, Family Room With Fireplace, Lots Of Windows, Many Pot Lights

**Morningside/Sheppard**



**$459,000**

4 Bedrooms, 3 Washroom, Less Than 3 Years Old Detached Mattamy Build Home. 4 Bedrooms On The 2nd Floor And A Library.

**Mccowan/16th Ave**



**$465,900**

4 Bedrooms, 3 Washroom, Brand New Never Lived.Yorkwoods Popular Bridelwood.Practical Layout Very Bright & Neutral,Decor

**Mccowan/ 14th Ave**



**$559,900**

4+1 Bedrooms, 5 Washrooms, Beautiful 4 Bedroom Home With 9Ft Ceiling. Open Concept.

***New Retail/Restaurant Units Available for SALE/LEASE***

**Eglinton / Markham**




**$1,250,000**

Neighbourhood Commercial Plaza. - 4 Retail Units. Busy Eglinton Ave. Near Home Depot.

**Pharmacy & Ellesmere**



**$334,500**

3+2 Bedrooms, 2 Washroom,Renovated & Upgraded Well Kept Home. Close To All Emenities. Lovely Kitchen & Washrooms

**I can also assist you with: Mortgage Financing, Home Inspection, Real Estate Lawyer**



digi Media Creations - 416.467.4952


# Elaguppillai (Mike) Srinathan, B.Sc.

Sales Representative

**Direct: 416.276.1225**

esrinathan@trebnet.com

**HOMELIFE/GTA Realty Inc.** 1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3


HOMELIFE HIGHER STANDARDS


நிரு
பிராண்ட்
BRAND
Niru
®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE

# சமனசிகிச்சை (Homeopathy)

'ஷோரா' விஷத்தை நீக்க 'ஸல்பா' (Sulphur) என்னும் மருந்து முக்கியமான ஒன்று. 'ஸிபிலிஸ்' விஷத்தை நீக்க 'மெர்குரியஸ்' (Mercurious) முக்கியமானது. அதேபோல் 'ஸைகோசிஸை' நீக்க 'தூஜா' (Thuja) என்னும் மருந்தும் முக்கியமானது.

இதைத்தவிர 'ஸோரினம்' 'Psorinum', 'க்றபைரிஸ்' `Graphitis' போன்றவை திறமான ஸோராவி' நீக்கிகள். இந்தசமனசிகிச்சை முறைப்படி நோயாளிக்கு மருந்து கொடுத்து சில விநாடிகளிலேயே மனத்தில் ஓர் உற்சாகம் மகிழ்ச்சி தோன்றும். அதே சரியான மருந்து கொடுத்திருப்பதன் அறிகுறியெனக் கருதலாம்! முதலில் மனம் உற்சாகப்படுவதைத் தொடர்ந்து உடம்பில் ஏற்பட்ட நோய் படிப்படியாக நீங்குவதை அவதானிக்கலாம். மருந்து பாவிக்கும் பொழுது நோயாளியின் மனம் கலவரப்பட விடாது பார்த்துக்கொள்வது நோயாளியை பராபரிப்பவர்களின் கடமையாகும். இம்மருந்துகள் உடம்பிலுள்ள எதிர்ப்புச் சக்தியைத் தூண்டிவிட்டு நோயை நீக்கும் தன்மைவாய்ந்தவை. இவை எதுவித ஒவ்வாமையோ பக்கவிளைவுகளோ விளைவிக்கும் தன்மையில்லாதவை. குறிப்பிட்ட நோயை மாற்றாவிடினும் எதுவித பக்கவிளைவும் உண்டாக்காதவை என்னும் காரணத்தால் பல்வேறு நாடுகளிலும் மேல் நாடுகளிலும் கூட இம்மருந்துகளை எவரது 'மருந்து துண்டுகளும்' 'Prescription' இல்லாது பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது என்பதை அவதானிக்கவும். இதன் காரணத்தால் அனேகமான மருந்துக் கடைகளிலும் குறிப்பாக 'ஹோமியோபதி' (Homeopathy' மருந்து கடைகளில் சொற்ப செலவில் இம்மருந்துகளைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த மருந்துகளை குடித்தபின் நீராடினால் மருந்து முறிந்துவிடும். நீராடியபின் மருந்து குடிக்கலாம். கற்பூரவாசனை சகல மருந்துகளையும் முறித்துவிடும்! கடும் வாசனைகளைப் பாவித்தால் மருந்து திறமாகச்செயற்படாது. எனவே தேவைப் படின் சாமானியமான வாசனைகளை சுமார் ஒரு மணித்தியாலங்கழித்து பாவித்தால் பரவாயில்லை. மருந்துகள் குடித்து ஏதாவது வித்தியாசமான அறிகுறிகள் தோன்றினால் கற்பூரத்தை மணந்தால் உடனே மருந்து முறித்துவிடும். அதன்பின் சொற்பநேரம் கழித்து மீண்டும் தகுதியான மருந்தைக்குடிக்கலாம். எந்த மருந்து கொடுத்தாலும் உடனே நோய் கூடியதுபோல் தோன்றினால் அது சரியான மருந்து கொடுத்திருக்கிறது என்பதன் அறிகுறியாகும், அதை சமனசிச்சையில் 'சமனசிகிச்சை தீவிரம்' 'Homeopathic Aggravation' எனப்படும். இப்படி ஏற்பட்டதும் முறிவு மருந்தைக்கொடுத்தால் மருந்து முறிந்துவிடும். ஆனால் சற்று பொறுமையுடன் அவதானித்தால் கூடிய அறிகுறிகள் படிப்படியாக குறைவதை காணலாம். எனவே இப்படி நேரும்பொழுது பொறுமையுடன் சகித்து முறிவைக் கொடுக்காது அவதானித்தால் நோய் படிப்படியாக குணமாவதை கண்கூடாகக் காணலாம். எனவே இந்த வைத்தியத்தில் அதிக அவதானம் தேவை. அவசரம் எதுவித பலனும் தராது. வைத்தியர் மதினுட்பத்துடன் செயற்படுவது அவசியம். உணவு இலகுவானதும் ஜீரணிக்க கூடியதாகவும் எதுவித அஜீரணத்தைக் கொடுக்காததாகவும் இருத்தல் அவசியம். திடீரெனத்தோன்றிய நோய்களுக்கு உணவுவகை இயலுமானவரை திரவமாகப் பருகக் கொடுத்தல் உத்தமம். நாட்பட்ட நோய்களுக்கு தினம் உணவு கொடுக்கலாம். ஆனால் அவை இலகுவில் ஜீரணிக்கும் உணவாக இருத்தல் அவசியம்!.

நோயாளியை இயலுமானவரை சந்தோசமாக இருக்கச்செய்தல் அவசியம். அவருக்கு விரும்பிய நண்பர்கள், உறவினர்கள் அண்மையில் இருப்பது நோய் விரைவில் குணமடைய உதவும். நோயாளி எவ்வளவு சந்தோசமாக இருக்கிறாரோ அவ்வளவு விரைவில் நோய் குணமாகும். அவருக்கு விருப்பமான பாடல்களை வானொலியில் பாடவிடுதல், அவருக்கு விருப்பமான தொலைக்காட்சி முதலியவற்றைக் காட்டுதல் முதலியன நோய்கள் குணமாக பெரிதும் உதவும். சிகிச்சையளிக்கும்போது ஒரு நோயாளி வைத்தியரைக்காணும்பொழுது ஒரு நிலையில் இருப்பார் அதற்கு மருந்து கொடுத்து சில மணித்தியாலங்கள் வேலைசெய்து நோயை படிப்படியாக சீர்செய்தபின் இன்னும் ஓர் நிலை தோன்றும் அதற்கு தகுதியான மருந்தைக் கொடுத்ததும் சில நாளிகையில் படிப்படியாக குணமாகி இன்னும் ஓர் நிலைக்கும் வரலாம். அதற்கு அவரின் நிலையைச்சோதித்து தகுந்த மருந்தை தேர்ந்தெடுத்து கொடுக்க வேண்டும். அது சற்று சீராகியபின் இன்னும் ஓர் நிலை கூடத்தோன்றலாம் அதற்கும் மீண்டும் பரிசீலித்து தகுந்த மருந்தைக் கொடுத்து நோயைக் குணப்படுத்தலாம். உதாரணத்திற்கு ஒரு நோயாளிக்கு திடீரெனத்தோன்றிய கடும், சுரமும் முகம் சிவந்தும், தலையைச்சுற்றி வேர்வையும், பிதற்றலும் காணப்பட்டால் உடனே அதற்கு 'பெலடோனா' (Belladonna) தேவைப்படும். சில மணிநேரம் கழிந்து அந்த நோயாளிக்கு சுரம் நீங்கி நெஞ்சில் கபம் அதிகரித்து பலத்த சத்தத்துடன் சுவாசம் விட்டு மூச்சுத்திணறல் இருந்தால் அவருக்கு 'அன்ரிம் ராற்' (Antim Tart) தேவைப்படும். இதைக்கொடுத்து நெஞ்சில் சழிகுறைந்த பின்பும் நோயாளி அமைதியின்மையால் கலவரமடைந்தால் அவருக்கு 'சமோமிலா' (Chammomila) அல்லது வேறு மருந்துகளாகிய 'இக்னேசியா' (Ignatia) அல்லது 'ஹெப்பர் ஸல்ப்' (Hepar Sulph) போன்ற மருந்துகளைக் கொடுத்து நோயைப் பூரணமாகக் குணப்படுத்தலாம். இன்னும் சில நாட்பட்ட நோய்களுக்கு ஸோரா (Psora) விசத்தை அல்லது சிபிலிஸ் (Syphilis) விசத்தை அல்லது ஸைகோசிஸ் (Sycosis) விசத்தை நீக்க ஒரு மருந்தைக்கொடுத்து சில நாட்கள், ஏன் சிலருக்கு சில மாதங்கள் கூட ஆகலாம். அதை நன்கு வேலை செய்யவிட்டு அதன்பின் உடல் வாகுக்கு ஏற்ற மருந்தை கொடுத்து அது ஏற்படுத்தும் மாற்றங்களை நன்கு கவனித்து அதன்பின் தகுதியான மருந்துகளைக் கொடுத்து படிப்படியாக நோயை குணப்படுத்தலாம். பல நோய்களும் ஒரு மருந்தில் குணமாகி விடும் என எண்ணுவது தவறு. திடீரெனத்தோன்றும் நோய்கள் சிலமணி நேரத்திலும் நாட்பட்ட நோய்கள் சில நாட்கள் அல்லது சில கிழமைகள் அல்லது சிலமாதங்கள் சென்றும் குணமாகும். இதைக்கருத்தில் கொண்டு செயற்படுதல் வைத்தியர்களின் தலையாய கடனாகும். நோயாளிகளும் ஏனைய நோயாளியில் அக்கறையுள்ள உறவினரும் இந்த உண்மையை உணர்ந்து கொள்தல் அவசியம், சில திடீரெனத் தோன்றிய நோய்கள் ஒரு மருந்திலும் குணமாகலாம்.

ஆனால் பலநோய்களும் மேற்குறிப்பிட்ட முறையில் சிகிச்சை யளித்தாலே பூரண குணமாகும் என்பதை உணர்ந்து செயற்பட்டால் அதிக நற்பயன் கிடைக்கும் என்பது எமது அனுபவம்!.




**டாக்டர். சி.வ. பரராஜசிங்கம்,** PPh.D
Holistic Practitioner (Canada)
Nutrition & Fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை -
Tel. - 416.291.3022 /E.Mail -
DRVPS@Hotmail.com



**SHAWN TRUCK & FORKLIFT**
**DRIVING SCHOOL**

Excellent Quality - Low Cost Training

Truck licence A-Z
From $599.00



In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.



Air brake

Fork Lift licence
From $75.00

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: *Pl. Call: Raja / Shan*

**416.913.9574/416.829.0603**

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# ஆறுபடை வீடுகள் - 2

## தமிழ்நாடு சுற்றுலாத்தலங்கள்- 27

தண்டமிழ்க் கடவுள் செந்தமிழ் முருகன் கோயில் கொண்டுள்ள படைவீடுகள் ஆறில் மூன்றைக் கடந்த இதழில் பார்த்தோம். பழனி, திருச்செந்தூர், திருத்தணி ஆகிய மூன்றைப் போலவே, திருப்பரங்குன்றம், சுவாமிமலை, பழமுதிர்சோலை ஆகிய மூன்றும்கூட தமிழர்கள் வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளவை. லட்சக்கணக்கான பக்தர்களை தன்னை நோக்கி ஈர்த்துக்கொண்டே இருக்கும் திருத்தலங்கள். ஒவ்வொன்றாகப் பார்ப்போம்...

## திருப்பரங்குன்றம்



ஆறுபடை வீடுகளில் முதல் வீடாக அமைந்த சிறப்புப் பெற்ற இத்தலம். திருப்பரங்குன்றத்தில் இந்திரன் புதல்வியான தெய்வானையை மணம் புரிந்து புதுமணக் கோலத்துடன் காட்சி தருகின்றார் முருகன். இந்திரனே முன்னின்று பங்குனி உத்திர நாளில் மணம் செய்வித்ததாக புராணம் கூறுகிறது. மலையிலேயே குடைந்து வடிக்கப் பெற்ற அழகிய திருவுருவமாக வடக்கு நோக்கி அமர்ந்த கோலத்தில் முருகன் காட்சி தருகின்றார். அருகில் தெய்வயானையும் அமர்ந்துள்ளார். சூரியன், சந்திரன், சித்தர், வித்யாதரர், பிரம்மா, இந்திரன், நாரதர், கலைமகள், தேவர்கள் உள்ளிட்ட அனைத்து தெய்வங்களும் இத்திருமணத்தைக் கண்டுகளிக்கும் வகையில் இங்கே எழுந்தருளியுள்ளதாக ஐதீகம். எனவே, திருப்பரங்குன்றம் பங்குனி உத்திரம் மிக விசேடமானது.

திருப்பரங்குன்றத்தில் சுமார் 300 அடி உயரக் குன்றின் மீது உள்ளது முருகனின் ஆலயம். கடல் மட்டத்திற்கு மேல் 1050 அடிகள். சுமார் இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவு கொண்ட இம்மலை, சிவலிங்க வடிவில் அமைந்ததனால் பரங்குன்று எனப்பெயர் பெற்றது என்கிறார்கள். இங்கு, கோபுரவாயிலுக்கு முன்பக்கம் அமைந்துள்ள சுந்தரபாண்டியன் மண்டபம் மிகவும் பிரசித்தமானது. 66 தூண்களைக் கொண்டது. சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் கலைச் சிறப்புடன் அமைந்துள்ளது. மேலும், ஏழு நிலைகளைக் கொண்ட ராஜகோபுரமும் பார்க்க வேண்டியது. ராஜகோபுரம் அருகிலேயே இலட்சுமி தீர்த்தமும் பிரம்மனால் உண்டாக்கப்பட்ட பிரம்மகூடம் என்னும் சந்நியாசிக் கிணறும் உள்ளன. கோபுரம் கடந்ததும் எதிர்படும் கொடிமரத்தில் மயில், நந்தி, மூஷிகம் ஆகிய மூன்று வாகனங்கள் மிக அழகுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கொடிமரத்தைக் கடந்தால்... முருகனின் சந்நிதி, கருவறை குடவரைக் கோயிலாகக் காட்சி தருகின்றது. இங்கே முருகனின் ஆடு, சேவல், யானை, மயில் ஆகிய நான்கும் கீழே காணப் பெறுகின்றன. படை வீடுகளில் இங்கு மட்டுமே பெருமான் இடக்காலை மடித்து, வலக்காலை தொங்கவிட்டு, இடப்பக்கம் தெய்வானையும், வலப்பக்கம் நாரதரும் அமர்ந்துள்ள நிலையில் காட்சி தருகின்றார் என்பது திருப்பரங்குன்றத்தின் தனிச்சிறப்புகளில் ஒன்று. பிற வீடுகளில் நின்ற திருக்கோலத்திலேயே காட்சி தருகின்றார். மும்மூர்த்திகளும் எழுந்தருளியுள்ளதால் பக்த ஸ்தலங்களில் இத்தலம் கயிலைக்கு அடுத்த சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இங்குள்ள மலையடிவாரத்தின் கிழக்கே சரவணப் பொய்கை உள்ளது. அதன் அருகே உள்ள பாறை "பஞ்சாட்சரப் பாறை" எனப்படும்.

திருப்பரங்குன்றத்தில் நக்கீரனுக்கு தனி ஆலயம் உள்ளது. இத்தலச் சிவன் "சத்திகிரீசுவரர் சனி சந்திரி அன்னபூரணி தேவி" பரிவாரங்களுடன் குகைக் கோவிலில் காட்சி தருகிறார். கொற்றவை, விநாயகர், திருமால், சிவன், உக்கிர நரசிம்மர், வைகுந்தநாதன், வராகப் பெருமாள் சந்நிதிகள் உள்ளன. இங்குள்ள உமையாண்டவர் கோயில் சிற்பக் கலைக்குச் சிறந்த இடமாக உள்ளது. மலைமேல் பஞ்சாண்டவர் படுக்கையும் அணையும் உள்ளன. மலை உச்சியில் இரு பாறைகட்கு இடையே " சிக்கந்தர் பாவா" என்னும் முகமதியரின் சமாதியும், மண்டபமும் உள்ளன. புரட்டாசி மாதம் நவராத்திரிக்கு முன்பாக, வேலாயுதத்தை மலை உச்சிக்குக் கொண்டு செல்வர். அதற்கான வைபவம் மிக பிரமாண்டமாக கொண்டாடப்படும். முருகப் பெருமான் தேவசேனாதேவிய மணந்த பங்குனி உத்திரத் திருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

## சுவாமிமலை



இது நான்காவது படைவீடாகும். திருஏரகம், குருமலை என்னும் பல பெயர்களிலும் சுவாமிமலை குறிப்பிடப்படுகிறது. அடியவர் தம் மனதை ஏர் கொண்டு உழுது அன்பு என்னும் பயிரை வளர்க்கும் முருகன் அமர்ந்த இடமாதலால் "ஏரகம்" எனப் பெயர் பெற்றது என்கிறார்கள். சுவாமியாகிய சிவனுக்குக் குருவாக இருந்தும் "ஓம்" என்னும் பிரணவ மந்திரத்திற்குப் பொருள் கூறியமையால் "சுவாமிமலை" என்னும் பெயரும் உண்டானது. தந்தைக்கு உபதேசம் செய்தமையால் முருகன் "தகப்பன் சாமி" எனப் பெயர் பெற காரணமான தலம் சுவாமிமலை.

சுவாமிமலையில், முருகப் பெருமான் கட்டுமலை மீது கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். சுவாமிநாதனின் முன்பு மயில் இல்லை, பதிலாக யானை உள்ளது. இக்கோயில் மூன்று பிரகாரங்களுடனும் மூன்று திருக்கோபுரங்களுடனும் விளங்குகிறது. கட்டுமலை மேல் அமைந்த திருக்கோயிலுக்கு 60 படிகள் உள்ளன. அறுபது படிகளும் தமிழ் வருடங்களைக் குறிக்கும் 60 அதி தேவதைகள் என்பது ஐதீகம். ஒவ்வொரு படிக்கும் ஒவ்வொரு தமிழாண்டின் பெயர்களை எழுதியுள்ளனர்.

பார்வதி தேவியின் சாபத்திற்கு ஆளான பூமாதேவி இங்கு சுவாமிநாதனை வழிபட்டு சாப விமோசனம் பெற்றார் என்கிறது புராணம். மலையடிவாரத்தில் தலைமரமாக நெல்லிமரம் உள்ளது. படிக்கட்டில் நேத்திர விநாயகர் உள்ளார். சுவாமிநாதப் பெருமான் திருக்கை வேலினால் உருவாக்கப்பட்டது என்பது ஐதீகம். இது நேத்திரத் தீர்த்தம் என்றும் சுவாமி தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது. சுவாமிமலையின் கீழ்க் கோவிலாக அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சி உடனுறை சுந்தரேஸ்வரப் பெருமான் சன்னதியும் பிரபலமானது.

சுவாமிமலையில் சஷ்டி, விசாகம், கிருத்திகை, சித்திரப் பெருவிழா, பங்குனிப் பெருவிழா ஆகிய விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

## பழமுதிர்சோலை



முருகனின் ஆறாவது படைவீடு இத்தலம். சைவத்திற்கும் வைணவத்திற்கும் ஒரு சேர, ஒரே தலமாக அமைந்தது பழமுதிர்சோலை. ஔவையாரிடம் மாடு மேய்க்கும் சிறுவன் வடிவில் தோன்றிய முருகன், "சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?" என கேட்ட தலம் இதுதான். எனவேதான், "பழம் - உதிர் - சோலை" எனப் பெயர் என்கிறது தல புராணம். இங்கே, முருகன் நின்றகோலத்தில் வள்ளி - தேவசேனாதேவியருடன் எழுந்தருளியுள்ளார். திருமாலிருஞ்சோலை, விருஷபகிரி என்றும் இத்தலம் வழங்கப்படுகிறது.

திருப்பரங்குன்றத்தை முதல் வீடாகக் கொண்ட முருகன், சுற்றிவந்து கடைசியில் பழமுதிர்சோலையை கடைவீடாகக் கொண்டான் என்பது ஐதீகம். ஆறுபடை வீடுகளில் மூன்று படை வீடுகள் மதுரையைச் சுற்றியே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மதுரையில் பிரசித்தி பெற்ற அழகர்கோயில் மலையில் மலை உச்சியில் பழமுதிர்சோலை அமைந்துள்ளது. மலையடிவாரத்தில் அழகர்கோயில் உள்ளது. மலையின் தென்புற அடிவாரத்தில் திருமால் கள்ளழகராக சங்கு, சக்கரம், வில், வாள், கதாயுதம் போன்ற பஞ்சாயுதங்களைத் தாங்கி இரு தேவியருடன் காட்சி தருகிறார். இங்கு திருமாலே, கருப்பண்ணசாமியாகவும் விளங்குகிறார். பதினெட்டாம் படி கோபுரம், மலைமீது உள்ள சிலம்பாறு தீர்த்தம் ஆகியவை பழமுதிர்சோலையில் பிரசித்தமானவை. சிலம்பாறு தீர்த்தத்தை நூபுர கங்கை என்றும் சொல்கிறார்கள். இது திருமாலின் சங்கிலிருந்து உற்பத்தியாவதாக ஐதிகம். திருப்புகழில் பாடல் பெற்ற தலம் பழமுதிர்சோலை.

### எப்படி செல்வது? எங்கே தங்குவது?

திருப்பரங்குன்றம், மதுரைக்கு தென்மேற்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளது. மதுரையில் இருந்து பத்து நிமிட பிரயாணம். மதுரையில் இருந்து தென்மார்க்கமாக நாகர்கோவில், கன்னியாகுமரி, திருநெல்வேலி செல்லும் அனைத்து பேருந்துகளும் திருப்பரங்குன்றம் கடந்துதான் செல்லும். திருப்பரங்குன்றத்தில் தங்குவதுக்கு நல்ல தங்கும் விடுதிகள் கிடையாது. எனவே, மதுரையிலேயே தங்கி வந்து செல்வது நல்லது. சாப்பாட்டுக்கும் மதுரையே சிறந்தது. மதுரையில் கோனார் மெஸ், அம்மா மெஸ், முருகன் இட்லி கடை போன்றவைகளின் சுவையான உணவுகள் பிரசித்தமானது.

சுவாமிமலை, கும்பகோணத்திற்கு மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணத்தில் இருந்து அடிக்கடி பேருந்துகள் இயக்கப்படுகிறது. மிகக் குறைவான தூரம்தான் என்பதால் ஆட்டோ, டாக்சி போன்றவற்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டும் செல்லலாம். கும்பகோணத்தில் எல்லா தரத்திலும் மிகச் சிறந்த தங்கும் விடுதிகளும் உணவகங்களும் உள்ளன. கும்பகோணத்தில் தங்கினால் கும்பகோணம் காப்பி, கும்பகோணம் கோயில் தரிசனமும் கிடக்கும்.

பழமுதிர்சோலை, மதுரைக்கு வடக்கே 20 கி.மீ. தொலைவில் உள்ளது. மதுரையில் இருந்து அடிக்கடி அழகர் கோயிலுக்கும் பழமுதிர்சோலைக்கும் பேருந்து போக்குவரத்து வசதி உள்ளது. அழகர் கோயிலை தரிசித்துவிட்டு, படி ஏறி பழமுதிர்சோலை செல்வது நல்ல அனுபவமாக இருக்கும்.

**வழிப்போக்கன்**




# வெகு தூரத்திலுள்ள வான்மண்டல வெளியில் புதியதொரு விண்மீன் பிறந்துள்ளது

## கிரேட்டர் ரொறொன்ரோ பகுதியில் மிகப் பெரியதோர் உள்ளகச் சிறப்பங்காடி.




எப்போதும் ஒளிவீசுவது; எப்போதும் பளபளப்பாக விளங்குவது **சித்தாரா**வின் சிறப்புக் கூறுகள்

- வட அமெரிக்காவில் இவ்வகைகளுள் ஒன்று – 240,000 ச.அடி பரப்புக்கு மேல் வாய்ப்புகள் பலவற்றை அளிக்கும் 500க்கும் மேற்பட்ட பலவகைக் கடைகள்
- ஸ்கார்பரோவில் மார்க்கம் சாலையின் முக்கிய பகுதியில் அமைந்துள்ளது
- கனடாவின் மிகப்பெரிய விருந்தினர் கூடங்களுள் ஒன்று உட்கூரையின் உயரம் 40 அடி; பரப்பு 46,000 ச.அடி அளவுக்கு மேல் விருந்தினர்கள் 1000 பேருக்கு மேல் இடம் உண்டு
- விருந்தினர்கள் 500 பேரை மகிழ்விக்க நவீன மேடையுன் கூடிய உயர்ந்த மையக்கூடம்
- நிலத்தடியில் இரண்டு அடுக்கு கார் நிறுத்துமிடத்தில் 1000 கார்களுக்கு மேல் நிறுத்தலாம்
- இரண்டாம் தளத்தில் ஓய்வு முற்றங்கள்



Developer

Tai Foong Property Development Limited Partnership

Exclusive Brokerage

HomeLife GTA Realty Inc. Brokerage

Star Line 416.321.6969

TheSitara.com

# இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பொப் ரே (Bob Rae) உரையாற்றுகிறார்



இலங்கையில் சமாதானமும் சமாதானத்திற்கான அடிப்படைகளும் என்ற கருத்தரங்கை சமாதானத்திற்கான கனேடியர்கள் ( Canadians for Peace) என்ற அமைப்பு ஒழுங்கு செய்துள்ளது. எந்தவித அரசியல் கட்சிகளின் சார்பும் இன்றி, கனடாவாழ் தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பு இலங்கையில் வாழும் தமிழர், முஸ்லீம், மலையக மக்களுக்கு நீதியான, கௌரவமான, நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கோரி கனடாவில் செயல்படத் தீர்மானித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஒன்டோரியாவின் முன்னை நாள் முதல்வரும், தற்போது லிபரல் கட்சியின் முக்கியத்துவம் வாய்ந்த Foreign affairs critic க்கும், லிபரல் கட்சி பதவிக்கு வந்தால் வெளிநாட்டு அமைச்சராக பதவி ஏற்கலாம் என்றும் சிலாகிக்கப்படுகின்ற அரசியல் வாதியான பொப் ரே கலந்து கொண்டு பேச இருக்கின்றார். இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக அங்குலம் அங்குலமாக தெரிந்து வைத்திருக்கும் பொப் ரே, இலங்கைத் தமிழருக்கு நீதியான, நியாயமான, கௌரவமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் தெளிவாக உள்ளார். இலங்கைப் பிரச்சினை மட்டும் இன்றி பல நாடுகளின் பிரச்சினைகள் தொடர்பாக பொப் ரே செயல்பட்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சமாதானத்திற்கான கூட்டத்தில் ஜேர்மனியில் இருந்து பரா குமாரசாமியும், இலண்டனில் இருந்து உபாலி கூரே என்பவரும் கலந்து கொள்ளுகின்றனர். இவர்கள் தமது நாடுகளில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று தொடர்ச்சியாக பணியாற்றி வருகின்றார்கள்.

இந்த பொதுக் கூட்டம் நவம்பர் 10, 2007 – மாலை 3.00 மணிக்கு ரொறன்டோ கனடாவில் ஸ்காபரோ சிவிக் சென்றறில் (Scarborough Civic Centre, Mc Cowan & Ellesmere, 150 Borough Drive , Toronto) நடைபெறவுள்ளது.

இலங்கையில் பல தசாப்தங்களாக தீர்க்கப்படாத விடயமாக தேசிய இனங்களின் பிரச்சினை இருந்து வருகின்றது. இது தீர்க்கப்படாத காரணத்தால் இலங்கையில் இரத்த ஆறு ஓடுகின்றது. தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படும் வரை இந் நிலைமை தொடரும் என்பது சந்தேகமில்லை.

இலங்கை அரசியலில் ஐக்கிய நாடுகள் சபை தனது கவனத்தை செலுத்த ஆரம்பித்துள்ள நிலையில் கனடாவின் முக்கிய அரசியல் வாதி ஒருவர் இலங்கை பிரச்சினை தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்வது ஒரு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தக் கூட்டத்திற்கு இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த விரும்புகின்ற அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர் என்று அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

“சமாதானத்திற்கான கனேடியர்கள்” அமைப்பு தொடர்ந்து சமாதானத்திற்காக காத்திரமாக செயல்படும். இதற்கான இவ்வமைப்பு பல திட்டங்களை வகுத்துள்ளது” என்றும் இந்த அமைப்பின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு:

canadiansforpeace@gmail.com

செழியன்: chelian@rogers.com
416-792 2188

ரஞ்சித்: rsbandulahewa@gmail.com
416-621 0824


## முதலீடு இல்லாமல் (0% Down) எப்படி வீடு வாங்கலாம்?

- வீடு வாங்குவதற்கு முதலிட முற்பணம் இல்லை என்று கவலைப்படுகிறீர்களா?
- வங்கிகள் இப்போது வீடு வாங்கும்போது வீட்டின் விலையின் முழுத்தொகையையும் கடனாகத் தரத் தயாராய் உள்ளன.
- நீங்கள் முதன் முறையாக வீடு வாங்குபவராக இருக்கலாம் அல்லது ஏற்கனவே ஒரு வீட்டுக்கு சொந்தக்காரனாகக் கூட இருந்திருக்கலாம்.
- இப்படியான ஒரு கடனைப் பெற உங்களுக்கு என்னமாதிரியான தகுதிகள் தேவை என்பதை அறிந்து கொள்ள வேண்டுமா?
- இத்துறையில் பல ஆண்டு கால அனுபவமுள்ளவர்களினால் இது பற்றிய தகவல்கள் கொண்ட ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையை இலவசமாகப் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம். **416-284-9999** Ext 21 (தமிழ்) Ext 34 (English)



## For All Your Real Estate Needs..

SOLD FOR SALE

**South Asian Indoor Mall**



## “Friendly & Professional”




- Newer Home on a premium lot
- 9’ ceiling on main floor
- Open concept with wrap around porch
- Close to schools, Durham University
- Call **Jayanthi** For Details....




- Gorgeous Mattamy Home on a Quiet & Child Safe Area
- Over $30,000 in upgrades
- Hardwood Floor in Liv/Dining
- High end Appliances
- Call **Jayanthi** For Details....



**வீடு விற்பவர்களினதும் - வாங்குபவர்களினதும் கவனயீர்ப்பு!**

1. **Structural Damage** - அத்திவாரம் காலத்துடன் இறங்கும்போது கதவுகளை பூட்டுவது கஷ்டமாக இருக்கும். தாங்கும் வளைகள் வளையத் தொடங்கலாம். இறுதியில் வீட்டின் நிலையே அபாயமாகலாம்.
2. **Leaky Roof** - தகுதியுள்ள கட்டிட வேலையால் அல்லது வயதான கூரையின் Shingles இனால் தண்ணீர் வீட்டிற்குள் செல்லலாம். இதனால் பெரிய வேலை ஏற்படலாம். Shingle மாற்றம் தேவைப்படலாம். அல்லது கூரையையே மாற்றவேண்டி ஏற்படலாம். தொடரும்

**Jayanthi Sritharan**
Sales Representative
**416.918.5872**
Email:sritharanj@rogers.com

**HomeLife GTA Realty Inc., Brokerage***
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
**Tel: 416.321.6969** **Fax: 416.321.6963**

HOMELIFE HIGHER STANDARDS

This is not intend to solicit properties currently listed for sale
** some conditions may apply
*Each office independently owned and operated

# இடுகுறியும் காரணமும்

## ஓடும் நீர் உறைவதில்லை 47

சாதாரணமாக நாம் ஒவ்வொருவரும் விடயங்களைப் பொதுமைப்படுத்துவது வழக்கம். நமது மேலோட்டமான பார்வைக்கு அவை ஒரேமாதிரியாக இருப்பதுபோல் தோன்றுவதும் மிக இலகுவில் இனங்கண்டு கொள்வதற்குச் சுலபமாக அமைவதும் அதற்கான காரணங்களாகின்றன. மனிதன், மிருகம், மலை, மரம், ஆறு, குளம் எனப் பொதுவான வார்த்தைகளால் அவற்றை இனங்கண்டு கொள்கிறோம். அத்துடன் எண்ணில் அடங்காத உயிரினங்களும் பொருட்களும் இவ்வுலகில் இருப்பதனால் அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாகப் பெயர்சூட்டுவது இயலாத காரியமாகும். உதாரணமாக மீன் என்ற பொதுமைக்குள் வாழுகின்ற சகல மீன்களையும் தனித்தனியாகப் சிறப்புப்பெயர் கொண்டு இனங்காண முயற்சிப்பது முடியாத காரியமே. இதனால் தான் மனிதப்பிறவியைத் தவிர ஏனையவை சிறப்புப் பெயரால் தனித்தனியாக அழைக்கப்படுவதில்லை.

தனிச்சிறப்புக் குறியீட்டுப் பெயர்கள் மனிதனுக்கு மனிதன் ஏதோ ஒரு வேறுபாட்டைக் காட்ட வேண்டும் என்பதன் அடிப்படையில் சூட்டப்படுகின்றன. இதனால் தான் குழந்தைகள் பிறந்தவுடன் பெயரிடுவது முக்கியமாகின்றது. அதுமட்டுமல்ல ஒரே பெற்றோருக்குப் பிறக்கும் ஒரே இனக்குழந்தைகள் (ஆண் அல்லது பெண்) வெவ்வேறு பெயர்சூட்டப்பட்டு அழைக்கப்படுகிறார்கள். இவ்வாறு ஒரே பெற்றோரின் ஒரே இனக் (ஆண் அல்லது பெண்) குழந்தைகளை வெவ்வேறு பெயரிட்டு அழைப்பதன் நோக்கம் உடலியல் ரீதியில் அவர்களை இனங்காண்பது அதாவது உருவ அமைப்பில் அவர்களை இனம்காண்பது கடினமானது என்பதற்காகவல்ல. உளவியல் ரீதியில் உள்ளவேறுபாட்டின் வெளிப்பாடாக அமைவதே. ஏனெனில் மனிதன் என்பது பொதுமைப்படுத்தப்பட்டிருப்பினும் ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவன் என்பது உளவியல் சார்ந்ததே.

நாம் பொதுமைப்படுத்தும் ஒவ்வொரு உயிரினமும் முதலில் மிகப்பெரிய குழுவாகப் பிரிக்கப்படுகின்றது. அதாவது மனிதன், மிருகம், மலை, ஆறு, கடல் எனப் பொதுமைப்படுத்தப் பட்டுப் பின்னர் அவை பல்வேறு உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் பொதுமைப்படுத்தப்படுகின்றன. இந்த உபபிரிவுகள் பூகோள ரீதியாக வரையறுக்கப்படும் போது சிறிது சிறப்புப் பிரிவாக அமைகின்றது. அமெரிக்கன், ஆசியன், அவுஸ்திரேலியன், ஐரோப்பியன், ஆபிரிக்கன் என மீண்டும் பொதுமைப்படுத்தப்படுகின்றது. இங்கே பூகோள ரீதியான பொதுமைப்படுத்தல் மனிதன் என்ற பொதுமைப்படுத்தலை மேலும் சிறப்புப் பொதுமைப்படுத்தலாக மாற்றுகின்றது. இதே போன்றே ஆபிரிக்கச் சிங்கம் எனும்போது முதலில் மிருகம் என்றும் அடுத்து சிங்கம் என்றும் அதன் பின்னர் அதன் பூகோள அடிப்படையில் ஆபிரிக்கச் சிங்கம் என்றும் வகைப்படுத்தப் படுகின்றது.

மனிதனும், மனிதன் என்ற பொதுமைப்படுத்தலில் இருந்து பல்வேறு பிரிவுகளுக்குள் மீண்டும் பொதுமைப்படுத்தப்படுகின்றான். உதாரணமாக மனிதன் வடஅமெரிக்கன், கனேடியன் என்றும் பின்னர் கனடாவில் வாழும் இடத்தைப் பொறுத்து அந்த மாகாணத்தின் பிரஜை என்றும் அதன் பின்னர் அவன் வாழுகின்ற நகரத்தைச் சார்ந்தும் எனப்பல உபகூறுகளாக வகைப்படுத்தப்படுகிறான். இந்த உபகூறுகள் பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் மேலும் வகைப்படுத்தப்பட்டு இறுதியில் ஒருவரது பெயருடன் பூர்த்தியாகின்றது. இங்கே குறியீட்டுப் பெயர் எனக் குறிப்பிடப்படுவதற்கான காரணம் நம் ஒவ்வொருவரது பெயரும் ஒரு காரணத்தை அடிப்படையாக வைத்து சூட்டப்படுவதில்லை. அதாவது காரணப் பெயராக அல்லாமல் இடுகுறிப் பெயராகவே அமைகின்றது. இதற்கான அடிப்படைக்காரணம் நாம் இந்த உலகத்திற்கு வரும்போது என்ன காரணத்திற்காக வந்தோம் என்பதைப் பெற்றோர்களாலும் வரையறுக்க முடிவதில்லை. இதனால்தான் நமது பெயர் ஒரு குறியீடாக மட்டுமே அமைக்கப்படுகின்றது. இவ்வாறே மரம், மாடு, பாம்பு, கோழி, குரங்கு, குதிரை என்பனவும் அமைகின்றன. அதாவது இப்பெயர்கள் காரணத்தை அல்லது காரியத்தை அடிப்படையாக கொண்டு சூட்டப்படுவதில்லை. மனிதன் ஒவ்வொருவரும் சிறப்புப் பெயர் மூலம் அழைக்கப்படுவது போல் ஏனைய உயிரினங்கள்



அழைக்கப்படுவதில்லையாயினும் சில வீட்டுப்பிராணிகள் செல்லமாகப் பெயரிடப்பட்டு இனங்காணப்படுகின்றன. வீட்டில் வளர்க்கும் நாய்க்கு ஒரு பெயரை இட்டு அப்பெயரை அழைப்பதன் மூலம் அந்த நாயின் கவனத்தைப் பெறமுடிகின்றது. ஒருவரது பெயரை அழைப்பதன் மூலம் அவரது கவனத்தைக் கவருவது போல் ஒரு நாயின் பெயரை அழைப்பதன் மூலம் அதனது கவனத்தையும் கவரமுடிகிறது. இதற்கிணங்க நாம் நோக்கும்போது ஒருவருடைய அல்லது ஒன்றினது பெயர் கவன ஈர்ப்புக்கான ஒரு குறியீடு என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

இப்போது ஒன்றைப் பொதுமைப்படுத்துவதில் இருந்து சிறப்புக் குறியீடுவரைக்கும் நாம் வகைப்படுத்தும் போது சிறப்புக் குறியீட்டுக்கு உட்படும் ஒருவர் அல்லது ஒன்று அதன் தனித்துவத்தை வெளிப்படுத்துவதைக் காணலாம். இந்தத் தனித்துவம் தான் ஒரு மனிதனை இனம், மதம், மொழி என்பவற்றின் அடிப்படையிலும் பூகோள ரீதியான வரையறைகளின் அடிப்படையிலும் சிறப்பாகக் குறிப்பிடுவதைக் காணலாம். இந்த வகையான சிறப்பு முத்திரைகள் மற்றவர்களுடன் ஒப்பீடு செய்யக்கூடிய வாய்ப்புக்களைக் கொடுப்பது தனித்துவமும் சிறப்பும் மிக்க மனிதன் மற்றவர்களுடன் ஒப்பீடு செய்து ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்படுவதையும் உருவாக்குகின்றது.

இப்போது பொதுமைப்படுத்தலையும், பொதுமைப்படுத்தலில் இருந்து விரிவுபட்டுச் சிறப்புப்படுத்தலையும் அவ்வாறு சிறப்புப்படுத்துவது ஒன்றின் அல்லது ஒருவரது தனித்துவத்தை வெளிப்படுத்துவதேயாகும். அதே நேரத்தில் ஒப்பீட்டுக்கு வழிவகுப்பதன் மூலம் ஏற்றத்தாழ்வுகள் இடம்பெறுவதையும் அவதானித்தோம். அதேவேளை ஒருவருக்கு இடப்படும் பெயர் இடுகுறிப்பெயர் என்றும் இந்த இடுகுறிப்பெயர் மனிதனுக்கான சிறப்புக் குறியீடு என்றும் கண்டோம். இந்த இடுகுறிப்பெயர் எந்தக் காரணத்தையும் காரியத்தையும் அடிப்படையாகக் கொண்டு சூட்டப்படுவதில்லை என்பதையும் கண்டோம். இப்போது இந்த இடுகுறிப் பெயரைக் காரணப் பெயராக்கக் கூடிய வாய்ப்பு வாழ்வியலில் நம் ஒருவருக்கும் ஏற்றத் தாழ்வின்றிச் சமமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பது உறுதியானதாகும்.

எப்படி இடுகுறிப்பெயரைக் காரணப் பெயராக்கமுடியும்? இதற்குப் பலவழிகள் இருக்கின்றன. கல்விசார்ந்ததுறையில் குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் இந்தக் காரணப் பெயரைச் சொந்தமாக்குகிறார்கள். உதாரணமாக, வைத்தியர் வரதராசன், சட்டத்தரணி சாம்பசிவம், கணக்காளர் கந்தையா, முதலாளி முத்தையா என்பன இடுகுறிப்பெயருக்கு அடையாக அமைந்து காரணப்பெயராக மாறுவதைக் காணலாம். இப்போது மிக முக்கியமான ஒருவிடயத்தை நாம் கவனித்தல் வேண்டும். அதாவது காரணப் பெயர்களும் பொதுமைப்படுத்தப் பட்டவையே. ஆனால் இக்காரணப் பெயர்கள் ஒருபொழுதும் தனிமைப்படுத்தப்பட்டுக் குறிப்பிடப்படுவதில்லை. ஏனெனில் அவை ஒரு குழுவுக்கான அல்லது கூட்டத்திற்கான பொதுப்பெயர், உதாரணமாக, ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று வைத்தியர், சட்டத்தரணி, கணக்காளர் போன்ற தொழில் சார்ந்தவையும் நல்லர்கள், கெட்டவர்கள், நேர்மையானவர்கள் போன்ற மனோபாவ அடிப்படையில் அமைபவையும் பொதுமைப் படுத்தப்பட்ட காரணப்பெயர்களாகும். இங்கு பொதுமைப்படுத்தப்பட்டுள்ள காரணப்பெயர் இடுகுறிப்பெயருடன் இணைக்கப்பட்டுத் தனித்துவப்படுத்துவதன் மூலம் இடுகுறிப்பெயரின் சிறப்பை அல்லது சிறப்பின்மையை வெளிப்படுத்துகின்றது. உதாரணமாக, பணிவான பரமசிவம், நேர்மையான நீலகண்டன், கள்ளக்கந்தசாமி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு நாம் குறிப்பிடும்போது அவ்வாறு குறிப்பிடப்படுபவர் ஏதோ ஒருவகையில் நமக்கு அறிமுகமானவர் என்பதும் அவசியமாகின்றது. அப்போதுதான் யார் அந்தப்பணிவான பரமசிவம் என்பது எமக்குப் புரியும். ஏனெனில் பரமசிவம் என்ற பெயரைக் கொண்டவர்கள் அனைவரும் பணிவானர்கள் அல்ல.

உண்மையில் இந்த கட்டுரையின் நோக்கம் பொதுமையாக்கப்பட்ட ஒன்று ஆழமாகச் சென்று இடுகுறிப்பெயரால் சிறப்புப் பெறுவதையும் அவ்வாறு சிறப்புப் பெறும் இடுகுறிப்பெயர் மேலும் சிறப்புப்பெற உயர்வான காரணப் பெயர்கள் அவற்றை அலங்கரிக்க வேண்டும் என்பதையும் அடிப்படையாகக் கொண்டது. நாம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். உடலியல் உளவியல் ரீதியில் முற்றிலும் மற்றவர்களிடம் இருந்து வேறுபட்டவர்கள். ஆண், பெண் என்று உடல் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு பொதுமைப்படுத்தப்பட்டிருக்கின்றோம். ஆனால் ஒவ்வொரு ஆணும் மற்றைய ஆண்களில் இருந்தும் ஒவ்வொரு பெண்ணும் மற்றைய பெண்களில் இருந்தும் வேறுபடுகின்றோம். இதனால் தான் மனிதர் ஒவ்வொருவரதும் தனித்துவமானவர் எனப்படுகின்றார். இந்தத் தனித்துவத்தின் அத்திவாரமாக அமைவது ஒருவரது உடல் மட்டுமல்ல அவரது உள்ளமும் தான்.

ஒவ்வொரு மனிதனது உடலும் உள்ளமும் மற்றவரில் இருந்து வேறுபடுகின்றது. எனினும் ஒருவரது உடல் சம்பந்தமாக அவரால் அறியப்படாத எத்தனையோ விடயங்கள் நவீன விஞ்ஞான வைத்தியத்துறைகளால் கண்டு பிடிக்கப்படுகின்றன. அதாவது ஒருவரது உடல்சம்பந்தமான விடயம் மற்றவர்களால் அறியக்கூடியவை. ஆனால் உள்ளம் சம்பந்தமானது அவரால் மட்டுமே அறியப்படக் கூடியது. ஒருவரது சிந்தனை, சொல், செயல் என்பன அவரது உள்ளத்தின் வெளிப்பாடே. இந்த வெளிப்பாடே ஒருவரது மனோபாவத்தையும் குணாதிசயத்தையும் மற்றவர்களுக்குப் புலப்படுத்துகின்றது.

இப்போது நம் ஒவ்வொருவருக்கும் இடப்பட்டுள்ள அதாவது பெற்றோரால் சூட்டப்பட்ட பெயரை இடுகுறிப் பெயரைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். நாம் பிறந்தவுடன் சூட்டப்படும் இந்தப் பெயர் நம்மை மற்றவர்கள் அடையாளம் கண்டு கொள்வதை இலகுவாக்குவதற்கு உதவுகின்றது. அதே நேரத்தில் நமக்கும் நம்மை இலகுவில் கவன ஈர்ப்புக்குள் உட்படுத்தவும் உதவுகிறது. ஒரு கூட்டத்தில் நிற்கும் போது நமது பெயரைச் சொல்லி ஒருவர் அழைக்கும் போது அது நான் தான் என்பதை இலகுபடுத்த முடிகின்றது. இது ஒரு சாதாரணபார்வை. உண்மையில் நமது பெயர் நமது உடலுக்கு அல்ல. நமது உயிருக்கே. இதனால் தான் உயிருடன் இருந்த போது சிவம் என்று அழைக்கப்பட்டவர் உயிர் பிரிந்ததும் சவம் என்று குறிப்பிடப்படுகின்றது. இது சிவத்துக்கும் தவத்துக்கும் மட்டுமல்ல, இடுகுறிப்பெயரைக் கொண்ட நம் எல்லோருக்கும் பொதுவானதே. சிறப்பான தனிப்பெயரால் அழைக்கப்படும் ஒவ்வொருவரும் இறுதியில் சவம் என்ற பொதுமைப்படுத்தப்பட்ட பெயருக்குள் சங்கமமாவது தான் உண்மை.

ஆம் வாசகர்களே!
இடுகுறிப்பெயருடன் வாழ்வை ஆரம்பிக்கும் கோடானுகோடி மனிதர்கள் அந்த இடுகுறிப்பெயரையும் இழந்து இடுகாட்டிற்குச் சொந்தமாகிவிடுகிறார்கள். உறவினர்களும் ஓரிரு தலைமுறையினரும் தவிர வேறு எவரும் இவர்களை நினைவில் வைத்துக் கொள்வதில்லை. மாறாக ஒரு சில மனிதர்கள் உயர்வான மனோபாவங்களை உரிமையாக்கி உடலால் இறந்தும் இடுகுறிப்பெயரை உயர்வான காரணம் பெயர்களால் அலங்கரித்து உத்தமர்களாக - சிறந்த தலைவர்களாக - மாமேதைகளாக - சிறந்த வழிகாட்டிகளாக உலகம் உள்ளளவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே நமது இறப்பின் பின்னரும் நமது இடுகுறிப்பெயர் நிலைக்க வேண்டுமாயின் உயர்வான காரணப் பெயர்களை நாம் உரிமையாக்கிக் கொள்வது அவசியமாகும்.

**KG Master**
**416.725.5112**





# ஆறாவது சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழா - 2007

இரு வாரங்களுக்கு முன்னர் சிவிக் சென்ரரில் இவ் வருட குறும் பட விழா நடைபெற்றது. வழமைக்கு மாறாக குறித்த நேரத்துக்கு ஆரம்பமாகியது. சுமார் 400 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். திட்டமிட்டபடி நிகழ்ச்சி அட்டவணைக்கு ஏற்ப நிகழ்ச்சி நடைபெற்றது. ஒரு சில படங்களின் பிர-திகள் ஆட்டம் கண்டன. சென்ற முறையை விட இம் முறை தொழில்நுட்ப குறைபாடுகள் இல்லை.

நிகழ்ச்சியை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம். முதலாவது



## கனடிய படங்கள்

உணர்வு ததும்ப உணர்வுகளுடன் ஆரம்பமாகிய நிகழ்வு, எமது அடையாளத்தை கேள்வி கேட்பதுடன் சூடு பிடிக்க ஆரம்பாகியது. இவ்விரண்டு படங்களும் உணர்வுகளுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை, கதை யதார்த்ததுக்கும், திரைக்கதை ஒழுங்கமைப்புக்கும் கொடுக்கவில்லை. தொடர்ந்த படமான "கண்ணால் காண்பதெல்லாம்" சிறப்பான நடிப்பால் அரங்கை அதிரவைத்தது. கணவன், மனைவி இருவரும் சிறப்பாக நடித்திருந்தனர். தொடர்ந்து வினை என்னும் படம். கடந்த வருடம் பார்வையாளர்களாக கலந்து கொண்டதாக இவர்களுடன் கதைத்த பொழுது தெரிவித்தனர். இளைஞர்களான இவர்களது இந்த முயற்சி, ஒரு சிறப்பான அரங்கேற்றம். தன் வினை தன்னைச் சுடும். இல்லையேல் சார்ந்திருப்போரை சுடும் என்ற கருத்துப்பட வன்முறைக் கலாசாரத்தை விமர்சித்துள்ளார்கள். ஒலி தெளிவாக பிரதி செய்யப்படவில்லை. சில காட்சிகளில் கதைப்பது கேட்கவில்லை. மிகத் தெளிவான கனவுக் காட்சி ஒன்று படத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சின்னச்சின்ன குறைபாடுகளை தவிர்த்திருந்தால் இப் படம் மேலும் ஒரு சிறப்பான பதிவாகியிருக்கும். நீரோஜனுக்கு மேலும் நல்ல எதிர் காலம் உண்டு.

சுதாகரனின் கதவுகள் தட்டப்படும் சத்தம் கேட்டு நிமிர்ந்து இருந்த பொழுது அவர் தற்கொலைக்கு சென்று விட்டார். அவ்வளவு சிறிய படம்.
சுதாகரனுக்கு ஏன் பெண்கள் மீது கொள்ளைப் பிரியம்? ஆண்டாண்டு காலமாக "நூலும் சேலையும்" போல் தாயும் பிள்ளையும் பிணைப்பால் இறுக்குண்டவர்கள். தற்கொலையின் போதும் பிள்ளையுடன் தான் தற்கொலை செய்வார்கள். இங்கு பிள்ளையை விட்டு விட்டு தாய் சென்று விடுகின்றாள். பாவம் சுதாகரன் தற்கொலை செய்ய முடியவில்லை. படத்தின் கலர் கறுப்பு வெள்ளை. மாற்று முகாமுக்கான பிரதியீடா? கருத்து ரீதியான குறைபாடுகளை தவிர்த்து பார்த்தால், இவ் விழாவில் காட்டப்பட்ட ஒரு நல்ல குறும் படம்.

மூடிய கதவிடுக்கினுள் பார்த்த பொழுது தெரிந்தது "அ.்.கம்". சினிமா விமர்சகர், திரைக்கதையாசிரியர், எழுத்தாளர் என பல்வேறு தளங்களில் செயற்படும் எழுத்தாளர் அருணின் முதல் படம் இது. வெறுமையை பிரதிபலிக்கும் இப்படத்தை கரண் ஒளிப்பதிவு செய்துள்ளார். மிகத் தெளிவான ஒளிப்பதிவு. கரண் நீங்கள் காட்டிய வீதி ரொரன்ரோவில் எங்குள்ளது? அழகான, அமைதியான வீதி. படத்தின் பின் பகுதியை இழுத்திருக்கத் தேவையில்லை. மரத்தை பார்ப்பதுடன் முடித்திருக்கலாம். குறும் படத்துக்குரிய வீச்சம் அதிகரித்திருக்கும். சற்றேனும் எதிர்பாத்திருக்காத கதை. இவ் வருட விழா தந்திருக்கும் மற்றொரு நல்ல இயக்குனர் அருண். இரண்டாவது இடைவேளைக்கு பின்னர் காட்டப்பட்ட கனடிய படம் "மௌனச் சுமைகள்" வயது வந்த பெற்றோரை பிள்ளைகள் ஒருவருக்கு ஒருவராக பிரிப்பதே இப் படத்தின் கதை. வழமையான விடயமே. பணத்துக்காக நாங்கள் எதையும் செய்வோம். அடுத்த வருடம் தனபாலனிடமிருந்து மற்றொரு நல்ல படத்தை எதிர்பார்க்கலாம். பொதுவாக இவ்வருட கனடிய படங்களின் குறைபாடு திரைக்கதை அமைப்பும், எடிட்டிங்கும். (இவ் வருடம் எடிட்டிங் விருது எவருக்கும் கொடுக்கப்படவில்லை). நல்ல கருவை சிறப்பாக வெளிப்படுத்த மிகச்சிறந்த திரைக்கதை அமைப்புத் தேவை. திரைப்படம் பற்றிய அறிவை மேலும் அதிகரிக்கும் பொழுது படங்கள் சிறப்பாக படைக்கப்படும். படைப்பாளிகள் தங்களது தேடலை அதிகரிக்க வேண்டும்.

## ஐரோப்பிய, இந்திய, இலங்கை படங்கள்

தொடரும் தொலைக்காட்சி தொடர்களும் பெண்களும் என்ற தலைப்பில் கட்டுரையாக வரைந்திருக்கலாம். ஆண்கள் எவரும் தொலைக் காட்சித் தொடர்கள் பார்ப்பதில்லை என்பது டென்மார்க் சண்ணின் முடிவு. மீண்டும் தாயை இழிவுபடுத்தும் முயற்சி. பிள்ளைக்குச் செய்ய வேண்டிய கடமைகளை செய்யாது, தொலைக்காட்சியே தஞ்சம் என தாய் உள்ளாள் என்பது சண்ணின் கூற்று.

ரமேசின் "அஸ்தமனம்" பிள்ளைகள் மீதான வன்முறையை சுட்டிக்காட்டியுள்ளது. இறுதிவரிகள் மூலம் இப்படம் செய்தித் துண்டாக மாறிவிட்டது. அப்புவின் சினிமா சாதி, மத வேறுபாடுகளை படமாக்கியுள்ளது. முழு நீளத்திரைப்படக்கதையை சுருக்கியுள்ளார்கள். அப்புவாக நடித்த கௌசிக் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருந்தார். இலங்கைப்படமான "விழி" போரின் அவலங்களை படமாக்கியிருந்தது. ஒளிப்பதிவு மிகவும் நன்றாகவிருந்தது. மௌனச் சுமைகள் பெண்கள் திருமணத்தின் பின் தங்களது ஒவ்வொரு கனவுகளையும், விருப்புக்களையும் புதைத்துக் கொள்கின்றார்கள் என்பதை சுட்டிக் காட்டியிருந்தது. கவித்துமான முயற்சி. இவ்விழ-ாவில் பெண்களால் படைக்கப்பட்ட ஒரேயொரு படமிது. பிரான்ஸிருந்து வந்திறங்கிய "நதி" அகதி வாழ்வின் அவலங்களை பதிவாக்கியிருந்தது. சிறந்த நடிப்பு, கதை, இயக்கம் என மிகச் சிறந்த படமாக வெளிப்பட்டது இப்படம்.

## சிறப்புப்படங்கள்

### சைனீஸ் போய் பிரண்ட்

ஒரு நிமிடத்தில் பல விடயங்களை கூறிச் சென்றுள்ளது இப்படம். நிறவாதம், செக்ஸ் தேர்வு போன்ற விடயங்களை பதிவு செய்துள்ளது. THE DAY I DIED - Maryam Keshavarz என்ற ஈரானிய இயக்குனர் இயக்கிய இப்படம் பல சர்வதேச விழாக்களில் பரிசு பெற்றது. இப்படம் மூன்று இள வயதினரிடையே ஏற்படும் உறவு நிலைகளை சுற்றி படமாக்கப்பட்டுள்ளது. வில்லியம் பிளேக்கின் 1794 ல் எழுதப்பட்ட கவிதையை மையமாகக் கொண்டது ரைகர் என்ற அனிமேஸன் படம். மீண்டும் ஒரு தடவை பார்க்கத் தூண்டியது. இவற்றுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் திரைப்படப் பட்டறையில் பதிவு செய்யப்பட்ட இரு படங்களும் காட்டப்பட்டன.
ஒரு வித்தியாசமான உலகத்தை தரிசித்த அனுபத்துடன் வெளியே வந்த பொழுது, பூமிக்கு அருகில் சந்திரன் வந்திருந்தது.

**- பதமி -**


EXPERT
BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

**Tel: 905 940 0811 Fax 905 940 6108**
**Toll Free 1 866 373 3315**

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

**www.expertinspector.com**

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of **ASHI** and **CAHPI**-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

**SAFETY TRUCKS**
**Training School Ltd.**
Training & Trucking Classes A, D & Z
In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course






19 Years Canadian Experience with Trucks

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (12 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

**YOGAN SOCKALINGAM**
Truck Driving போதனாசிரியர்
**905-793-9546 / 416-616-5979**
4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

178

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



வெளிநாடுகளில் பயிராகி பழுக்க முதல் அறுவடைசெய்யப்பட்டு அமெரிக்க விமானங்களில் அரபுநாட்டு பெற்றோலில் ஓடும் விமானங்களில் வந்திறங்கிய பூசனிக்காய்களின் தேவை முடிந்து விட்டது. அதாவது கொலோவின் முடிந்துவிட்டது. (பிள்ளைகள் பிரயோசனமற்றவர் என எண்ணும்) முதியவர்கள் போல வீதிகளில் சந்துபொந்தெல்லாம் பூசனிக்காய்.

பூசனிக்காய் இறக்குமதிக்கும் வரி குப்பைகளைக் கொண்டுபோய் போடவும் வரி.





இனி அடுத்தது என்ன தீபாவளி. இங்குள்ளவர்களுக்கு தினம்தினம் தீபாவளிதானே.

உலகண்ணை ராசம்மாக்காக்கு தீபாவளிக்கு சாறி ஒண்டும் எடுத்துக் குடுக்கேல்லியே? எனச் சிரிச்சபடி கேட்டா செக்கண்ட்புளோர் செல்லம்மா... பிறகு சாறியொண்டு எடுத்துக்குடுங்கோ என்றபடி சிரித்தா ஆட்டிலறி அன்னம்மா.

உலகருக்குத் தெரியாத தமிழா.. சிலேடையா?

சினிமாவுக்கே பெயர் வைக்க தயாரிப்பாளர்கள் திக்குமுக்காடும்பொழுது சாறிகள் அதன் பெயரைத்தாங்கி விரைவில் வந்துவிடுகின்றன.



சிவாஜி சாறி, மலைக்கோட்டை சாறி, மலரே மௌனமா சாறி, கலகலப்பு சாறி அண்மையில் வந்த பிறகு சாறி

அடேயப்பா! தீபாவளியுடன் அமளி முடியப்போவதில்லை. அடுத்து கந்தசஸ்டி. நாட்கள் கடந்து கொண்டே போகிறது.

ரெலிவிசனில் அனுராதபுர விமானத்தள தாக்குதல் பற்றி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.





சர்வதேசமும் சரியென்று சொல்லும் எத்தனை பிழையான விடயங்கள்.

மாமியார் உடைத்தால் மண்சட்டி என்பது போல....

எது நடந்ததோ அது நன்றாகவே நடக்கவில்லை என்போரும், எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்குமா என்ற சந்தேகம் கொள்வாரும்.. தம்மனதுக்குள் அதேகேள்விகளைக் கேட்டவண்ணம்தானிருப்பர்.



உலகர் முருகேசரை அனுராதபுர விமானத்தள தாக்குதலில் காவியமானவர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் சந்தித்து வந்ததிலிருந்து மனக்குழப்பத்திலிருந்தார்.

முருகேசர் புறப்படும்போது சரி உலகு மாவீரர் தினத்தில் சந்திப்போம் என்று சொல்லிச்சென்றது.. இன்னும் எத்தனை இறப்புக்கள் இழப்புக்களைச் சந்திக்கப்போகிறோம்.

உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைத்து எண்ணுவன -- கண் புதைந்த
மாந்தர்குடி வாழ்க்கை மண்ணில் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான். (நல்வழி -ஔவையார்)

# கனடாவாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியம்

The People's Association of Chunnakam in Canada

கனடா வாழ் சுன்னாக மக்கள் ஒன்றியம் தனது எட்டாவது ஆண்டின் இராப்போசன விருந்தையும் கலை விழாவையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் St. Clair Ave. & O.Corner சந்தியிலுள்ள 2723 St. Columbia Church மண்டபத்தில் திரு. திருமதி நடராசா சந்திரராஜா பொறியியலாளர் அவர்களைப் பிரதமவிருந்தினராகக் கொண்டு முத்துலிங்கம் தயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இராப்போசன விருந்துடன் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக பாரதி ஆட்ஸ் கலைஞர்களின் சிறப்பு இன்னிசை விருந்தும் CMR கலைஞர்களின் நகைச்சுவை நாடகமும் நடைபெறவுள்ளது. சுன்னாகம் மக்கள், அனுதாபிகள், ஆதரவாளர்கள், கலந்து சிறப்பிக்குமாறு நிர்வாக சபையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

தகவல்
காரியதரிசி
க. தவநேசன் 416.298.6255 போசகர் - கே. திருநாவுக்கரசு 416.269.9292






# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**Answers - 212 October 15, 07**

1. If we divide f (x) by (x - 2) then the answer is (x - 2) q (x) + $y_1$
   Now divide q (x) by XH the answer is q (x) = (x + 1) q (x) + $r_2$.
   When f(x) is divided by (x - 2)(x + 1) the remainder can be expressed as
   r = $r_1$ + ((x - 2) r2.

2. (a) $X^4 + 5x^2 + 9 \quad = (x^2 + 3)^{2} - x^{2}) = (x^2 + 3 - x)(x^2 + 3 + x)$
   $=(x^2 - 3 - x)(x^2 + x + 3)$

   (b) $4x^4 + 8x^2 + 9 \quad = (2x^2 + 3)^2 - 4x^2$
   $= (2x^2 + 3 - 2x)(2x^2 + 3 + 2x)$

   (c) $X^4 + 6x^2 + 25 = (x^2 + 5)^2 - 4x^2 \quad =(x^2 + 5 - 2x)(x^2 + 5 + 2x)$.

3. If n E N, (x + y) will be a factor of xn + yn = f(x). if and only if n is an odd number. If n is an odd number, then $f(-y) = (-y)^n + y^n = y^n + y^n$ not equal to zero.
   However, if n is an even number, then $f(-y) = (-y)^n + y^n \equiv y^n + y^n$ not equal to zero
   For x + y to be a factor f (-y) = 0.

4. I x - Ix I I is positive when x > 0.
   {Ix - IxII}/x is positive when x>.0 , since !x!>=0 .: Ix - !x!I= !x-x!=0.
   But 0/x = 0. Therefore there are no values for x for {Ix - IxII}/x Which is positive integer.

***BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 416-431-6774***

**Tutorial - 211 November 01, 07**

5. The largest value of x2/2y will occur when the numerator is largest and the denominator is smallest.
Since $10 \le x \le 20$ the largest value of $x^2$ is $20^2 = 400$, Similarly,
since $40 \le y \le 60$ the smallest value of 2 y is 2 (40) = 80.
Thus the largest value of $x^2/y^2 = 400/80 = 5$.

### Questions

1. The free end of a diving board dips C centime when a diver of x kilograms stands on it. The relation is $C = 0.0002x^3 - 0.005x^2 + 0.5x$ calculate the amount of dip when a when a 95 kg diver stands on the board [Gr. 11].

2. A piece of sheet metal 60 cm by 30 cm is to be used to make a rectangular box with an open top. Find the dimension that will give the box with the largest volume. [ Gr. 11 & 12].

3. A cylinder can is to hold 500 cm3 of apple juice. The design must take into account that the height must be between 6 and 15 cm, inclusive.
How should thee can be constructed so that a minimum amount of material will be used in construction. [ Gr.12]

4. If $^{30}/_{7} = x + {}^{1}/_{\{y\ +\ 1/z\}}$ where x, y and z are positive integers then what is the value of x + y + z. [Gr. 10]

5. In a context polygon, exactly five of the interior angle are obtuse. What is the largest possible number of sides. [ Gr. 10]


**MATH, SCIENCE & ENGLISH TUITION**

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 2 to 12 & OAC Special classes in Calculus & Algebra - Geometry English for all grades from Gr. 2 to Gr. 10

Individual & group classes available By an experience teacher: S.F. Xavier

**CONTACT: 416 - 431- 6774** (Markham & Ellesmere)

**Tutoring Math and Physics**



***100 % progress orientated***
***Individual attention by experience teacher.***
***Grade 9 -12 math***
***Grade 11 & 12 physics***
***For More information please call***
***Mr. Sannithivel at - 416-757-4253***


# நினைவுகளின் தடத்தில்....

08ஆம் பக்கத் தொடர்ச்சி

இருந்திருக்கான். நடு ராத்திரிலே வேறே எங்கே போவான். நல்லபடியா வந்து சேந்துட்டான். ஒண்ணும் சொல்லாதேங்கோ. நிம்மதியா தூங்குங்கோ இனிமே. நாளைக்குப் பாத்துக்கலாம், சார் நான் வரேன்" என்று சொல்லிக்கொண்டு அம்பி வாத்தியார் தன் விட்டுக்குத் திரும்பினார். "ஏண்டா இப்படி படுத்தறே? கதி கலங்க வச்சிட்டயே" என்று பாட்டிதான் வேதனையோடு சொன்னாள்." "வா, வந்து கொஞ்சமாவது சாப்பிட்டு படுத்துக்கோ, உனக்காக யாருமே சாப்பிடாம கொட்டு கொட்டுனு முழிச்சிண்டுருக்கா" வேறு யாரும் எதுவும் சொல்லவில்லை. இரவு வெகு நேரம் ஆகிவிட்டது.

அப்போது தீராத என் துக்கங்கள் எனக்கு. எனக்கென்று பெரிய ஆசைகள் ஏது இல்லையென்றாலும், ரொம்பவும் அடக்கமான பையன் என்று எல்லோரும் சொன்னாலும், சில சமயங்களில் எனக்கும் கூட சில ஏக்கங்கள் வந்து மாமாவை ரொம்பவும் கஷ்டப்படுத்தியிருக்கிறேன் என்பது பின்னாட்களில் எனக்கு உறைத்தது.

மாமாவின் வாழ்க்கை ரொம்பவும் வேதனைகள் நிறைந்தது. சில சாதாரண, இயல்பான எதிர்பார்ப்புகள் கூட அவருக்கு நிறைவேறியதில்லை. வறுமை. பொறுப்புகள் நிறைய தன் சக்திக்கு மீறி தன்மீது சுமத்திக் கொண்டார். அவரால் ஓரளவுக்கு மீறி அப்பொறுப்புக்களை சமாளிக்க முடிந்ததில்லை. அவர் இயல்பில் மிக சாதுவான மனிதர். வெளியே யாரோடும் அவர் சத்தமிட்டுப் பேசியோ, முரண்டு பிடித்தோ, சண்டையிட்டோ பார்த்ததில்லை நான். ஆனால், வீட்டில் அவருக்கு வேதனை மிகும்போது அசாத்திய கோபம் வரும். முன் கோபி. பின்னால் வருந்துவார். அவர் கோபம் வந்துவிட்டால் அந்தக் கணங்களில் அவர் தான் என்ன செய்கிறோம் என்பதே அவருக்கே தெரியாது போய்விடும்.

எங்கள் தெரு "ட" வடிவில் இருக்கும். அந்த "ட"வின் இரு கோடுகளின் சந்திப்பில் எங்கள் வீடு இருந்தது. தெருவின் ஒரு கோடி பெரியகுளம், வத்தலக்குண்டு போகும் மெயின் ரோடில் போய்ச் சேரும். இன்னொரு கோடியில் ஒரு பிள்ளையார் கோயில். சின்ன ஒரே அறையே கர்ப்பக்கிரஹமாகக் கொண்ட கோயில். அது எப்படி எங்கள் பராமரிப்பில் வந்தது என்று எனக்குத் தெரியாது. சாவி எங்களிடம் இருக்கும். தினம் கோவில் கம்பிக் கதவைத் திறந்து, ஒரு குடம் தண்ணீர் பிள்ளையார் மீது கொட்டி அவரைக் குளுப்பாட்டி, விளக்கேற்றி வரவேண்டும். இது தினம் மாலை நடக்கும்.

ஒரு நாள் மாலை மாமா, "போடா, கோவிலைத் திறந்து ஸ்வாமிக்கு விளக்கேத்திடு வாடா" என்று சொன்னார். பித்தளைக் குடம் ஒன்று சின்னதாக நான் தூக்கக்கூடியது. அதில் தண்ணீர் நிரப்பிக்கொண்டேன். ஒரு கிண்ணத்தில் நல்லெண்ணெய். இடைகழிச் சுவற்றில் எனக்கு எட்டும் உயரத்தில் தான் கோவில் சாவியும் தீப்பெட்டியும் இருக்கும். ஒரு கையில் தண்ணீர் நிரப்பிய குடம். மற்றொரு கையில் எண்ணெய்க்கிண்ணம். எண்ணெய்க் கிண்ணக்கையோடு உயர இருந்த சாவியையும் தீப்பெட்டியைம் எடுத்தேன். என் சாமர்த்தியம் எனக்கு உதவவில்லை. கிண்ணம் சாய்ந்து எண்ணெய் கீழே சிந்தியது. அதை மாமா பார்த்துவிட்டார். "ஒரு காரியம் உனக்கு ஒழுங்கா செய்யத் தெரியுமாடா கழுதே" என்று சத்தமிட்டுக் கொண்டே வந்தவர், கிட்ட வந்தது தான் தெரியும். அடி விழுந்தது. சரமாரியாக அடித்துக் கொண்டே இருந்தார். குடத்தைக் கீழே வைத்தவன் அடி தாங்காமல் கீழே விழுந்தேன். அப்படியும் அவர் கோபம் அடங்கவில்லை. காலால் உதைத்தார். அடி விழுவதும் நிற்கவில்லை. இதற்குள் என் அலறலையும் மாமாவின் கூச்சலையும் கேட்டு புறக்கடையில் இருந்த பாட்டி ஓடி வந்தாள். மாமாவைப் பார்த்து சத்தம் போட்டாள், "ஏண்டா இப்படி அவனைப்போட்டுக் கொல்றே. இப்படியாடா ராக்ஷசன் மாதிரி. ஒன்னுக்கொன்னு எதாவது ஆயிட்டதுன்னுடா என்னடா பண்றது" என்று பாட்டியும் சத்தம் போட ஆரம்பித்தாள். உனக்கொண்ணும் தெரியாது. நீ பேசாம இரு. நீ செல்லம் கொடுத்துக் கொடுத்துதான் அவன் ஒண்ணுக்கும் இல்லாமே போயிண்டு இருக்கான்." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது எனக்கு அடி விழுவது நின்றது. "சரி போறது போ" எண்ணெய் என்ன கொஞ்சம் போறத்தானே சிந்தியிருக்கு. போடா, எண்ணெய் விட்டுத் தரேன். போய் விளக்கேத்திட்டு வா, போ" என்று பாட்டி அந்த இடத்தை விட்டு என்னை விரட்டினாள்.

எனக்கு அன்று விழுந்த அடி மாதிரி அங்கு மாமாவோடு இருந்த பன்னிரெண்டு வருடங்களில் என்றும் விழுந்ததில்லை. மாமா முன் கோபக்காரர் தான். ஆனால் வெகு சீக்கிரம் அவர் கோபம் அடங்கிவிடும். கொஞ்சம் சத்தம் போடுவார். இரண்டு அடி கொடுப்பார். பின் சரியாகிவிடும். ஆனால் அன்று, கொஞ்சம் எண்ணெய் சிந்தியதற்கு நான் பட்ட அடியும் உதையும் இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. "என்னடா அப்படி ஆயிடுத்துன்னு இப்படி போட்டு கொல்றே. செங்கல் தரையிலெ கொஞ்சம் எண்ணெய் சிந்தினாக் கூட அது வழிஞ்சி பரவிடும். ஏதோ வீசை எண்ணெய் போயிட்டாப்பலே. படாத இடத்திலே பட்டா என்ன ஆகும்" என்று பாட்டி திரும்பத் திரும்ப மாமாவைத் திட்டிக்கொண்டே இருந்தாள். மாமாவோ, "நீ பேசாமே இரேன். உனக்கொண்ணும் தெரியாது போ" என்று தான் அவர் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

மறு நாள் காலை மாமா பேப்பர் வாங்கிப் பார்த்துக் கொண்டிருந்தார். சின்ன மாமா எஸ் எஸ் எல் ஸி பரீட்சை' எழுதிய ரிசல்ட் வந்திருந்தது. அம்பி வாத்தியார் வந்து கொண்டிருந்தார். வீட்டுப் படி ஏறிக்கொண்டே, "என்ன சார், பேப்பர் பாத்தேளா, சாமா நம்பரைக் காணோமே, நான் தான் சரியாப் பாக்கலையா, உங்க பேப்பர்லே இருக்கா" என்று கேட்டுக் கொண்டே படி ஏறினார். அவர் சாமா என்று சொன்னது என் சின்ன மாமாவை. சின்ன மாமாவின் பெயரும் சுவாமிநாதன்.

"எந்த பேப்பரைப் பாத்து என்ன? போயிடுத்து. போயிடும்னு நேத்திக்கே எனக்குத் தெரிஞ்சுடுத்து" என்று வெகு தீனக்குரலில் சுரத்தின்றி மாமாவிடமிருந்து பதில் வந்தது. "நேத்திக்கே தெரியுமா?" என்று ஒன்றும் புரியாத திகைப்பில் கேட்டார், அம்பி வாத்தியார்.



# ஆறாவது சர்வதே தமிழ் குறைந்திரைப்பட விழா - 2007



சுயாதீன கலை, திரைப்பட மையம்
ஆறாவது சர்வதேச தமிழ்க் குறுந்திரைப்பட விழா - 2007

மேற்படி விழா புரட்டாதி 20 ஆம் நாள், ஸ்காபரோ நகர மண்டபத்தில் நடைபெற்றது.

## விருதுகள் பெற்றோர்.

∴விருது - மாற்று தகவல், ஊடக சேவைக்கான விருது
பி.விக்னேஸ்வரன், கனடா

புலம் பெயர் சிறந்த படத்துக்கான விருது - சி.சிவசோதி ஞாபகார்த்த விருது - மண் - இங்கிலாந்து

சிறந்த குறும்படம் - குமார் மூர்த்தி ஞாபகார்த்த விருது
நதி - பிரான்ஸ்

சிறந்த குறும்படம் - ஐந்து நிமிடங்களுக்குட்பட்டது
எந்த படமும் தேர்வாகவில்லை



சிறந்த குறும்படம் - விமர்சகர்கள் தேர்வு - கலைச் செல்வன் ஞாபகார்த்த விருது (அன்பளிப்பு - லக்சுமி கலைச்செல்வன்)
வினை - கனடா

சிறந்த இயக்குனர் - அ.பொ.செல்லையா ஞாபகார்த்த விருது
பாஸ்கர் - நதி - பிரான்ஸ்

சிறந்த ஒளிப்பதிவாளர் - என். தம்பிப்பிள்ளை ஞாபகார்த்த விருது
எஸ்.ஆர்.சந்தோஸ் - விழி - இலங்கை

சிறந்த எடிட்டர் - எவரும் தேர்வாகவில்லை

சிறந்த கரு - சி.சிவசோதி ஞாபகார்த்த விருது
எஸ்.தனபாலன் - மௌனச் சுமைகள் - கனடா

சிறந்த திரைக்கதை - பி.எஸ் கந்தையா ஞாபகார்த்த விருது
நித்தியா - தொலைந்து போனவர்கள் - இந்தியா

சிறந்த நடிகர் - எ.பி.ஜயரட்னம் ஞாபகார்த்த விருது
பாஸ்கர் - நதி - பிரான்ஸ்



சிறந்த நடிகை - எவரும் தேர்வாகவில்லை

சிறப்பு விருது - நடுவர்கள் விருது எஸ்.திருநாவுக்கரசு ஞாபகார்த்த விருது - அப்புவின் சினிமா - அப்புவாக நடித்த சிறுவன்




**வானரன்**

# தியானம் ஒரு வாழ்வியல் விஞ்ஞானம்

## நீண்டநாள் வாழ - நினைத்ததை அடைய - (பாகம் - 7)

### Meditation is a Living Science

முனிவர் பதஞ்சலியின் யோக சூத்திரத்தின்படி தியானம் ஏழாவது நிலை ஆகின்றது. அதுவும் மனதை ஒரு முகப்படுத்துவது தியானம் ஆகும். இது ஜாதி, மத, இன, மொழி, நாடு, ஆண், பெண் எந்த வயது எந்த வேறுபாடுமின்றி சகலரும் சுலபமாகப் பயின்று பயன் அடையலாம்.

**தியானத்தின் பலன்கள்**



சர்வாங்க ஆசனம் (Shoulderstand)

1. மன அமைதி கிட்டும் (Peace of Mind)
2. படபடப்பு (Tension) குறைகிறது.
3. நினைவாற்றல் அதிகமாகும் (memory Power)
4. நல்ல ஆழ்ந்த தூக்கத்தைத் தரும். (Deep Sleep)
5. வேலை செய்யும் ஆற்றல் அதிகரிக்கும். (Activeness)
6. இரத்த அழுத்தம் குறையும். (Reducing Blood Pressure)
7. அனைத்து நோய்களும் குணமாக உதவும்.
8. ஆயுளை அதிகரிக்க வல்லது (Long Life)
9. எதிர்மறை எண்ணங்களான (Negative Thinking) கோபம், வெறுப்பு, பயம், பொறாமை என்பன அகன்று நேர்மறை எண்ணங்களான (Positive Thinking) அன்பு, கருணை, சேவை மனப்பான்மை, பொறுமை, திருப்தி, கடவுள் நம்பிக்கை முதலியன வளரும்.

நவீன உலகின் நோய்கள் எனப்படும் இருதய நோய், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் இவைகள் கடந்த 30வருடங்களாகத் தென்படுவதன் காரணமே நம் பதட்டமான வாழ்க்கை முறைகளும் அமைதியின்மையும், பொருத்தமற்ற உணவு முறைகளும்



ஹலாசனம் (Halasana)

தான். இவற்றிலிருந்து விடுபட தியானப் பயிற்சியே ஒரேவழி. தியானம் பழகும் முறையை நேரடியாக ஒரு யோகாசன ஆசிரியரிடமிருந்தோ, குருவிடமிருந்தோ தெரிந்து கொள்வது அவசியம்.

**தியானப் பயிற்சிக்கான அட்டவணை**

- நோயாளியின் உடல் நிலையைப் பொறுத்து சில யோகாசனங்கள் யோக சிகிச்சை நிபுணரால் நிர்ணயிக்கப்படும்.
- இளம் வயதினர் கடினமான ஆசனங்கள் செய்யலாம்.
- பருமலாக இருப்பவர்களுக்கும், வயதானவர்களுக்கும் ஆரம்பத்தில் சில இலகுவான பயிற்சிகள் போதுமானது.
- யோகப் பயிற்சிகளை தினமும் 20 நிமிடங்கள் செய்தால் போதுமானது.
- ஐந்து நிமிடம் பிராணாயாமம், ஐந்து நிமிடம் தியானம், பத்து நிமிடங்கள் ஆசனங்கள் செய்து வந்தால் இரத்தத்தில் சர்க்கரை (Sugar) அளவு குறைகிறது.
- இரவில் தினம் சாப்பாட்டிற்கு 15 நிமிடம் முன்பு விபரீதகரணி என்னும் ஆசனத்தை 10 முதல் 15 நிமிடம்வரை செய்ய வேண்டும். (தலையணையின் உதவியுடன்)
- இரவில் சாப்பிட்ட பின்பும் தியானம் செய்யலாம்.



சலபாசனம் (Salabhasana)

- பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சியையும் தியானத்துடன் சேர்த்து காலையில் நேரம் இல்லாவிடின் மாலையில் செய்யலாம்.
- எல்லா ஆசனங்களும் தினமும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

**தினசரி செய்ய வேண்டிய ஆசனங்கள்**

1. ஹலாசனம் (Halasana) Blough
2. சர்வாங்க ஆசனம் (Shoulderstand)
3. வஜ்ராசனம் (Vajrasana) Boat Pose
4. சலபாசனம்
5. சாந்தி ஆசனம்

கபாலபதி - Kapalapathi (Pumping Breathing) பிராணாயாமம் (pranaya-ma), தியானம் (Meditation) என்பன தினமும் செய்ய வேண்டும். ஆசனங்களை கிடைக்கும் நேரத்தைப் பொறுத்து தினமும் மாற்றி மாற்றி செய்யலாம்.

தியானப் பயிற்சி ஆரம்பத்தில் சற்று சிரமமாயிருக்கும் போகப் போக சுலப-மாகவும் மனதிற்கு மிகுந்த



வஜ்ராசனம் (Vajrasana)

மகிழ்ச்சியையும் கொடுக்கும்.

**For Yoga Meditation Class**
**pl. call: 416.289.2033**
**After 7:00pm**





# BASEMENT RENT

### WARDEN & ELLESMERE
2 bedroom bsmt for rent - bungalow house. Sep. entrance. 4 pc washroom, parking. Wood & carpet. Avail. immediately. Close to ttc, hwy 401, mall, public & catholic schools, stores. 416.510.6932 / 416.819.6431 weekdays after 6:30pm / weekends anytime

### MARKHAM & STEELES
2 bedroom walk-out bsmt for rent. Sep. entrance. Parking, laundry, cable. Avail. immediately. Close to bus, school, stores.
தொடர்புகளுக்கு : 416.806.4567

### MORNINGSIDE & SEWELLS
2 bedroom bsmt apt. for rent. sep. entrance. Parking, cable, laundry. Avail. immediately. Close to school, bus.
தொடர்புகளுக்கு : 647.273.4047
416.282.4040 after 6:00 pm

### TAPSCOTT & FINCH
Newly renovated 2 large bedroom walk-out bsmt for rent. Sep. entrance. Parking, laundry, cable. Avail. November 01, 07. Close to bus, mall, school, etc.
416.754.8349 / leave message

### MCLEVIN & TAPSCOTT
அருகாமையில் One bedroom bsmt வாடகைக்கு உண்டு. Parking, cable, laundry. Avail immediately. Close to mall, bus, school, etc...
தொடர்புகளுக்கு: 647.831.9035

### MCCOWAN & ELSON
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry, cable. Avail. November 01, 07. Close to bus, stores, schools.
416.276.2618 / 416.271.3209

### VICTORIA PARK & FINCH
2 bedroom bsmt for rent. Sep. entrance. Cable, parking, washer, dryer. Close to ttc, school, stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.490.6725

### MARKHAM & STEELES
1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, cable,laundry. Close to bus, school, Nofrills, etc. Avail. November 01, 07.
647.897.6877 / 416.293.0163

### MCCOWAN & 14TH AVE.
3bedroom bsmt Apt. for rent. Avail. immediately. Parking, laundry. Couple preferred. Close to bus, school, stores.
905.943.9585 / 905.201.8350

### BRIMLEY & EGLINTON
2 அறைகள் கொண்ட BSMT இல் ஒரு அறை வாடகைக்கு கொடுக்கப்படும். Sep. entrance, parking, cable, laundry. Avail. November 01, 07. Close to ttc, school, stores.
தொடர்புகளுக்கு: 416.264.1875

### FINCH & PHARMACY
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to ttc, school, Tamil stores, mall. Avail. Immediately. Non smokers preferred.
தொடர்புகளுக்கு: 416.759.2030

### NEILSON & ELLESMERE
2 bedroom bsmt for rent. Sep. entrance. 1½ washroom, Parking, cable, internet, laundry. Avail. immediately. Close to ttc, HWY 401, Scarborough campus, centennial college, etc.
தொடர்புகளுக்கு: 647.889.5710

### MORNINGSIDE & SHEPPARD
சந்திப்பிற்கு அருகில் 2 bedrooms, full washroom, kitchen கொண்ட walk-out bsmt வாடகைக்கு உண்டு. Close to school, mall, ttc. Avail. November 01, 07.
தொடர்புகளுக்கு: 416.287.2113

### PHARMACY & LAWRENCE
Room for rent in a bsmt apt. Sep. entrance, washer, dryer, parking. Close to school, ttc, stores, mall etc. Rent $300. Avai. immediately
தொடர்புகளுக்கு: 416.660.8367

### MCCOWAN & DENISON
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Close to bus, school, stores. Avail.immediately.
905.415.1993 / 416.726.0216

### MCCOWAN & STEELES
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Avail. immediately. Close to bus, stores, school.
தொடர்புகளுக்கு: 416.826.7015

### MARKHAM & MCLEVIN
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. Parking, washer, dryer. Avail. immediately. Close to ttc, stores, school, etc.
தொடர்புகளுக்கு: 416.727.3716

### MARKHAM & ELSON
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. parking, laundry, cable. Avail. immediately. Couple preferred. Close to TTC, YRT, stores, no frill, school etc.
தொடர்புகளுக்கு: 905.471.1985

### KENNEDY & FINCH
2 bedroom bsmt Apt. for rent. Parking. Avail. immediately. Close to bus, school, stores, etc.
416.840.0624 / 647.435.7674

### MEADOWVALE & ELLESMERE
3 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Avail. November 01, 07.
416.754.4237 / 416.918.9868

### MCCOWAN & HIGHGLEN
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking, cable, washer, dryer. Avail. November 01, 07. Couple preferred. Close to stores, school, TTC, YRT.
தொடர்புகளுக்கு: 905.294.1117

### BRIMLEY & MCNICOLL
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. immediately. Rent $650 inclu. everything. Close to ttc & school, etc.
தொடர்புகளுக்கு: 416.335.0261

### MORNINGSIDE & OLD FINCH
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. December 01, 07. Close to ttc, school, shopping, etc.
தொடர்புகளுக்கு: 416.284.6226

### MIDDLEFIELD & HIGHGLEN
1 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Avail. Immediately. தனி நபர் விரும்பத்தக்கது. Rent $400. Close to bus, shopping, etc.
905.294.7912 / 416.951.0034

### STEELES & HILL CROFT
2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, cable,laundry. Close to bus, school, stores, etc. Avail.November 01, 07.
Cell: 416.722.1853 weekdays after 6:00pm/weekends anytime

### NEILSON & SHEPPARD
1 bedroom bsmt Apt. for rent. Laundry, parking. Avail. November 01, 07. Close to ttc, school, mall, etc. பெண்கள் வயதானவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.850.1565

### NEILSON & SHEPPARD
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, laundry, parking, cable. Family preferred. Avail. immediately. Close to ttc, school, stores.
416.208.9445 / 647.882.4656

### WARDEN & HWY 401
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. 2 washroom, parking, cable, laundry. Close to hwy 401, ttc, school, stores. Avail. December 01, 07.
416.391.2984 / 416.817.6154

### MCCOWAN & HIGHGLEN
Large 2 bedroom bsmt Apt. for rent with all facilities. Sep. entrance. Cable, Parking, laundry. Avail.immediately. Close to bus, school, stores, etc
905.554.3499 / 416.230.6665

### BIRCHMOUNT & EGLINTON
1 bedroom bsmt for rent. Sep. entrance. Laundry. கனடா கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ளது. Avail. immediately. Close to school,ttc, stores, subway, etc.
தொடர்புகளுக்கு: 416.995.3307

### MORNINGSIDE & OLD FINCH
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Avail. immediately. Family / ladies. Close to bus, school, stores, etc.
416.284.9399 / 416.417.6725

### BRIMLEY & EGLINTON
Newly renovated 2 large bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking, laundry. Close to bus, schools, stores, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.264.4173

### MCCOWAN & DENISON
3 Bedroom bsmt for rent. Sep. entrance. 2 full washroom. 2 parking, laundry. Avail. immediately. Close to bus, stores, தமிழ் கடைகள், schools.
தொடர்புகளுக்கு: 647.588.5297

### BRIMLEY & FINCH
2 bedroom bsmt for rent. Sep. entrance. Cable, 1 parking, utilities inclu. Close to bus, school, mall. No pets & smoke. Avail. November 01, 07.
தொடர்புகளுக்கு: 416.609.0660

### MCCOWAN / STEELES
Two bedroom bsmt for rent. Sep. entrance, car parking. Avail. immediately. Close to TTC, YRT, school, shopping center.
Cell: 416.268.1739

### BRIMLEY & FINCH
2 bedroom bsmt for rent. Sep. entrance. Cable, 1 parking, utilities inclu. Close to bus, school, mall. No pets & smoke. Avail. November 01, 07.
தொடர்புகளுக்கு: 416.609.0660

### MARKHAM & ELSON
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. Cable, parking, laundry. Avail. December 01, 07. Close to bus, school, shopping.
416.451.7307 / 416.587.2704

### MCCOWAN & DENISON
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance. Avail. immediately. parking. Close to bus, stores.
தொடர்புகளுக்கு: 905.472.8533

### KENNEDY & STEELES
2 bedroom bsmt for rent. Sep. entrance. close to ttc, etc. Avail immediately. Rent $650.
416.575.5055 / 905.470.5800

### MORNINGSIDE & FINCH
Walkout bsmt. 2 bedroom bsmt Apt. Sep. entrance. Family size eat in kitchen, 4pc washroom. shared laundry, cable, one parking, walk to ttc, school, shopping. Non smokers/pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.282.3823

### MARKHAM & STEELES
2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. for rent. Avail. November 01, 07. Close to bus, school, mall, etc.
905.294.9067 / 416.371.8419

### WARDEN & MCNICOLL
2 bedroom bsmt for rent. Parking, laundry. Avail. Immediately. Close to 24 hrs. bus, mall, school, park, etc.
தொடர்புகளுக்கு: 416.496.0717

### MORNINGSIDE & MCLEVIN
2 bedroom walk-out bsmt apt. for rent. Sep. entrance. Parking, washer, dryer. All immediately. Rent $600. Small Family preferred. Avail. December 01, 07. Close to School,ttc, stores....
தொடர்புகளுக்கு: 416.930.0910

### SCARBO. GOLF CLUB & BRIMORTON
2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. immediately. Close to bus, stores, school, etc.
தொடர்புகளுக்கு:416.835.6951

### MIDLAND & EGLINTON
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus, schools, subway, Tamil stores, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.345.5920

### MIDDLEFIELD & FINCH
Large 2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking, TVI cable. Close to mall, school, bus, stores, Iyyappan Temple. Avail. November 01, 07.
தொடர்புகளுக்கு: 416.321.9267

### MCCOWAN & MCNICOLL
1 bedroom walkout bsmt for rent. Sep. entrance. Paring, laundry. Close to ttc, & mall. No smoking & Alcohol. Rent $325. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.491.9364

### WARDEN & SHEPPARD
Brand new 1 large bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Avail. immediately. Close to all amenities.
தொடர்புகளுக்கு:416.494.7257

### MARKHAM & ELLESMERE
சந்திப்புக்கு அருகாமையில் 3 அறைகள் கொண்ட bsmt வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, laundry, laminate floor, sun shine window. Sofa inclu. Quiet & nice place. Avail. November 01, 07. Close to bus, school, shopping, etc.
தொடர்புகளுக்கு: 647.345.7089

### MORNINGSIDE & LAWRENCE
2/3 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Avail. immediately. Close to bus, school, stores, library, mall etc.
தொடர்புகளுக்கு: 416.888.0633

## MOVING SALE
**Markham & Lawrence**
- Bedroom Set
- Dining Table Set
- Book Shelf
- TV Stand
- Table Lamb and many more......

PL. Call: 416-289-0100

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

***விளம்பரம் பத்திரிகையை இணையத்தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com***

மேலும் பக்கம் 21

# ROOM RENT

**KENNEDY & EGLINTON** சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள BSMT இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, cable. Avail. immediately. Close to bus, subway, stores, etc. தொடர்புகளுக்கு: 647.839.1747 leave message

---

**DONMILLS & MCNICOLL**
One furnished bedroom for rent. Laundry. Avail. immediately. Close to bus, mall, laundry, cable, etc. Pl.call: 416.818.4612 / 416.756.3409

---

**MCCOWAN & STEELES**
சந்திப்புக்கு அருகாமையில் சகல வசதி கொண்ட 2 அறைகள் கொண்ட bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. குடிப்பழக்க மற்ற ஆண் ஒருவர் விரும்பத்தக்கது. Avail. Immediately. உணவு வசதியும் உண்டு. Close to bus, stores, school, etc. தொடர்புகளுக்கு: 416.836.6423

---

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட Condo. இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washer, dryer, parking. Avail. November 15, 07. Close to bus, stores, etc. Pl.call: 416.609.2638 / 416.999.3413

---

**MARKHAM & ELSON**
1 bedroom for rent with meal. Parking, laundry. Avail. January 2008. தனி நபர் விரும்பத்தக்கது. Rent $400. Close to bus, shopping, etc. 905.294.7912 / 416.951.0034

---

2 அறைகள் BSMT இல் உடனடியாக வாடகைக்கு உண்டு. தேவையாயின் உணவும் கொடுக்கப்படும். Parking, laundry. தொடர்புகளுக்கு: 416.288.0303

---

**14th Ave. 9th Ave.**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்திருக்கும் புதிய வீட்டில் இரண்டு அறைகள் உடனடியாக வாடகைக்கு உண்டு. Kitchen, parking, cable, laundry. அனைத்து வசதிகளும் உண்டு. தனி நபரோ அல்லது குடும்பத்தினரோ அழைக்கலாம். தொடர்புகளுக்கு: 416.407.9559

---

**DUFFERIN & RUTHERFORD**
Room for rent in a bsmt Apt. New appliances. Sep. entrance. Parking, laundry, cable. Avail. immediately. Close to bus, Hwy 404, 407, 400, stores, etc. 647.388.3055 / 905.303.3022

---

**MORNINGSIDE & SEWELLS**
2 Rooms for rent - main floor. Sep. washroom. Avail. immediately. Close to school, TTC, shopping. தொடர்புகளுக்கு: 416.708.2377

---

**MARKHAM & 14th AVE.**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Avail. immediately. Close to everything. தொடர்புகளுக்கு: 905.471.3536 / 647.407.1710

---

**JANE & SHEPPARD /FINCH**
3 story Town house Condo. for rent. 1 bedroom, washroom, balcony, parking, cable, internet, washer, dryer. No Drink, No Smoke. Close to அம்மன் உணவகம், bus, mall, York University. Rent $350 Utilities inclu. Boys preferred. தொடர்புகளுக்கு: 647.893.1219

---

**MARKHAM & LAWRENCE**
வீட்டில் அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. Master bedroom - main floor. சமையல் அறையைப் பகிர்ந்து கொள்ளலாம். (sharing kitchen). cable, parking. Rent $275. Close to TTC, school, shopping. Available Immediately. Pl. Call: 416.439.4076 / 416.728.0807

---

**NEILSON & FINCH**
பகுதியில் அமைந்துள்ள வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. washroom. உணவு விரும்பினால் கொடுக்கப்படும். பெண்கள் விரும்பத்தக்கது. அத்துடன் ஒரு அறை கொண்டு BSMT வாடகை உண்டு. Sep. Entrance. Close to bus, mall, school, etc. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.298.9913

---

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything. Call: 416.335.8055/905.294.2674

# HOUSE FOR RENT

**BELLAMY & ELLESMERE**
3 bedroom for rent - main floor. Parking, washer, dryer. Avail. December 01, 07. Close to School,ttc, subway, scarborough centre, stores.... தொடர்புகளுக்கு: 416.289.6076

---

**KENNEDY & DANFORTH**
3 Bedroom house for rent. Parking, washer, dryer. Avail. November 01, 07. Also 2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to bus, subway, stores, Highland farm, etc. தொடர்புகளுக்கு: 416.717.8979

---

**MIDLAND & EGLINTON**
3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. ( Main floor). Parking, laundry. Close to schools, bus, stores, etc. Avail. immediately. Please Call: 416.226.1597

---

**MARKHAM & SHEPPARD**
3 bedroom house for rent. parking. Avail. November 01, 07. Close to bus, school, stores, Tamil stores... 905.841.9294 / 416.277.9044

---

**WESTON Rd. & SHEPPARD**
**3** bedroom house for rent - main floor. Parking. Avail. immediately. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். 416.561.3827 /416.666.3378

# JOB JOB JOB

***Kennedy & Eglinton*** பகுதியில் வசிக்கும் பெண்மணிக்கு மகப்பேற்றுப் பெண்மணிக்கு மகப்பேற்றுக்காலத்தில் பராமரிப்பதற்கு பெண்மணி தேவை. ***416.816.7381 / 416.261.4212***

---

BUSY THORNHILL RESTAURANT, DUFFERIN / 407, NEEDS PROFESSIONAL GRILL COOK, 2 YEARS EXPERIENCE AND ENGLISH SPEAKING

FULL TIME KITCHEN HELP, DISHWASHER / DRIVER, MUST HAVE CAR, ENGLISH SPEAKING CALL: ***647.829.4292 / 416.564.9994***

---

**DANFORTH & PHARMCY** பகுதியில் அமைந்துள்ள Pizza கடைக்கு வாகன சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வாகன ஓட்டுனர் தேவை. மேலதிக விவரங்களுக்கு 416.875.6869

# CLEANING

6:30Pm - 3:00am வரை Cleaning வேலை செய்வதற்கு ஆண் வேலையாட்கள் தேவை. Fulltime வேலைசெய்யக்கூடியவர் தேவை. ஸ்காபரோ பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. Cell: 416.882.5759

---

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கம் 20

# RENOVATION

- Painting
- Plumbing
- Electrical Repairs
- Bsmt Renovation

போன்ற திருத்த வேலைகள் செய்யவேண்டுமா



அழையுங்கள் : 416.567.2392

# RATNA STAIR FINISHING

புதிய வீடுகளிற்கான படிகளை (***Stairs***) புதுப்பொலிவுடன் அழகுபடுத்த எம்மை அழையுங்கள் - Cell: 647.686.2852 Home : 416.289.2852



# பிள்ளை பராமரிப்பாளர் தேவை

**MCCOWAN & FINCH** பகுதியில் திங்கள் முதல் வெள்ளி வரை சிறு பிள்ளையை பாடசாலைக்கு கூட்டிச்செல்ல, அழைத்து வர அல்லது அந்நேரத்தில் குழந்தையை வீட்டிலிருந்து பராமரிக்க 35 வயதிலிருந்து 55 வயதுக்கிடையான பெண்மணி ஒருவர் தேவை. விரும்பினால் வீட்டில் ஒரு அறையும் உணவும் குறைந்த வாடகையுடன் கொடுக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு : ***647.282.9671***

# BABYSITTER AVAILABLE

**MCCOWAN & DENISON** பகுதியில் 6 மாதத்திலிருந்து உங்கள் பிள்ளைகளை தங்கள் வீட்டிலிருந்து பராமரிக்க அனுபவம் வாய்ந்த இரண்டு பெண்மணிகள் உள்ளனர். திங்கள் முதல் வெள்ளிவரை காலை 7:00 மணியிலிருந்து மாலை 6:00 வரை பாராமரிக்கப்படும். தொடர்புகளுக்கு: ***905.604.0134 / 416.768.0131***

# STORE FOR SALE

**MARKHAM & EGLINTON**
Pizza store for sale. Private sale. Catering செய்யக்கூடிய வசதிகளும் உண்டு. தொடர்புகளுக்கு : 416.617.1829

# BUSINESS FOR SALE

**WARDEN & FINCH**
நல்லநிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் வியாபாரம் உடனடியாக விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்க்கப்படும். போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடம். மேலதிக தொடர்புகளுக்கு: 416.840.0624 / 647.435.7674

---

***TIP TOP BINDERY***

# General Labourer

**சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கும் பொருட்களை உற்பத்தி செய்யும் (Manufacturing) நிறுவனத்திற்கு எல்லா நேரத்திற்கும் (All Shifts) வேலை உள்ளது. ஆரம்ப சம்பளம் மணித்தியாலத்திற்கு $8.50. நேரடியா வரவும். *Monday to Friday, 9:30 am - 4:30 pm.***

***335 Passmore Avenue ( Markham Rd. & Steeles)***

# JOB JOB JOB

**SCARBOROUGH Malvern** பகுதியில் அமைந்துள்ள உணவகத்தில் Cashier, General helper, சமையல் வேலைகளுக்கு அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை. மேலதிக விவரங்களுக்கு 416.299.5083 / 416.283.5265

---

***AUTO MECHANIC WANTED***
வாகன திருத்த நிறுவனத்துக்கு Auto Mechanic ஆக பகுதி நேர வேலையாளர் தேவை. தொடர்புகளுக்கு: Ravi - 416.750.3700 / 416.882.5759

# HOUSE FOR SALE

யாழ்பாணம் இந்துக்கல்லூரிக்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் சிவகுருநாதர் வீதியில் எட்டுப்பரப்பு காணியுடன் நல்ல நிலையிலுள்ள சகல வசதிகளுடன் கூடிய நான்கு அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ***905.471.7773***

# SCRAP CARS WANTED

**Cash For Cars**
Dead or Alive. Fast Free Towing 7 days உங்களிடம் இருக்கும் பழைய பாவிக்க முடியாத வாகனங்களை எங்கள் செலவில் எடுத்துச்செல்வோம். அழையுங்கள் : 647.283.0629



---

# விளையாட்டு...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

**சைக்கிள் பஞ்சர் ஒட்ட வசதியில்லை - பிரவீண் குமார்**

திறமை இருந்தால் எந்த வீரரும் இந்திய அணியில் இடம்பெறலாம். இதற்கு நல்ல உதாரணம் பிரவீண் குமார் தான். பாகிஸ்தான் தொடருக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள புதுமுக வீரரான இவர் மத்தியதர குடும்பத்தில் பிறந்தவர். ஆரம்ப காலத்தில் சைக்கிளுக்கு பஞ்சர் ஒட்டக்கூட காசு இல்லாமல் தவித்து உள்ளார். தனது கடின உழைப்பால் தற்போது இந்திய அணியில் இடம் பிடித்துள்ளார்.

இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் வேகப்பந்துவீச்சாளர் பிரவீண் குமார் புதுமுகமாக வாய்ப்பு பெற்றார். 21வயதான இவர் பேட்டிங்கிலும் கெட்டிக்காரர். ஆரம்ப வீரராக களமிறங்கி அதிரடியாக ஆடும் ஆற்றல் படைத்தவர். முதல் தர போட்டிகளில் 90 விக்கெட் வீழ்த்தியுள்ள பிரவீண் குமார், சமீபத்திய சாலஞ்சர் தொடரிலும் அசத்தினார். இதையடுத்து இந்திய அணியில் வாய்ப்பு தேடி வந்துள்ளது.

பொலீசாகப் பணிபுரியும் இவரது தந்தையின் வருமானம் மகனின் பயிற்சிக்கு போதுமானதாக இல்லை. மிகவும் சிரமப்பட்டு பயிற்சியைமேற்கொண்டார். தனது வீட்டில் இருந்து பயிற்சி மைதானத்துக்கு சுமார் 15 கி.மீ தூரத்துக்கு சைக்கிளில் சென்றுள்ளார். இதுபற்றி பிரவீண் குமார் கூறுகையில், ‘சில நாட்களில் சைக்கிள் டயர் பஞ்சராகி விடும். அதை ரிப்பேர் செய்வதற்கு கூட கையில் காசு இருக்காது. உடனே யாரிடமாவது ‘லிப்ட்’, கேட்டு, பயிற்சிக்கு சரியான நேரத்தில் செல்வேன். தற்போது இந்திய அணியில் இடம்பெற்ற போதும், பழைய நாட்களை என்றும் மறக்கமாட்டேன். இந்த அனுபவங்கள் எனது வாழ்க்கையின் ஊக்கசக்தியாக அமையும். தற்போது சொந்தமாக ஒருபைக் வாங்கியுள்ளேன்,’ என்றார். பாகிஸ்தான் தொடரில் அசத்தும் பட்சத்தில் பிரவீண் குமாரும், மற்ற வீரர்களை போல கோடீஸ்வரர் பட்டியலில் சேர்ந்து விடலாம். முன்பு எல்லாம் இந்திய கிரிக்கெட்டில் மும்பை, டில்லி, கொல்கத்தா, சென்னை போன்ற மெட்ரோ நகரங்களில் இருந்து வீரர்கள் வந்தனர். இப்போது சிறிய நகரங்களில் இருந்து நட்சத்திர வீரர்கள் வருகின்றனர். உதாரணமாக பின்தங்கிய ஜார்க்கண்ட் மாநிலத்தில் இருந்து வந்த தோனி, அணித்தலைவர் அந்தஸ்துக்கு உயர்ந்துள்ளார்.

சச்சின், கங்குலி அணியில் உள்ளனர். தமிழக வீரரான தினேஷ் ரோகித்சர்மா கார்த்திக் நீக்கப்பட்டுள்ளனர். சேவாக், கவுத் காம்பிரும் இடம்பெற்றுள்ளனர். சுரேஷ் ரெய்னா, தமிழக வீரர் பத்திரிநாத்தும் வாய்ப்பும் பெற முடியவில்லை. சுழற்பந்து வீச்சில் முரளி கார்த்திக் வருகையால் ரமேஷ் பவார் நீக்கப்பட்டுள்ளார்.

# “ஹாலிவுட் தயாரிப்பாளர்கள் தமிழ் சினிமாவுக்கு வருகிறார்கள்!”

## நேர்காணல் : இயக்குனர் ஹரிஹரன்

தமிழ் திரைப்படத் துறையில் நல்ல சினிமாவுக்கான முயற்சிகளில் ஈடுபட்டவர்களில் முக்கியமானவர் இயக்குனர் ஹரிஹரன். ஹாலிவுட் (Hollywood) முதல் கோலிவுட் (Kollywood) வரை பணியாற்றிய அனுபவம் பெற்றுள்ளவர். இவர் இயக்கிய “ஏழாவது மனிதன்” தமிழ் திரைப்பட வரலாற்றில் ஒரு மைல் கல். திரைப்படங்களை இயக்கியதோடு மட்டுமல்லாமல், தமிழ் சிறுபத்திரிகை இயக்கத்தினருடன் இணைந்த சினிமா பற்றிய புரிதலை மேம்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டார். மூன்று ஆண்டுகள் வெளிவந்து நின்றுபோன, சினிமா பத்திரிகையான “சலனம்” குழுவில் முக்கிய இடம் பெற்றிருந்தார். உலக சினிமா இயக்குனர்கள், அவர்களது படங்களைப் பற்றி அதில் நிறைய எழுதினார். “பிரஞ்சு நியூ வேவ் மூவ்மெண்டு” பற்றி வே.ஸ்ரீராம், வெங்கடேஷ் சக்ரவர்த்தி ஆகியோருடன் இணைந்து புத்தகம் எழுதியுள்ளார். “சென்னை பிலிம் சொசைட்டியை உருவாக்கிய ஆரம்பகால ஆளுமைகளில் ஒருவர் ஹரிஹரன். சென்னை திரைப்படக் கல்லூரி பேராசிரியராக பணியாற்றிய ஹரிஹரன், இப்போது, “எல்.வி.பிரசாத் பிலிம் இன்ஸ்டிடியூட்டின் முதல்வராக உள்ளார்.

**சந்திப்பு - கிருஷ்ணன்**

கேள்வி: “தமிழ் சினிமா மோசமான நிலையில் இருப்பதற்கு என்ன காரணம்?”

ஹரிஹரன்: “நல்ல தமிழ் சினிமா குறித்து இன்னும் நம்பிக்கையுடன் இருக்கும் நபர்களில் நானும் ஒருவன். நாம் முற்றாக நம்பிக்கை இழக்கும் போது, சில நல்ல படங்கள் வெளியாகி நம்பிக்கையைத் தளிர்க்கச் செய்வது தொடர்ந்து நடந்துகொண்டேதான் இருக்கிறது. வியாபார ரீதியான சினிமாக்கள் என்பது எல்லா மொழிகளிலும் இருக்கும் ஒன்றுதான். வியாபார சினிமாக்களுக்குள் சில ஆரோக்கியமான முயற்சிகள், இடைநிலை சினிமாக்கள் போன்ற முயற்சிகளும் அங்கு இருக்கும். இது இல்லாமல் போனதுதான் நமது பெரிய இழப்பு.

பாலுமகேந்திரா, மகேந்திரன் போன்றவர்கள் இடைநிலை சினிமாவுக்கான நல்ல ஒரு அடித்தளத்தை உருவாக்கி இருந்தார்கள். “உதிரி பூக்கள்”, “அழியாத கோலங்கள்” போன்றவற்றின் வெற்றி ஆரோக்கியமான சினிமாவுக்கான நம்பிக்கையை தந்தன. ஆனால், அதன்பிறகு அந்த முயற்சி தொடரவில்லை. இதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று திரைப்படங்களின் தயாரிப்பு செலவு மிகவும் கூடிவிட்டது. பிரமாண்டங்களுக்கு முன்னால், குறைந்த பட்ஜெட் படங்களால் தாக்கு பிடிக்க முடியாமல் இருக்கிறது.”

கேள்வி: “தயாரிப்பு செலவு கூடியதற்கு என்ன காரணம்? நடிகர்களின் சம்பளமா அல்லது திறமையற்ற நிர்வாகமா?”

ஹரிஹரன்: “நடிகர்கள் சம்பளம் மட்டும்தான் தயாரிப்பு செலவு அதிகமாகக் காரணம் என்பது போன்ற ஒரு பிம்பம் இங்கு உருவாக்கப்பட்டுள்ளது. அதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். வெற்றி பெறும் நடிகருக்கு இவ்வளவு கொடுக்கலாம், அதைவிட அதிக லாபமடையலாம் என்று எண்ணி தயாரிப்பாளர்கள் தான் கொடுக்கிறார்கள். பந்தயத்தில் ஜெயிக்கும் குதிரை மீது பணம் கட்டும் சூதாட்டம் மாதிரியான விளையாட்டுதான் இது. எனவே, நடிகர்களுக்கும் அவர்கள் உச்சக்கட்ட புகழில் இருக்கும்போது சம்பாதித்தால்தான் உண்டு என்னும் நிலை.

இதற்கு மாறாக ஹாலிவுட்டில் இருக்கும் நடைமுறையை இங்கு பயன்படுத்திப் பார்க்கலாம். ஹாலிவுட்டில் ஷேர் (share) முறைதான் இருக்கிறது. படத்தின் நூறு ஷேர்களில் நடிகர்களுக்கு, இசையமைப்பாளர்களுக்கு, இயக்குனருக்கு என்று குறிப்பிட்ட அளவு ஷேர் முதலிலேயே தீர்மானிக்கப்படுகிறது. தயாரிப்பாளருக்கும் குறிப்பிட்ட அளவு ஷேர், அவ்வளவு தான். இதனால் படத்தின் இலாப, நஷ்டங்களில் எல்லாரும் பங்கெடுக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு ஆஸ்கர் விருது வழங்கும் விழாவில் கலந்கொள்ள சென்றிருந்தேன். “ஓ காட்” படத்தில் நடித்திருந்த நடிகர் கார்ல பர்ன்ஸ் (வந்திருந்தார். பார்த்த உடனே செல்வ செழிப்பானவர் என்று தெரிந்துவிட்டது. இத்தனைக்கும் இப்போது அவர் நடிப்பதில்லை. வேறு தொழிலும் கிடையாது. பிறகு வேறு எங்கிருந்து அவருக்கு வருமானம் வருகிறது என்று எனக்கு ஆச்சர்யம். விசாரித்த போது நாற்பது வருடங்களுக்கு முன்பு அவர் நடித்த படங்களிலிருந்து இப்போதும் அவருக்கு ராயல்டி வருகிறது என்று சொன்னார்கள். இப்படி எல்லாருக்கும் வருகிறது. இதனால் படத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் நம்முடைய படம் என்ற உணர்வோடு வேலை செய்கிறார்கள்.

ஆனால், இங்கு படத்தோட மொத்த லாபத்தையும் தயாரிப்பாளர்தான் எடுத்துக் கொள்கிறார் என்றால், நஷ்டத்தையும் அவர்தானே ஏற்றுக் கொள்ள வேண்டும்?”

கேள்வி: “ஹாலிவுட்டில் முதலில் திரைக்கதையை பக்காவாக தயாரித்விட்டு, பிறகு படத்தைத் தொடங்கி திட்டமிட்டபடி முடிக்கிறார்கள். ஆனால், தமிழ் இயக்குனர்கள் திரைக்கதையை தயாரிக்காமல், படப்பிடிப்பு தளத்தில் முடிவு செய்கிறார்கள்” என எழுத்தாளர் சுஜாதா எழுதியுள்ளாரே?

ஹரிஹரன்: “நீங்கள் சொல்வது போல் திரைக்கதையை தயாரித்துவிட்டு, அதன்படி திட்டமிட்டு படம் எடுப்பது ஒருமுறை. தமிழில் அதைப் பின்பற்றுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். படத்துக்கு பூஜை போடுவது முதல் எந்தெந்த தியேட்டரில் ரிலீஸ் செய்வது என்பது வரை, தொடக்கத்திலிருந்து கடைசி வரை சரியான திட்டமிடல் அவர்களிடம் இருக்கும். எந்த திட்டமிடுதலும் இல்லாமல் தாறுமாறாக, கன்னாபின்னாவென்று அவ்வப்போது தோன்றும்படி காட்சிகளை எடுத்து, கடைசியில் வெட்டி ஒட்டுவது இன்னொரு முறை. இந்த இரண்டாவது முறையத் தான் பெரும்பாலும் தமிழில் பின்பற்றுகிறார்கள். இதனால் பட்ஜெட்டைவிட அதிகமாக செலவாகிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.

சரி, பக்காவான ஒரு ஸ்கிரிப்ட்டை ரெடி பண்ணிவிட்டு அதன்படி படமெடுக்கலாம் என்றாலும் இங்கு அது சாத்தியமில்லை. உண்மையில் இங்கு தயாரிப்பாளர் என்பவர் தயாரிப்பாளர் கிடையாது. பைனான்சியர்தான். அதாவது... பணம் தருபவர். அவருக்குப் படம் பற்றிச் சரியான பார்வை கிடயாது. எனவே, ஆர்ட்டிஸ்டை புக் பண்ணுவதிலிருந்து சகலத்தையும் இயக்குனரே பார்த்துக் கொள்ள வேண்டும். நூற்றைம்பது பக்க ஸ்கிரிப்டை கொடுத்தால் முக்கால்வாசி தயாரிப்பாளர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியாது. எனவேதான் திரைக்கதையை தயார் செய்து கொடுப்பதற்குப் பதிலாக கதை சொல்வது என்ற பழக்கம் இங்கு இருக்கிறது. இதனால் சிறந்த இயக்குனர்கள், சிறந்த திரைக்கதை ஆசிரியர்களைவிட சிறந்த கதை சொல்லிகள்தான் சினிமாவுக்குள்ளேயே நுழையமுடியும் என்னும் நிலை. எவ்வளவுக்கு எவ்வளவு உணர்ச்சிகரமாக கதை சொல்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு நீங்கள் சிறந்த இயக்குனர்!

உலகம் முழுவதும் ஸ்கிரிப்டை தயாரிப்பதற்குத்தான் நிறைய காலம் எடுத்துக் கொள்வார்கள். ஸ்கிரிப்ட் தயாரானதும் ஒரே ஷெட்யூலில் படத்தை ஷூட் பண்ணிவிட்டு வந்து விடுவார்கள். இதற்கு தயாரிப்பாளர்களிடம் பணம் தயாராக இருக்க வேண்டும். ஆனால், நம்மூர் தயாரிப்பாளர்களிடம் காசில்லை. அங்கே, இங்கே என்று கொஞ்சமாகப் பணத்தைத் திரட்டி ஐந்து அல்லது ஆறு ஷெட்யூலில் படமெடுப்பதுதான் இங்கு நடக்கிறது. இப்படிச் சிரமப்பட்டு ஒரு படம் வருவதற்குள் டிரண்ட் மாறிவிடுகிறது. அல்லது அதே கதையில் இன்னொரு படம் முந்திக் கொண்டு ரிலீஸ் ஆகிவிடுகிறது. இதனால் திரும்பத் திரும்ப கதையை மாற்றி ஷூட் பண்ணுகிறார்கள். ஏற்கனவே எடுத்ததில் பெரும்பகுதி வேஸ்ட்.”

கேள்வி: “இதற்கு மாற்று என்ன?”

ஹரிஹரன்: “ஒரே வழி... சினிமா ஒரு புரொபஷனலான தொழிலாக மாறவேண்டும். அப்படியானால் டாட்டா, பிர்லா, அம்பானி போன்ற பெரிய நிறுவனங்கள் உள்ளே வர வாய்ப்பு உள்ளது. சென்னை அபிராமி தியேட்டர் ராமனாதன் இந்த வகையில் சில முயற்சிகளைச் செய்து வருகிறார். இது நல்ல முயற்சி, அதற்கு இப்போது பலனும் கிடைத்திருக்கிறது. மிகப்பெரிய நிறுவனங்கள் சினிமா தயாரிப்பில் ஈடுபடும் முயற்சியில் இருக்கிறார்கள். அம்பானியும் டாட்டாவும் உள்ளே வந்தால் அதிகாரம் போய்விடும் என்று இங்குள்ள தயாரிப்பாளர்கள் பயப்படுகிறார்கள். இது தேவையில்லாத பயம்.



அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது இதைத்தான்.

ஒரு டயலாக் சீனைக்கூட ஆறு கேமாராக்கள் வைத்து எடுப்பார்கள். இந்தியா முழுவம் 4,500 கோடி ரூபாய் சினிமாத் துறையில் புழங்குகிறது. ஆனால், டைட்டானிக் படத்தின் தயாரிப்பு செலவே 2,500 கோடி ரூபாய். இரண்டு டைட்டானிக் படங்கள் தான் மொத்த இந்திய சினிமா இண்டஸ்ட்ரியும். ஆனால், ஹாலிவுட்காரர்கள் கடைசியில் லாபம் வர வாய்ப்பில்லை என்று தெரிந்ததும் திரும்பிப் போய்விடுவார்கள். அதற்குள் இங்கு சகலமும் நாசமாகியிருக்கும்.”




அபிநய சேஷ்திர

நடனவகுப்புகள்

NEILSON & SHEPPARD / FINCH

அடையாறு தனஞ்சயன் அவர்களின் பரதக்கலாஞ்சலியில் நடனம் பயின்ற திருமதி ஜானகி சுரேசன் அவர்களின் நடன வகுப்புகள் நடைபெறுகின்றன. சகல தரத்திலுள்ள மாணவர்களுக்கும் பரத நாட்டியம் நட்டுவாங்கம் போன்றன கற்பிக்கப்படும்.

அழையுங்கள் : 416.617.1829

APARTMENTS FOR RENT

ONE MONTH FREE RENT



In a NEWLY Renovated High-Rise Apartment Building

Clean, Utilities inclu. Free parking.

Close to TTC, Tamil store in building, schools nearby

Pl. Call: 416.264.2818

# இரட்டை வேடத்தில் விஜய்!



தீபாவளிக்கு வருமா, வராதா எனக் கேள்வியாக இருந்த, விஜய்யின் "அழகிய தமிழ் மகன்" தீபாவளிக்கு முன்பே வெளியாகிறது. முதன் முறையாக, இப்படத்தில் விஜய் இரண்டு வேடங்களில் நடிக்கிறார். இரு பெரும் நாயகி-களான நமீதாவும் ஸ்ரேயாவும் விஜய்க்கு ஜோடியாக நடிக்கிறார்கள். படத்திற்கு இன்னொரு பலம் ஏ. ஆர். ரஹ்மான். பாடல்கள் ஏற்கெனவே வெளியாகிவிட்டன. விஜய் ரசிகர்களின் சுவை அறிந்து, அவர்களுக்குத் தக்கபடி பாட்டுக்களைக் கொடுத்துள்ளார் ரஹ்மான். தற்போது பின்னணி இசை சேர்ப்பில் ரஹ்மான் இருக்கிறாராம். நவம்பர் 8ம் திகதி தீபாவளி. "அழகிய தமிழ் மகன்" நவம்பர் 7ம் திகதியே திரைக்கு வருகிறதாம். ஏன் ஒரு நாள் முன்பே வெளியிடுகிறார்கள்? எல்லாம் ஜோசியம்தான் காரணம். தனது ஆஸ்தான கேரள ஜோதிடரைக் கேட்டுத்தான் படம் வெளியாகும்

**பிலிம்நியூஸ் கிருஷ்ணன்**

திகதியை தயாரிப்பாளர் அப்பச்சன் முடிவு செய்தாராம். உலகம் முழுவம் 410 பிரதிகளுடன் "அழகிய தமிழ் மகன்" வெளியாகிறது. தமிழகத்திற்கு மட்டும் 300 பிரதிகள் போட்டுள்ளனராம். படத்தை தமிழகத்தில் முழுவம் பிரமீட் சாய்மீரா நிறுவனம் வெளியிடுகிறது. தீபாவளிக் களத்தில் "அழகிய தமிழ் மக"னுடன் போட்டி போடும் எனக் கருதப்பட்ட அஜித்தின் "பில்லா" வும் விக்ரமின் "பீமா"வும் தீபாவளிக்கு வெளியாவது சந்தேகம்தான்.

# கஞைர் தொலைக்காட்சியின் புதிய அவதாரம்!

கலைஞர் தொலைக்காட்சி குழுமத்திலிருந்து மேலும் இரண்டு புதிய சானல்கள் வெளியாகவுள்ளன. "சன் டிவி" க்குப் போட்டியாக, கலைஞர் குடும்பத்தினர் ஆரம்பித்த புதிய தொலைக்காட்சியான "கலைஞர் டிவி." க்கு "சன் டிவி" க்கு நிகரான நல்ல வரவேற்பு கிடத்தது. இந்த வரவேற்பில் சந்தோஷம் அடைந்த "கலைஞர் டிவி" வட்டாரம், இப்போது ஆட்சி கட்டிலில் இருக்கும் போதே மேலும் இரண்டு புதிய தொலைக்காட்சிகளைத் தொடங்கி அவற்றையும் வளர்க்க திட்டமிட்டுள்ளனராம். இந்த புதிய இரண்டு தொலைக்காட்சிகளும் விரைவில் வரவுள்ளன. ஒன்று, இசைக்காக. அதற்கு "இசையருவி" எனப் பெயரும் சூட்டப்பட்டது. இன்னொன்று "கலைஞர் செய்தி". இசையருவி, நவம்பர் இரண்டாவது வாரத்திலும், செய்தி தொலைக்காட்சி டிசம்பர் அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்திலும் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து "கலைஞர் டிவி"யின் இயக்குனர் சரத்குமார் கூறுகையில், "இசையருவி சானலில் 24 மணி நேரமும் பாடல்கள் ஒளிபரப்பாகும். இதில் புதிய பாடல்கள் மட்டுமல்லாது நெஞ்சில் நீங்கா இடம் பிடித்திருக்கும் பழைய பாடல்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும். செய்தி சானலில் பல திறமசாலிகள் இடம்பெற்றுள்ளனர். நேரடி ஒளிபரப்புடன் செய்திகள் வழங்கப்படும். அரசியல் பிரமுகர்களின் பேட்டிகளும் இடம் பெறும்" என்றார்.

# கலைஞரின் 'தாய்' வேடத்தில் குஷ்பு!

பாடலாசிரியர் விஜய் நடிக்கும் கலைஞரின் தாய் காவியத்தில் தாய் பாத்திரத்தில் குஷ்பு நடிக்கிறார். முதலில் இந்தப் பாத்திரத்தில் நடிப்பதாக இருந்த ராதிகா மாற்றப்பட்டு குஷ்பு சேர்க்கப்பட்டிருள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ரஷ்ய எழுத்தாளர் மாக்ஸிம் கார்க்கி நூறாண்டுகளுக்கு முன்பு எழுதிய பிரபல நாவல் தாய். இந்த நாவலை கலஞர் கருணாநிதி, தாய் காவியம் என்ற பெயரில் தமிழ் நடைக்கு மாற்றி எழுதினார். கருணாநிதியின் கதை, வசனத்திலேயே இது தற்போது திரைப்படமாகிறது.

பா.விஜய்க்கு நாயகிகளாக கீர்த்தி சாவ்லா, அக்சயா நடிக்கவுள்ளனர். பாலி ஸ்ரீரங்கம் படத்தை இயக்குகிறார். கலைஞர் பரிந்துரையின் காரணமாக ராதிகா நடிப்பார் என அறிவிக்கப்பட்டது. ஆனால், ராதிகா சில காரணங்களுக்காக இப்படத்திலிருந்து விலகியுள்ளாராம். இப்படத்தின் தொடக்க விழா சென்னை ஏவி.எம். ராஜேஸ்வரி திரையரங்கில் நடந்தது. முதல்வர் கருணாநிதி கலந்து கொண்டு படத்தைத் தொடங்கி வைத்தார். கருணாநிதி பேசுகையில், "தாய் காவியம் மூலம் கவிஞர் பா.விஜய் கதாநாயகனாக அறிமுகமாகிறார். எதிர்காலத்தில் தமிழ் சினிமா கதாநாயகர்களில் மிகச் சிறந்த இடத்தை அவர் பிடிப்பார். தற்போதைய கால கட்டத்திற்கு மிகவும் பொருத்தமான கதைதான் இது. நாயகன் பாவல் வேடத்தில் பா. விஜய் சிறப்பாக நடிப்பார் என்ற நம்பிக்கை எனக்கு உளளது. பாவலின் தாயார் வேடத்தில் குஷ்பு நடிக்கிறார். பெரியார் படத்தில் அவர் மணியம்மையாக நடித்ததைப் பார்த்தபோதே அவரது திறமையை நான் புரிந்து கொண்டேன். இந்தப் படத்திலும் அவர் சிறப்பாக நடிப்பார் என்று நம்புகிறேன். அந்தக் காலத்தில் நான் கதை வசனம் எழுதிய படங்களில் எல்லாம் எனது புரட்சிகரமான வசனங்களை எடிட் செய்யாமல் சென்சார் போர்டு சான்றிதழ் வழங்கியதே இல்லை. ஆனால், இப்போது சென்சார் போர்டு அதிகாரிகள் அதுபோல நடந்து கொள்வதில்லை" என்றார். தஞ்சையைச் சேர்ந்த ஒரு நகைக் கடை உரிமையாளர் ரூ. 50 லட்சத்திற்கான காசோலையைக் கொடுத்து தன்னையும் இப்படத்தின் இணைத் தயாரிப்பாளர்களில் ஒருவராக சேர்த்துக் கொள்ளவேண்டும் என மேடையிலேயே கோரிக்கை வைத்தார்.

# வீரப்பன் தொலைக்காட்சி தொடருக்கு தடை!

சந்தனக் கடத்தல் வீரப்பனின் வாழ்க்கை வரலாறு தொலைக்காட்சி தொடருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வீரப்பனின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் "சந்தனக்காடு" தொலைக்காட்சி தொடர், மக்கள் தொலைக் காட்சியில் வருகிற 26ம் தேதி முதல் ஒளிபரப்பாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்தத் தொடர் ஒளிபரப்பானால் எனது இரு மகள்களின் எதிர்காலமும் பாதிக்கப்படும், குறிப்பாக அவர்களின் படிப்பு பாதிக்கப்படும் என்று கூறி வந்தார் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி. இந்தத் தொடருக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி, முத்துலட்சுமி சார்பில் சென்னை நகர கூடுதல் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொ-டரப்பட்டது. தொடரின் இயக்குனர் கௌதமன், "எனக்குத் தெரியாமலேயே என் கணவர் குறித்துக் கூறிய தகவல்களை டேப் செய் விட்டார்" என்றும் அதில் குற்றம் சாட்டியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சடையாண்டி, இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார். முத்துலட்சுமி தொடர்ந்த வழக்கில் "சந்தனக்காடு" தொடருக்கு 8வது கூடுதல் சிட்டி சிவில் நீதிமன்றம் ஏற்கெனவே தடை விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த இடைக்காலத் தடை, கடந்த செப்டம்பர் 17ம் தேதி விலக்கிக் கொள்ளப்பட்டது. இப்போ, "இந்தத் தொடரால் என இரு மகள்களின் படிப்பும், அவர்களது எதிர்கால வாழ்க்கையும் கேள்விக்குறியாகி விடும். அவர்களது திருமணமும் பாதிக்கப்படும். எனது கணவர் குறித்த எந்தத் தகவலையும் எனது அனுமதி இல்லாமல் யாரும் வெளியிட முடியாது. எனவே, தொடருக்கு விதிக்கப்பட்ட தடைய நீக்கியதற்கு தடை விதிக்க வேண்டும்" என்று என்று கோரியிருந்தார் முத்துலட்சுமி. இந்த இரண்டாவது வழக்கின் தீர்ப்புதான் இப்போது வெளியாகியுள்ள.




## வாடகை வீட்டை சொந்த வீடாக மாற்றுவது எப்படி?

- வந்த நாளிலிருந்தே வாடகைக்கே பல ஆயிரம் டொலர்கள் கொடுத்து வாழ்ந்து விட்டீர்களா?
- நீங்கள் கட்டும் வாடகைப்பணத்திலே தான் வீட்டுச் சொந்தக்காரன் தனது Mortgage ஐக் கட்டி அந்த வீட்டை தனக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறான் என்பதை அறிவீர்களா?
- அந்த வாடகைப் பணத்திலேயே ஏன் நீங்கள் ஒரு சொந்த வீட்டை அமைக்கக்கூடாது?
- நீங்களும் எப்படி ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரனாக ஆகலாம் என்பதற்கான பல வழிமுறைகளை விளக்கி இத்துறையில் பல ஆண்டுகால அனுபவமுள்ளவர்களினால் தயாரிக்கப்பட்ட ஒரு விசேட அறிக்கை எம்மிடம் உளளது.
- இந்த அறிக்கையை இலவசமாகப் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம். **416-284-9999** Ext 20 (தமிழ்) Ext 33 (English)

## ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது

**Cottages / Homes**



**for Investment**
**On leslie Road -**
Lake Simcoe
From $175,000

**BANQUET HALL**
5 Split party hall
27,000 sqft.
975 seats-at HWY 400
80 parking
3 split 500/300/200

ஏக்கர் நிலம் வருமானத்துடன்
Beach, Cottage

வீடும் வியாபாரமும் *Business Zoning*

**Future long term Investment**

Metal Recycling
**Auto Body Shop**
Yunk Yard 2 Acres land with
**House and Basesemt**

**Brand new homes**
For builders price

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு
வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666
HOMELIFE HIGHER STANDARDS

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

# எனது குற்றங்குறைகளை நான் தான் குணப்படுத்த வேண்டும்

வாழ்வில் நான் சாதிக்க முடியாமற் போனவை, வேறு விதங்களில் நான் முன்னேறுவதை தடுக்க முடியாது. எம் குறைநிறைகளெல்லாம் எமக்கு நன்கு தெரியும். பிறர் எம்மைச் சிலாகித்துப் பேசும் போதும் வேறு சில சமயங்களிலும் நாம் எம்மைத் தாழ்த்தியே பேசுவதுண்டு. இதை மறக்கமாலிருக்க, அடிக்கடி நாமே இதை எமக்கு ஞாபகப்படுத்திக் கொள்வோம். வாழ்வில் நாம் தவறு செய்து தடுமாறித் தத்தளித்த சமயங்கள் யாவும் எமக்கு நன்கு மனப்பாடம்! இதைச் சொல்லி விட்டோமே! அதைச் செய்து விட்டோமே என சதா அங்கலாய்ப்பது எமது வழக்கம். எமது சிந்தனையில் எம்மைத் தாழ்த்தித் தாழ்த்தியே பழக்கமாகிய மனநோக்கினால் எமது சக்தி பூரணமாக வெளிவருவதை நாமே மழுங்கடிக்கிறோம்.

வாழ்வில் நாம் ஏன் சில இடங்களிற்கும் போகாமல் விடுகிறோம், ஏன் சிலவற்றைச் செய்யாமல் இருக்கிறோம் என்பது எமக்கு நன்கு தெரியும். எமக்கு தெரியாதவற்றை, புரியாதவற்றை ஏன் நாம் படிக்காமல் இருக்கிறோம் என்பது எமக்குத் தெரியும். நாம் எப்படி பிரச்சனைக்குள்ளாகிறோம் என்பதும் எமக்குத் தெரியும். யார் மனதை, என்ன செய்ததால், எவ்வாறு புண்படுத்தினோம் என்பதும் தெரியும். எம்மில் என்ன குற்றங்குறைகள் உள்ளது என்பது எமக்கு நன்கு தெரிந்தபடியால், சிலவேளைகளில் எம்மிலுள்ள நற்குணங்களை அடையாளங்கண்டு வெளிக் கொணர்வதைத் தவற விட்டு விடுகிறோம். எமது கௌரவத்தையும், நம்பகத்தன்மையும் மற்றவருக்கு முன் நாம் நிலைநாட்டுவது குறைவுதான். எமது காயங்களை, எமது குற்றங்குறைகளை, எமது அன்பினாலும் அங்கீகரிப்பினாலும் நாமே முன்வந்து குணப்படுத்தாவிடில் சுயதாக்குதல், சுயகுற்ற உணர்வு, சுயநிபந்தனை எனும் விஷச்சுழற்சியில் அகப்பட்டு விடுவோம். ஆகவே அதைத்தவிர்த்து உனது குற்றங்குறைகளின் கீழ் உனது திறன்களை நற்குணங்களை அடையாளங்கண்டு கொள்.

உனது குற்றங்குறைகளையும், நீ செய்யாதவற்றையும் எண்ணி இன்றுவரை நீ மாய்ந்திருக்கலாம்.




## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 112


மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



**லலிதா புரூடி**


உனக்கு அத்தியாவசியமான அன்பையும் அங்கீகரிப்பையும் நீயே உனக்கு கொடுத்து, நீ செய்த தவறுகள், உனது குற்றங்குறைகளை மறந்து முன்னேறு.

என்னிடமுள்ள எனக்குப் பிடிக்காத விடயங்களைக் கைவிட்டு என் அன்பினாலும் அங்கீகரிப்பினாலும் என்னைக் குணப்படுத்தும் முயற்சியில் இன்று முதல் மும்முரமாக ஈடுபடுகிறேன்.


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் **ரவி நடராஜா**

*தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.*

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் **Accident & Traffic Ticket**

(18 Years Insurance Claims Experience)

416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON



**COMPUTER REPAIRS & UPGRADES**



• Virus Removal, Internet Sharing Computer Tune Up மற்றும் அனைத்து Computer திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வைத்தோ அல்லது எடுத்துச் சென்றோ திருத்தித் தரப்படும்.
• உங்கள் வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப Computer Assembling செய்து கொள்வதற்கும் உதிரிப்பாகங்களை நியாய விலையில் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள் - **RAJ Paramasamy**

A+ Certified PC Technician, Microsoft Certified Professional

தொலைபேசி எண் - **416.587.1619 / 416.283.1643**

**Free Estimate**






**AIR LINK TRAVEL LTD.**

5200 FINCH AVE. E., #115, SCARBOROUGH, ON., FINCH & MIDDLEFIELD

TEL: 416.292.6200 FAX: 416.292.7478





Anton Jeeva, P.Eng.
"Princely"
Salesperson

**வீடு வாங்க விற்க**

மற்றும் சகல விதமான மோடகேஜ் தேவைகளுக்கும் என்னை அழையுங்கள்

**$268,000 For Sale**



Sheppard & Neilson
Detached Bedrooms: 4+1
2-Storey Washrooms: 3
Totally Renovated Home In A Childsafe Area.
Newer Basement.
New Laminate Floor In The Bas.

**$327,900 For Sale**



16th Av/9th Line
Semi-Detached Bedrooms: 3
2-Storey Washrooms: 3
Brand New Semi With $$$$ In Upgrades! Bright Spacious & Public Transport. Future Mall Close To Parks, Schools,Hospital Etc. Upgraded Home With Exp. Appliances.

**$29,900 For Sale**




2634 Danforth Ave.
Toronto, Ontario
Smokegarden
And Dollar Convenience

**Direct - 416.575.5055**

RE/MAX

RE/MAX VISION REALTY INC.,
BROKERAGE
416-321-2228

*Specialized in Power of Sale Homes*



**கடன் சுமையா?**

**உங்கள் சகலவிதமான நிதித்தேவைகளுக்கும் நம்பிக்கையானவர்கள்!**
**வங்கிகளில் கடன்சுமை அதிகமாக இருப்பினும் எம்மால் உங்களுக்கு உதவிட முடியும்.**

தொடர்புகளுக்கு:
**நடா மணிவண்ணன் - 647.831.7478**





**ELECTRICAL WORKS**



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
நியாயமான கட்டணம். தரமான சேவை.
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - **416-286-2880**



www.reginospizza.com

REGINOS PIZZA™



416.321.6666

**Finch & Pharmacy**
2535 Pharmacy Ave.,
Scarborough
416.495.1222

**Brimley & Finch**
135 Montezuma Trail,
Scarborough
416.321.5444

**Danforth & Pharmacy**
3331 Danforth Ave.,
Toronto
416.694.0888

**Hurontario & Dundas**
2555 Hurontario St.,
Mississauga
905.804.0666

**Morningside & 401**
790 Military Trail
Scarborough
416.284.3003

**Yonge & Clark**
126 Clark Ave. E. Thornhill
Thornhill
905.709.8004

**Hwy 48 & 16th**
10 Fincham Ave., # 104
Markham
905.472.6002

**Aurora**
14810 Yonge St,Unit 7
Aurora
905.841.7002